
விடையவன் விடைகள்

முதல் பகுதி



கி.வா.ஜகந்நாதன்

அமுத நிலையம்

விடையவன் விடைகள்

—:O:—

கி. வா. ஜகந்நாதன்

—:O:—

அமுத நிலையம் லிமிடெட்
இராயப்பேட்டை, : : சென்னை-14.

அமுதம்—244
உரிமை பதிவு
முதற் பதிப்பு—நவம்பர், 1972
இரண்டாம் பதிப்பு—ஆகஸ்டு, 1976

விலை ரூ. 5-00

வீப்ளிக் பிரிண்டர்ஸ், சென்னை - 14.

முன்னுரை

"ஐயா இருக்கிறார்களா?"

"நான்தான் பேசுகிறேன்."

"மன்னிக்க வேண்டும். ஒரு சின்னச் சந்தேகம். நானும் என் நண்பர்களும் அதுபற்றி விவாதித்துக் கொண்டிருக்கிறோம். கடைசியில் உங்களைக் கேட்டால் தெரியுமென்று எண்ணினோம். அதனால் போன் பண்ணுகிறேன். தொந்தரவு கொடுப்பதற்கு மன்னிக்க வேண்டும்."

"சந்தேகம் என்ன? சொல்லுங்கள்."

"முருகனுக்கு எந்தப் பக்கத்தில் வள்ளியம்மை நிற்கிறாள்?"

"வலப் பக்கத்தில். நீங்கள் எங்கிருந்து பேசுகிறீர்கள்?"

"....அலுவலகம்."

இப்படி ஒரு டெலிபோன் உரையாடல்.

"ஐயாவா?"

"ஆம்!"

"ஒன்றும் இல்லை; கடன் கொண்டார் நெஞ்சம் போலும் கலங்கினான் இலங்கை வேந்தன் என்ற பாட்டுக் கம்பராமாயணத்தில் எங்கே வருகிறது என்று தெரியவில்லை. அதைக் கேட்கத்தான் கூப்பிட்டேன். பலபேர் இப்படிச் சொன்னார் கம்பர் என்று சொற்பொழிவினிடையே சொல்கிறார்கள். ஆனால் அந்தப் பாட்டைத் தேடித் தேடிப் பார்க்கிறேன்; இருக்குமிடம் தெரியவில்லை."

"அது கம்பர் பாட்டு அல்ல; ஒரு தனிப்பாடல்."

"அப்படியா? பலபேர் அதைக் கம்ப ராமாயணப் பாடல் என்று பேசியிருக்கிறார்களே!"

"எத்தனை பேர் சொன்னால் என்ன? உண்மை மாறுபடாதே!"

ஒரு தமிழ்ப் பேராசிரியர் கேட்கிறார் :

"அடிக்கடி 'உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டே' என்று சொல்கிறோம்; அது எந்த நூலில் இருக்கிறதென்று தெரியவில்லை. உங்களுக்குத் தெரியுமா?"

"சேந்தன் திவாகரத்தில் வருகிறது."

இப்படி அடிக்கடி அலுவலகத்தில் இருப்பவர்களும், இலக்கிய மன்றங்களில் உள்ளவர்களும், மாணாக்கர்களும், சினிமாத்துறையில் உள்ளவர்களும் டெலிபோனிலும் நேரிலும் கடிதமூலமாகவும் பல ஐயங்களை என்னிடம் கேட்பதுண்டு. நான் என்ன முற்றறிவுடையவனா? எனக்குத் தெரிந்தவற்றை விளக்குவேன். இப்படி அடிக்கடி கேள்விகள் வருவதனால், கலைமகளில் ஒரு கேள்வி பதில் பகுதி ஆரம்பிக்கலாம் என்று தோன்றியது. பெரும்பாலும் சினிமாத்துறை சம்பந்தமான கேள்வி பதில்களே பத்திரிகைகளில் வருகின்றன. இலக்கியம், சமயம் சம்பந்தமான கேள்விகளுக்குப் பதில் அளிக்கலாம் என்று தீர்மானித்து, 'இது பதில்' என்ற பகுதியை ஆரம்பித்தேன். 'விடையவன்' என்ற புனைபெயரில் கேள்விகளுக்கு விடை அளித்து வந்தேன். சில மாதங்கள் அந்தப் பகுதியை வெளியிடாமல் நிறுத்தினேன். பலர் ஏன் நிறுத்திவிட்டீர்கள் என்று கேட்டார்கள். மறுபடியும் 'இதோ விடை' என்ற தலைப்பில் அந்தப் பகுதியைத் தொடங்கிச் சில காலம் வெளியிட்டு வந்தேன்.

அந்தப் பகுதியில் வெளியான விடைகள் பல காலமாக உள்ள ஐயங்களைப் போக்குகின்றன என்றும், அவற்றைத் தொகுத்து வெளியிட்டால் பலருக்கும் பயனுண்டாகும்

என்றும் பல அன்பர்கள் சொன்னார்கள்; எழுதினார்கள். அதனால் அவற்றைத் தொகுத்தேன். செய்தியளவில் உள்ள சிலவற்றை விலக்கிவிட்டு மற்றவற்றை இப்போது வெளி யிடுகிறேன்.

நான் எழுதிய விடைகள் யாவும் இத் தொகுதியில் சேர வில்லை. கேள்வி கேட்பவர்களுடைய பெயரைக் கலைமகளில் வெளியிட்டு வந்தேன். இப்போது அவற்றை வெளியிட வில்லை. ஆனாலும் வினா எழுப்பியவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அவர்கள் கேட்டதனால்தான் இந்த விடைகள் உருவாயின.

சிலர் கேட்ட கேள்விகள் என் சிந்தனையைத் தூண்டி விட்டன. "சரணகமலாலயத்தில் அரை நிமிட நேரமட்டில்" என்று அருணகிரியார் பாடிய திருப்புகழில் வருகிறது. "நிமி டம் என்று பாடியிருக்கிறாரே; அவர் காலத்தில் நிமிஷம், மணி என்ற காலக்கணக்கு வந்துவிட்டதா?" என்று ஓர் அன்பர் கேட்டார். அதுவரையில் அதைப் பற்றிய சிந்தனையே எனக்கு இல்லை. மற்றவர்களுக்கும் அப்படித் தான் என்று நினைக்கிறேன். அவருடைய கேள்வியைக் கண்ட பிறகே அதைப் பற்றி ஆராயத் தலைப்பட்டேன். ஒரு மாத் திரைப் போதையே நிமிஷம் என்று அவர் சொல்கிறார் என்று விளங்கியது. அதை விடையில் விளக்கினேன்.

சில கேள்விகளுக்கு உரிய நூல்களைப் புரட்டிப் பார்த்துத் தெரிந்து விடை எழுதவேண்டியிருந்தது. அறுபத்து நான்கு கலைகள் எவை என்று கேட்பதும், ஏழு கிழமைகள் எவை என்று கேட்பதும் ஒன்றாகுமா? முன் கேள்விக்கு நூல்களைப் பார்த்துத் தெரிந்து விடை எழுதினேன்.

சில தமிழ்ப் புலவர்கள் பா வடிவத்தில் தம்முடைய வினாக்களை எழுப்பினர். அவற்றிற்கு நானும் பாவாலே விடை இறுத்தேன்.

பொருள் விளங்காத சில செய்யுட்களுக்கு விளக்கம் இந்த விடைகளில் இருக்கும். பலர் பலபல பாடல்களை எழுதி

உரை தரச் சொன்னார்கள். அவற்றிற்கு உரை எழுதப் புகுந்தால் விரியும். யமக அந்தாதியிலிருந்து பாடல்களை எழுதி உரை எழுதச் சொன்னால் இந்தச் சிறிய பகுதியிலே எழுத முடியுமா? எழுதினால் வேறு பயனுள்ள கேள்விகளுக்குப் பதில் எழுத இடம் இருக்குமா? ஆகையால் அத்தகைய கேள்விகளைக் கேட்க வேண்டாமென்று அன்பர்களுக்குத் தெரிவித்தேன்.

இந்தத் தொகுதியில் இலக்கண இலக்கியம், சமயம், பல்வகை என்று மூன்று பிரிவாகப் பிரித்து வினாக்களையும் விடைகளையும் வெளியிட்டிருக்கிறேன். ஐந்து இலக்கணம் சம்பந்தமான விடைகள், பழமொழி விளக்கங்கள், சொல்லின் பொருள், புலவர்களையும் நூல்களையும் பற்றிய செய்திகள் முதலியவை இலக்கண இலக்கியப் பகுதியில் உள்ளன. பொதுவாகச் சைவம், வைணவம் பற்றிய விடைகளும், சமய நூல்களைப் பற்றிய விடைகளும், பிறவும் சமயம் என்ற பகுதியில் இடம் பெற்றுள்ளன. பல்வகை என்பதில் பிற விடைகள் இருக்கின்றன.

அன்பர்கள் இந்தத் தொகுதி பயனுள்ளது என்று கருதி ஆதரவு தருவார்களாயின், மேலும் இத்தகைய தொகுதிகளை வெளியிடலாம் என்று எண்ணுகிறேன்.

'காந்தமலை'
சென்னை-28.

கி. வா. ஜகந்நாதன்
28—11—72

விடையவன் விடைகள்

விடையவன் விடைகள்

இலக்கண இலக்கியம்

1. 'அரிமா நோக்கு' என்பதை விளக்குக.

சிங்கத்தின் பார்வை என்பது இந்தத் தொடரின் பொருள். இலக்கண நூல்களில் ஒரு சூத்திரத்தின் பொருளுக்கும் வேறு சூத்திரத்தின் பொருளுக்கும் இடையே உள்ள தொடர்பை நான்கு வகையாகப் பிரித்துக் கூறுவர். அவற்றில் ஒன்று அரிமா நோக்கு. ஒரு குறிப்பிட்ட சூத்திரம் தனக்கு முன் உள்ளவற்றோடும் பின் உள்ளவற்றோடும் தொடர்புடையதாக இருந்தால் அதன் நிலையை அரிமா நோக்கு என்பர். சிங்கம் தன் தலையைத் திருப்பாமலே முன்னும் பின்னும் பார்க்கும் இயல்புடையது. இதனை ஸிம்ஹாவலோகனம் என்பவர் வட நூலார்.

2. கண்ணழிவு செய்தல் என்பது யாது?

செய்யுளில் உள்ள சொற்களைத் தனித்தனியே பிரித்துக் காட்டல்.

3. குளத்தங்கரை என்பதைப் பிரித்து எழுத வேண்டுகிறேன்.

குளம் + அத்து + அம் + கரை; குளத்தினது கரை என்பது பொருள். அத்தும் அம்மும் சாரியைகள்.

4. கொள, உளம், இலாத, எலாம் ஆகியவற்றில் இடைக்குறை எவை? தொகுத்தல் விகாரங்கள் எவை? இரண்டுக்கும் வேறுபாடு யாது ?

காட்டிய சொற்கள் யாவும் இடைக்குறை. தொகுத்தல் விகாரம் என்பது செய்யுளில் பெரும்பாலும் இரண்டு சொற்கள் புணருமிடத்து எழுத்து மறைந்து நிற்பது. வெந்த அயம் என்பது வெந்தயம் என்று ஒரு பாட்டில் வருகிறது. அங்கே அகரம் மறைவது தொகுத்தல் விகாரம். 11–ஆவது வினாவின் விடையையும் பார்க்க.

5. கம்பன், இராமாயணம் இரண்டும் சேர்ந்தால் கம்பனிராமாயணம் அல்லது கம்பவிராமாயணம் என்றல்லவா ஆக வேண்டும் ? எப்படிக் கம்பராமாயணம் ஆயிற்று ?

'சில விகாரமாம் உயர்திணை' என்ற சூத்திரத்தின்படி கம்பன் என்ற நிலைமொழியிலுள்ள ஈறும், இராமாயணம் என்ற வருமொழியிலுள்ள முதலும் கெட்டுப் புணர்ந்தன; அல்லது கம்பன் ராமாயணம் என்ற இரண்டு சொற்புணரும்போது நிலைமொழியின் ஈறுகெட்டது என்றும் கொள்ளலாம்.

6. சிடுக்கானவை என்பதே பன்மைதானே ? பின் சிடுக்கானவைகள் என்று ஏன் எழுதவேண்டும் ?

கள் : விகுதிமேல் விகுதி.

7. நிறையப் படித்த நண்பர் ஒருவர் 'ந' கரத்துக்கும் 'ன' கரத்துக்கும் உச்சரிப்பில் வேறுபாடு இல்லை என்கிறார். உண்மை யாதோ ?

இப்போது நம்முடைய பேச்சில் வேறுபாடு இல்லாமல் உச்சரிக்கிறோம். ஆனால் அந்த இரண்டுக்கும் உச்சரிப்பு வேறுபாடு உண்டு. தந்நகரத்தை நாக்கின் நுனி மேல் பல்லின் அடியைத் தொடும்படியாக உச்சரிக்க வேண்டும். வந்த என்ற சொல்லைச் சொல்லும்போது நன்றாகக் கவனித்

தால் அந்த நகர உச்சரிப்புத் தெரியும். இதை மலையாளிகள் சாதாரணமாகவே உச்சரிக்கிறார்கள். றன்னகரத்தை உச்சரிக்கும்போது நாக்கின் நுனி, மேல் வாயைத் தொடும். கன்று என்னும்போது இது தெளிவாகத் தெரியும்.

8. ஈறு கெட்ட எதிர்மறைப் பெயரெச்சத்தின் முன் வல்லினம் மிகும் என்கிறார் என் நண்பர். எனின் ஐயப்பாடு ஒழியவில்லை; தெளிவுபடுத்துங்கள்.

வராத கடிதம் என்பதில் ஈறு கெடாத எதிர்மறைப் பெயரெச்சம் வந்தது. அங்கே வல்லினம் மிகவில்லை. வராத என்பது ஈறு கெட்டு, வரா என்று வந்தால், வராக் கடிதம் என்றுதான் வரும். இங்கே வல்லினம் மிக்கது. 'இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன், கசதப மிகும்' என்ற பொது விதியின்படி இப்புணர்ச்சி அமைந்தது.

9. விண் + அத்து + கொட்கும் = விண்வத்துக் கொட்கும் என்று வருவதற்கு இலக்கணம் யாது?

அங்கே தோன்றிய வகரம் எழுத்துப் பேறு.

10. ஈர், ஓர், பேர் (பெரிய) போன்றவை எவ்விடத்தில் வரவேண்டும்?

வருமொழியில் உயிரெழுத்து முதலாக இருந்தால் இவை வரும். ஓர் என்பது உயிர்மெய் வரும்போதும் சிறுபான்மை வருவதுண்டு.

11. இடைக்குறைக்கும் தொகுத்தல் விகாரத்துக்கும் இடையே உள்ள வேறுபாட்டை விளக்குக.

ஒரு சொல்லின் இடையில் உள்ள எழுத்துக் குறைதல் இடைக்குறை. தனிச்சொல்லில் நிகழ்வது இது. புணர்ச்சியில் குறைவது தொகுத்தல் விகாரம். உம்மை முதலியன தொகுதலும் தொகுத்தல் விகாரம். எலாம் என்பது இடைக்குறை. ல் என்ற மெய்யெழுத்து இடையில்

குறைந்தது. செல்கெனச் சென்றான் என்பதில் செல்க என என்பது செல்கென ஆயிற்று; அகரம் தொக்கது. அது தொகுத்தல் விகாரம்.

12. 'இன்சொல் விளைநிலனா?' என்ற செய்யுளில் அன்பு நீர், அறக்கதிர் என்ற தொடர்கள் வருகின்றன. அவை இருபெயரொட்டுப் பண்புத் தொகையா?

அன்பை நீராகவும் அறத்தைக் கதிராகவும் உருவகம் செய்துள்ள அந்தச் செய்யுளில் அவ்விரு தொடரும் முறையே அன்பாகிய நீர், அறமாகிய கதிர் என்று விரியும். ஆதலின் அவை இருபெயரொட்டுப் பண்புத் தொகைகளே;

13, 'உலகெ லாம்உணர்ந் தோதற் கரியவன்' என்ற பெரிய புராணப் பாடலில், 'மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்' என்று வரும் கடைசி அடியிலுள்ள 'மலர் சிலம்படி' என்பதற்கு இலக்கணம் என்ன?

'மலர் சிலம்படி' என்பது மலர்கின்ற சிலம்பையுடைய திருவடி என்று பொருள்படும் தொடர்மொழி. இது மூன்று சொல், இரு சந்தியுடையது. மலர் அடி, சிலம்படி என்று கூட்டவேண்டும். மலர் அடி என்பது வினைத் தொகை; சிலம்படி என்பது இரண்டாம் வேற்றுமை உருபும் பொருளும் உடன் தொக்க தொகை. மகாவித்துவான் திரிசிரபுரம் மீனாட்சிசுந்தரம் பிள்ளை யவர்கள் 'உலகெலாம் மலர் சிலம்படி' என்று கூட்டிப் பொருள் உரைப்பர்.

14. வலி மிகுதல் என்றால் என்ன? வல்லெழுத்து மிகுதற்கு உள்ள விதிகள் யாவை?

வல்லின எழுத்து மிகுதலை வலி மிகுதல் என்பார்கள். ஆடிப்பெருக்கு என்ற தொடரில் ஆடி என்ற சொல்லும் பெருக்கு என்ற சொல்லும் சேரும்போது ப் என்ற வல்லின எழுத்து மிக்கது. இதற்கு விதி விரிவானது. இலக்கண நூலில் காணலாம்.

15. 'நோற்கிற்பவர்' என்பதை எவ்வாறு பிரிக்க வேண்டும்?

நோல் - கில் - ப் - அ - அர் என்று பிரிக்கவேண்டும். கில் என்பது ஆற்றலைக் காட்டும் சொல். நோற்கும் ஆற்றலை உடையவர் என்பது பொருள்.

16, புலுதம் எனபது எதைக் குறிக்கும்?

அளபெடையைக் குறிக்கும் வடமொழிச் சொல் அது.

17. மாத்திரை என்ற எழுத்தின் அளவுக்குரிய தமிழ்ப் பெயர் என்ன?

அளபு என்பது மாத்திரையைக் குறிக்கும் தமிழ்ச் சொல்.

18. வேண்டா என்ற சொல்லின் இறுதியில் 'ம்' விகுதி சேர்ந்தது எப்படி என்று கூறமுடியுமா?

புதியன புகுதல் என்பதனால் வேண்டாம் என்று வழங்குகிறது.

19. 'சட சட என மரம் முறிந்தது' என்ற வாக்கியத்தில் வரும் 'சட சட' என்பது இரட்டைக் கிளவியா? இரட்டைக் கிளவி என்பது என்ன?

'சடசட' என்பது ஒலிக்குறிப்புச்சொல்; இரட்டைக் கிளவி அன்று. வெடுவெடுத்தான், பரபரப்பு என்பன போன்றவை இரட்டைக்கிளவிகள். பெரும்பாலும் அவற்றைத் தனியே பிரித்துச் சொன்னால் பொருள் இராது.

20, பதினொன்று: உம்மைத் தொகை; பதிற்றொன்று: பண்புத்தொகை-எவ்வாறு? ஏன்?

பதினொன்று என்பது பத்தும் ஒன்றும் சேர்ந்த எண்ணைக் (11) குறிக்கிறது. ஆகையால் அது உம்மைத் தொகை. பதிற்றொன்று என்பது பத்தாகிய ஒன்று என்று

பொருள்படும். அதாவது ஒற்றையாகிய பத்துப் பொருள்களைக் குறிக்கும். மொத்தத்தில் இருப்பது பத்துத்தான். பத்தாகிய ஒன்றைக் குறிப்பதால் பண்புத் தொகையாயிற்று.

21. பிழைத்திருத்தம் அன்றிப் பிழைதிருத்தம் இஃதைப் பிழையின்றிச் செப்புமுறை பேசிப்-பிழையகற்றும், செந்தமிழ்ச் செம்மலே சீரார் புலவரே, உந்நம் உளமே உவந்து.

பிழையுந் திருத்தமும் பீடுறவே காட்டிப், பிழைதிருத்த வைக்கின்ற பெற்றி-விழைவதால், உன்னும்உம் மைத் தொகையா ஓரப் பிழைதிருத்தம், என்ன எழுதல் இனிது.

22, எள்நெய் இணைந்ததனுல் எண்ணெய் வருமென்ருல் நல்லெண்ணெய் ஒன்றே நயமாகும்-அல்லாத, தேங்காய் கடலை சிறுஆ மணக்கெல்லாம், யாங்காகும் எண்ணெய் என.

காரணத்தால் தோன்றியசொல் காரணமில் லாப்பொது வாம், பேரெனவே ஆகின்ற பெற்றியதாம்—ஆரியத்தில், முன்னர்த் தயிலமென மூண்டதிலத் தால்வருசொல், மன்னு பிற வற்றுமா மாறு.

23. பெரிய புராணத்தின் முதல் பாட்டாகிய 'உலகெலாம்' என்று தொடங்கும் செய்யுளில் இறுதியடி 'மலர்சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்' என்று வருகிறது. மலர்சிலம்படி என்பதற்குத் தாமரை மலரைப் போன்ற சிலம்பை அணிந்த அடி என்று பொருள் கொள்ளலாமா? கொண்டால் நேரும் பிழை என்ன?

மலர் சிலம்படி என்பது வினைத்தொகை. மலரைப் போன்ற சிலம்படி என்று விரிக்கும்படி வந்தால் அது உவமத் தொகை; அப்போது மலர்ச் சிலம்படி என்று வர வேண்டும்.

24. தொகையும்மை, முற்றும்மை-இரண்டுக்குமுள்ள வேறு பாடு யாது? 'அழுக்கா றவாவெகுளி இன்னாச்சொல் நான்கும், இழுக்கா வியன்ற தறம்' என்பதில் நான்கும் என்ற சொல்லில் வரும் உம்மை என்ன உம்மை ?

தொகையும்மை என்பது ஒன்று இல்லை. உம்மைத் தொகைதான் உண்டு; உம்மை மறைந்திருப்பது. இரவு பகல் என்னும்போது இரவும் பகலும் என்று விரியாமல் இருப்ப தால் அது உம்மைத்தொகை. முற்றும்மை என்பது முழுமை யும் என்பதைக் குறிக்க வருவது. முருகன் முகமாறும் காட்டினான் என்றால் ஆறு முகங்களுக்கு மேல் இல்லை என்று தெரிய வரும். மேலே உள்ள திருக்குறளில் வருவது முற் றும்மை.

25. தமிழில் ஏழு எழுத்துக்களுக்குமேல் வரும் சொற்கள் இல்லை என்கிறார்களே, இது சரியா ? சிலப்பதிகாரம் என்பதில் எட்டு எழுத்துக்கள் வருகின்றனவே!

'பகாப்பதம் ஏழும் பகுபதம் ஒன்பதும் எழுத்தீ, றாகத் தொடரும் என்ப' என்பது நன்னூல் சூத்திரம். பகாப்பதம் ஏழு எழுத்து வரையிலும், பகுபதம் ஒன்பது வரையிலும் அமையும் என்பது இதன் பொருள். ஆகவே, ஒன்பது எழுத் துக்களையுடைய சொற்களும் உண்டு. உத்தரட்டாதியான் என்பது ஒன்பது எழுத்துக்களையுடையது. ஒன்பதுக்கு மேலும் வரும் சொற்கள் உண்டு. வினையின் பகுதி வேறு பட்டு வரும் சொற்களில் இந்த மிகுதியைக் காணலாம். சிலப்பதிகாரம் ஒரு சொல் அன்று; இரண்டு சொல் இணைந்த தொடர் மொழி.

26. இரட்டைக் கிளவியும் சிலேடையும் ஒன்றா?

வேறு வேறு. மொறுமொறுத்தன என்பது போல வருபவை இரட்டைக்கிளவி. சிலேடை என்பது ஒன்றுக்கு மேற்பட்ட பொருள் தருதல். இரட்டுற மொழிதல் என்னும் உத்தி சிலேடை வகையில் ஒன்று.

27. அஞ்சு என்ற கிளவி மரூஉ மொழியா ? மொழிப் போலியா ?

மொழிப் போலி என்ற ஒன்று இல்லை. அது மரூஉ மொழிதான்.

28. ஊருணி என்பது காரணப் பெயரா ? அல்லது ஆகுபெயரா ?

ஊரால் உண்ணப் பெறுவது என்ற பொருள் தருதலின் காரணப் பெயர்.

29. ஊறுகாய் என்பது வினைத்தொகையா? காரணப் பெயரா ?

இரண்டுந்தாம்; ஊறுகின்ற காரணத்தால் வந்த தொடர் அது. காலம் கரந்த பெயரெச்சத் தொடராக இருப்பதால் வினைத்தொகை.

30. பொற்றொடி வந்தாள் : தழுவு தொடரா? தழாத் தொடரா? பலமொழியும் தொக்க தொகையாய் வருவதைத் தழுவு தொடர் வரிசையில் சேர்த்தது எவ்வாறு பொருந்தும் ?

பொற்றொடி வந்தாள் என்ற தொடரில் மூன்று சொற்கள் இரண்டு சந்திகள் வந்தன. பொற்றொடி என்பது பொன்னாலான தொடி என்பது; மூன்றும் வேற்றுமைத் தொகை. அது பொன்னாலான தொடியை அணிந்த பெண்ணைக் குறிப்பதனால் அன்மொழித் தொகையாயிற்று. பொற்றொடி வந்தாள் என்பது எழுவாய்த் தொடர். பொற்றொடி என்பது சொற்கள் இடையிலே தொக்கு வந்தாலும் பொருளால் தொடர்புடையதாதலின் தழுவு தொடரே.

31. 'வேல்பட் டழிந்தது வேலையும் சூரனும் வெற்பும்' என்ற கந்தரலங்காரப் பாடலில் பன்மை எழுவாய்க்கு

ஒருமைப் பயனிலை வருகிறது; இதற்கு என்ன சமாதானம்?

தொகுதி யொருமை என்று கொள்ளவேண்டும்.

32. 'புறங்கா முனவே புல்லென மொழிப, அகக்கா முனவே மரமென மொழிப' என்ற சூத்திரத்தின்படி பார்த்தால் வாழை, பனை இவற்றை மரம் என்று வழங்குவது தவறு?

பழங்காலத்தில் அப்படி ஒரு வரையறை இருந்திருக்க வேண்டும். இப்போது புதியன புகுதலால் அது மாறி எல்லாவற்றையும் மரமென்றே சொல்கிறோம்.

33. கைக்கிளை என்பதன் பொருளை விளக்குக.

கை என்றால் பக்கம் என்று பொருள்; ஒரு பக்கம் மட்டும் காதல் தோன்றினால் அதைக் கைக்கிளை என்பர். ஒரு மருங்கு பற்றியகேண்மை, ஒருதலைக் காமம் என்றும் அதைக் கூறுவர். ஆண் மட்டும் காதல் கொண்டால் அதை ஆண்பால் கைக்கிளை என்றும், பெண்மட்டும் கொண்டால் பெண்பால் கைக்கிளை என்றும் சொல்வர்.

34. மடல் ஊர்தல் என்றால் என்ன?

ஒரு கட்டிளங் காளை ஒரு பெண்ணின்மேல் காதல் கொண்டபோது தன் காதல் நிறைவேறாவிடில் பனமடலால் குதிரையைப் போல ஒன்றைக் கட்டி அதில் காதலியின் படத்தையும் தன் படத்தையும் பலரும் பார்க்க வைத்து அதில் ஊர்ந்து சான்றோர் காண வீதியில் போதலை மடலூர்தல் என்பார்கள். ஆண்களே மடலூர்வார்கள். பெண்கள் மடலூர்வதாகச் சொல்வார்கள்; ஊர மாட்டார்கள். திருமங்கை மன்னன் அருளிய பெரிய திருமடல், சிறிய திருமடல், காளமேகப்புலவர் பாடிய சித்திரமடல், பிறபுலவர்கள் பாடிய வருணகுலாதித்தன்மடல், நரசிங்கராயன் வளமடல் முதலியன மடல் என்ற பிரபந்த வகையைச் சேர்ந்தவை.

35. சிறுபொழுது பெரும் பொழுது என்பவை யாவை?

ஒரு நாளின் கூறுபாடுகளைச் சிறுபொழுதென்றும் ஓராண்டில் இரண்டிரண்டு மாதங்கள் சேர்ந்த இருதுக் களைப் பெரும்பொழுதென்றும் சொல்வார்கள் வைகறை, காலை, நண்பகல், அந்தி, மாலை, யாமம் என்பன சிறு பொழுதுகள். சிறுபொழுது ஐந்து என்று சொல்லும் கொள்கையினரும் உண்டு. கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில் என்பன பெரும் பொழுதுகள்.

36. திணை மயக்கம் என்றால் என்ன?

மயக்கம் என்பதற்குக் கலப்பு என்று பொருள். ஒரு திணைக்குரிய செடி கொடி விலங்கு முதலியவை வேறு திணையிலும் கலந்திருப்பதாகப் பாடுவது திணை மயக்கம்.

37. குறிஞ்சி மலரைப்பற்றி விளக்குக.

ஐந்து வகை நிலங்களில் ஒன்றாகிய குறிஞ்சி நிலத்துக் குரிய பூ அது. அந்த மலரால்தான் நிலத்துக்கே பேர் வந்தது. அது நீல நிறமுடையது. நீல மலர் மிகுதியாக மலருவதால் நீலகிரி என்ற பெயர் ஒருமலைத்தொடருக்கு வந்தது. குறிஞ்சி மலர் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை மலரும். ஏழு ஆண்டுகளுக்கு ஒருமுறை மலர்வதும் உண்டு.

38. கந்தழி என்பது என்ன?

பற்றற்று நிற்கும் பொருள் என்பது சொற்பொருள். கந்து-பற்றுக்கோடு. அது அழிந்தது கந்தழி. கடவுள் வாழ்த்து வகையில் ஒன்றாகக் கந்தழியைக் கூறுகிறது தொல்காப்பியம்.

39. 'நட்டாரை யாக்கிப் பகைதணித்து வையெயிற்றுப்
பட்டார் துடியிடை யார்ப்படர்ந்-தொட்டித்
தொடங்கினர் இல்லத் தன்பின் துறவா
உடம்பினன் என்ன பயன்?'

(பழமொழி நானூறு)

பயனுடைய இந்தப் பழமொழிநா னூற்றில்
அயற்றனை புல்லிய தென்கொல்?—உயர்வுடைய
உங்கள் அறிவால் உரைப்பீர் விடையவரே
திங்கள் இதுபதிலில் சேர்த்து.

பாட்டிதனின் மூன்றும் அடியில்நும் பாடத்தில்
காட்டும் பிழையுண்டு கண்டிடுக;– நாட்டுமதில்
இல்லத் ததன்பின்என ஏய்ந்தமூன் றுஞ்சீரை
நல்லபடி சொல்க நயந்து.

40. கவிஞர்கள் சீரில் அசை பிரிக்கும்போது னை, மை, லை முதலியவற்றைத் தனித்துப் பிரிக்காமல் வேறு எழுத்துக்களோடு சேர்த்துப் பிரிக்கிறார்களே; 'கடமையினை மறந்தவனால்' என்பதில் மையைத் தனியசையாகக் கொள்வதில்லையே; ஏன்?

ஐகாரக் குறுக்கத்தைக் குறில்போல வைத்து அலகூட்டுதல், யாப்பிலக்கணத்தின்படி அமைந்தது. 'அன்னையை யான் நோதல் அவமால்' என்பதில் ஐகாரத்தைக் தனியசை யாகக் கொண்டால் "அன்னையை யான்" என்பதற்குத் தேமாந்தண் பூ என்று ஓசை யூட்டவேண்டும். அது சரியன்று. அது கூவிளங்காய் என்றே கொள்வதற்குரியது.

41. செய்யுள் வகையில் யமகம், மடக்கு இரண்டும் ஒரே வகையைச் சேர்ந்தவையா? பிள்ளைப பெருமாளையங்கார் திருவரங்கத்தந்தாதியைப் போல் யமகச் செய்யுட்கள் வேறு யாராவது இயற்றியுள்ளார்களா?

யமகம் என்பது ஒரு சொல்லோ தொடரோ மீட்டும் வெவ்வேறு பொருளில் வருவது. அது வடசொல், மடக்கு

என்பது யமகம் என்பதற்குரிய தமிழ்ச் சொல். இப்போது யமகம் என்பது ஒரு பாட்டில் ஒவ்வோரடியிலும் சொல்லோ தொடரோ வெவ்வேறு பொருள் தருவதாக அமைவதையே குறிக்க வழங்குகிறது. ஓரடிக்குள்ளே அவ்வாறு வருவதை மடக்கு என்று சொல்கிறோம். தமிழில் பல யமக அந்தாதிகள் உண்டு. திருச்செந்தில் நிரோட்டக யமக அந்தாதி, திருத்தில்லை யமக அந்தாதி போல்வன பல.

42. கழிநெடிலடி என்பது என்ன ?

செய்யுளின் அடிகள் ஐந்து வகைப்படும். இருசீரால் வருவது குறளடி; முச்சீரால் வருவது சிந்தடி; நாற்சீரால் வருவது அளவடி; ஐஞ்சீரால் வருவது நெடிலடி; அதற்கு மேல் வருவனவெல்லாம் கழி நெடிலடி.

43. எண்சீர் விருந்தத்தின் இலக்கணம் என்ன ?

ஆசிரிய விருத்தங்களில் ஒன்று எண்சீர் விருத்தம். ஐந்துக்கு மேற்பட்ட சீர்களையுடைய அடிகளைக் கழிநெடி நெடிலடி என்பர். ஆதலால் எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம் என்று பெயர். ஓரடியில் எந்த எந்த இடத்தில் எந்த எந்தச் சீர்கள் வருகின்றனவோ அவ்வாறே மற்ற மூன்றடிகளிலும் வரவேண்டும். இதை அளவொத்து வருதல் என்று இலக்கண நூல் கூறும். பல வகையான எண்சீர் விருத்தங்கள் உண்டு. அவற்றில் சிறப்பானவை இரண்டு. அரையடிக்கு இரண்டு காய்ச்சீரும் இரண்டு மாச்சீர்களும் வருவது ஒரு வகை.

> 'இருகாய்ச்சீர் இருமாச்சிர் அடியின் பாதி
> இலகுவதோர் எட்டுச்சீர் விருத்தம் ஆகும்'

என்பது போல வருவது அது. சித்தர் பாடல்களும் திருத் தாண்டகப் பாடல்களும் இவ்வகையில் சேர்ந்தவை.

மற்றொரு வகை அரையடிக்கு மூன்று காய்ச்சீரும் ஒரு மாச்சீரும் வரும்.

'ஒருமூன்று காய்ச்சீரும் ஒன்றுகி நின்ற
உயர்மாச்சீ ரும்பாதி யடியில்வரு மஃதே'

என்பது போல வருவது அது. 'கல்லார்க்கும் கற்றவர்க்கும் களிப்பருளுங் களிப்பே' என்பவை போல அருட்பாவில் வருவன அந்த வகையில் சேர்ந்தவை.

44. 'அறனெனப் பட்டதே இல்வாழ்க்கை அஃதும், பிறன்பழிப்ப தில்லாயின் நன்று' என்பது போன்ற குறட்பாக்களில், அஃதும் என்பது தேமாவாக வருகிறது. 'கற்றில னாயினுங் கேட்க அஃதொருவற், கொற்கத்தின் ஊற்ருந் துணை' என்பதில் 'அஃதொருவற்' என்பது கருவிளங்காயாக வந்துள்ளது. இப்படி வரலாமா ?

ஆய்தம் அலகு பெற்றும் பெருமலும் வரும் என்ற விதி யாப்பருங்கலக்காரிகையில் இருக்கிறது. அதன்படி தளைக்கு ஏற்ப அலகு பெருத இடத்தில் ஆய்தம் மெய்யெழுத்தைப் போல நிற்கும்; அலகு பெறுமிடத்தில் குற்றெழுத்தைப் போல அலகு பெறும்.

45. வீர சோழியத்தில் உள்ள கட்டளைக் கலித்துறையில் 'யாதனி னீங்கு மவதிய தாமிட மாதாரமாய்' என்றும் நற்கருத் தாத்தீ யகமாங் கருமநான் காதாரமேல்' என்றும் வரு மிடங்களில் ஈற்றுச்சீர்கள் விளங்காயாக அமையாதது தவறு அன்ருே ?

'ஆதாரமாம்', 'ஆதாரமேல்'' என்பவை தேமாங்கனி. இவ்வாறு சிறுபான்மை வருவதுண்டு; தேமாந்தண்பூவும் வரும். அவற்றைக் கூவிளங்காயைப் போலக் கொள்ள வேண்டும்.

46. விகற்பம் என்ருல் என்ன ? உதாரணத்துடன் விளக்க வேண்டுகிறேன்.

விகற்பம் என்பதற்கு வேறுபாடு என்பது பொருள். யாப்பிலக்கணத்தில் அடி எதுகையைக் கொண்டு, 'இது ஒரு

விகற்பத்தால் வந்தது; இது இரு விகற்பத்தால் வந்தது; இது பல விகற்பத்தால் வந்தது' என்று வகுப்பது மரபு.

'அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு.'

இது ஒரு விகற்பத்தால் வந்தது.

'பிறர்மனம் புண்படப் பேசலும் குற்றம்
அயலார் குறைபுறத்தே தூற்றலும் அஃதே
சிறிதும் பயனில்ல செப்பலும் தீதே
அனைத்தினும் தீதுபொய் யாம்.'

இது பல விகற்பத்தால் வந்தது.

47. திருப்புகழில் ஆளப்பட்டுள்ள சந்தங்கள் அருணகிரியாரின் கண்டுபிடிப்புகளா ? இல்லையா ?

சந்தம் என்பது சந்தஸ் என்ற வடசொல்லின் திரிபு செய்யுளுக்குரிய ஓசை என்பது பொருள். இப்போது நாம் சந்தம் என்று வழங்குவதை முன்பு வண்ணகம், வண்ணம், வகுப்பு என்று வழங்கினர். கலிப்பா வகையில் ஒன்றாகிய வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பாவில் வரும் வண்ணகம் என்பது சந்தந்தான். அதை முடுகியல் என்றும் சொல்வார்கள். வரிப்பாடல்களில் சந்தம் அமைந்திருந்தது. சிலப்பதிகாரத்திலுள்ள பாடல்கள் இதை உணர்த்தும். பிற்காலத்தில் பிள்ளைத் தமிழ் என்னும் பிரபந்தத்தில் சந்தம் விரவி வரலாயிற்று. அதை வகுப்பு என்று பிரபந்த இலக்கணம் கூறும். ஒட்டக்கூத்தர் இயற்றிய குலோத்துங்கன் பிள்ளைத் தமிழில் பல சந்தப் பாடல்கள் உள்ளன. ஒட்டக் கூத்தருக்கும் முன்பே முதல் இராசராசன் காலத்தில் வாழ்ந்த நம்பியாண்டார் நம்பிகள், ஆளுடைய பிள்ளையார் திருக்கலம்பகம், திருநாவுக்கரச தேவர் திருவேகாதசமாலை என்ற நூல்களில் பல சந்த விருத்தங்களைப் பாடியுள்ளார்.

ஆயினும் அருணகிரியார் மிகச் சிறப்பான வகையில் சந்தப் பாடல்களைப் பாடியிருக்கிறார். அவை அவராகவே அமைத்துக் கொண்டவை. இடையிடையே 'தனதான' என்று வரும் தொங்கலை அமைக்கும் முறை அவருடைய சொந்தப் படைப்பென்றே சொல்ல வேண்டும். யாப்பு வகையில் திருப்புகழ்ப் பாடல்கள் யாவுமே அளவு ஒத்த நான்கு அடிகளால் அமைந்த ஆசிரியச் சந்த விருத்தங்களே; சீர்கள் பல அமையப் பாடியிருக்கிறார்.

48. 'வாழ்த்து திருநாகை வரகான தேவடியாள், பாழ்த்த குரலெடுத்துப் பாடினாள் - நேற்றுக், கழுதைகெட்ட வண்ணான் கண் டேன்கண்டே னென்று, பழுதையெடுத் தோடிவந்தான் பார்!' - இந்த நேரிசை வெண்பாவில் இரண்டாவது அடியின் ஈற்றில் தனிச்சீர் வரவில்லையே! எதுகை இருந்தால்தானே 'நேற்று' என்பது தனிச்சீராகும்?

நேற்று என்பதில் வல்லின எதுகை வந்தது. முன்னுள்ள இரண்டு அடிகளின் தொடக்கத்தில் ஆசிடையிட்ட எதுகை வந்தது. ழ் என்பது ஆசு. வாழ்த்து, பாழ்த்த, நேற்று இந்த மூன்றும் வல்லின எதுகை அமைந்தவை.

49. "நல்லார்கட் பட்ட வறுமையின் இன்னாதே, கல்லார் கட் பட்ட திரு"-இந்தக் குறளில் 'வறுமையின்' என்பதை நிரை நேர் நேர் என வாய்பாடு கூறுவதா? நிரை நிரையாகக் கொள்வதா?

மை யென்பது ஐகாரக் குறுக்கமாதலின் அதனைக் குறிலைப் போலவே எண்ணி நிரை நிரையாக்கிக் கருவிளம் என்று வாய்பாடு கூறவேண்டும்.

50. ஆசாரக் கோவையில், 'நன்றி அறிதல்....ஆசார வித்து' என்று வரும் வெண்பா ஐந்தடியாக உள்ளது. அப்படி வரலாமா?

நாலடிக்கு மேல் பன்னிரண்டு அடிவரையில் உள்ள வெண்பாக்கள் பஃறொடை வெண்பா என்ற வகையைச் சேர்ந்தவை.

51. பஃறொடை வெண்பாவுக்கும் கலிவெண்பாவுக்கும் என்ன வேறுபாடு ?

ஐந்தடி முதலாகப் பன்னிரண்டு அடியளவும் வருவது பஃறொடை வெண்பா. அதற்கு மேற்பட்டு வருவது கலிவெண்பா.

52. மிறைக்கவி என்பது எதற்குப் பெயர் ?

சித்திர கவிக்குப் பெயர்.

53. 'அட்டாலும் பால்சுவையிற் குன்று தளவளாய், சுட்டாலும் நண்பல்லார் நண்பல்லர், கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்க ளேசங்கு, சுட்டாலும் வெண்மை தரும்'-இந்த வெண்பாவில் தனிச்சொல் இல்லை. இதை எந்த வகையில் சேர்ப்பது?

இதைச் சவலை வெண்பா என்று கூறுவர். இதை நேரிசை வெண்பாவாகக் காட்டும் பாடபேதம் ஒன்று வருமாறு: "அட்டாலும் பால்சுவையிற் குன்று தளவளாய், நட்டாலும் நண்பல்லார் நண்பல்லர்—கெட்டாலும், மேன்மக்கள் மேன் மக்க ளேசங்கு சுட்டாலும், தான்மிக்க வெண்மை தரும்."

54. ஆண் பெண் தோள்களுக்கு உவமையாக மூங்கிலைக் குறிப்பது ஏன் ?

பெண்ணின் தோளுக்குத்தான் மூங்கிலை உவமிப்பர். வழுவழுப்பாக இருப்பதனால் அது உவமையாகிறது.

55. கோவை என்னும் பிரபந்தத்தில் பல வகை உண்டா ?

கோவை என்பது கோக்கப் பெற்றது என்று பொருள் பெறும். தமிழ்ப் பிரபந்த வகையில் ஐந்திணைக் கோவை என்பது நானூற்றுக்கு மேற்பட்ட அகத்துறைகள் எல்லா வற்றுக்கும் இலக்கியமாகிய பாடல்களைக் கொண்டது. ஒரு துறைக் கோவை என்பது ஒரே துறையில் பல பாடல்களைக் கொண்டது. வருக்கக் கோவை என்பது உயிர் எழுத்துக் களையும் உயிர்மெய் யெழுத்துக்களையும் முதலாகவுடைய அகத்துறைப் பாடல்களை உடையது. இவை அகப்பொருள் இலக்கியங்கள். இவற்றையன்றி மும்மணிக்கோவை என்று மூன்று வேறு பாடல்கள் அந்தாதியாக அமைய முப்பது பாடல்களைக் கொண்ட பிரபந்தம் ஒன்று உண்டு. அது அகப் பொருளமைதியை யுடையதாக இருக்க வேண்டும் என்ற வரையறை இல்லை.

56. தூது என்றால் என்ன ? தூது விடற்குரியன என்று வரையறுத்த பத்துப் பொருள்கள் எவை ?

அரசர்கள் மற்ற அரசர்களுக்குச் செய்தி அனுப்புவதை யும், காதலன் காதலியர் தம்முள் ஒருவருக்கொருவர் தம் நிலையைச் சொல்லிவர அனுப்புவதையும் தூது என்று சொல் வார்கள். தூது என்னும் பிரபந்தம் பின்னாலே சொன்ன பொருளில் வரும். 'பயில்தரும் கலிவெண் பாவினாலே உயர்திணைப் பொருளையும் அஃறிணைப் பொருளையும், சந்தி யின் விடுத்தல் முந்துறு தூதெனப், பாட்டியற் புலவர் நாட்டினர் தெளிந்தே' (இலக்கண விளக்கம்) என்பது இதன் இலக்கணம். தூதுக்குரிய பொருள்கள். அன்னம், மயில், கிளி, மேகம், மைனா, பாங்கி, குயில், நெஞ்சு, தென்றல், வண்டு என்பன. இவற்றையன்றி வேறு பொருள்களையும் தூதனுப்புவது உண்டு.

57. சின்னப்பூ என்பதற்கும் தசாங்கம் என்பதற்கும் வேறுபாடு என்ன ?

பாட்டுடைத் தலைவனுக்குரிய மலை, நாடு முதலிய பத்து உறுப்புக்களை, உறுப்பு ஒன்றுக்குப் பத்துப் பாடலாக நூறு

பாடல் பாடுவது சின்னப்பூ; ஓர் உறுப்புக்கு ஒரு செய்யுளாகப் பத்துப் பாடல் பாடுவது தசாங்கம்.

58. மண்டலித்தல் என்பதற்கு என்ன பொருள் ?

வட்டமாதல் என்பது சொற்பொருள், அந்தாதியாக வரும் பிரபந்தங்களில் இறுதிப் பாடலின் ஈறும் முதற் பாட்டின் முதலும் அந்தாதித்து வருவதே மண்டலித்தல் என்று சொல்லப்பெறும்.

59. ஒன்பது பாடல்களால் வரும் பிரபந்தம் ஏதேனும் உண்டா ?

நவமணி மாலை என்பது வெவ்வேறு பாடல்கள் ஒன்பதால் அமைந்தது.

60. சாகாசந்திர நியாயம் என்பது என்ன ?

சந்திரனை ஒரு மரத்தின் கிளைக்கு மேல் இருப்பதாக அடையாளம் காட்டுவதுபோல், சம்பந்தமுடையது போலத் தோற்றும் ஒன்றைக் காட்டிக் காணவேண்டிய முக்கியமான பொருளைக் காட்டுவது இந்த நியாயம். சாகை-கிளை.

61. ஆகமப் பிரமாணம் என்பதில் எந்த ஆகமம் குறிக்கப்படுகிறது?

இங்கே ஆகமம் என்பதற்கு நூல் என்று பொருள். நூலிலுள்ள சான்றையே ஆகமப் பிரமாணம் என்பர்.

62. இலக்கணம் முந்தியதா, இலக்கியம் முந்தியதா ?

இலக்கியந்தான் முந்தியது. 'இலக்கியம் கண்டதற்கு இலக்கணம் இயம்பலின்' என்பது நன்னூல்.

63. அறம் வைத்துப் பாடுதல் என்றால் என்ன ?

பாட்டில் மரணப் பொருத்தம் அமையவும் அமங்கலச் சொல் பொருந்தவும் பாடினால் பாட்டுடைத் தலைவருக்குத்

தீங்கு நேரும் என்பது ஒரு நம்பிக்கை. சில புலவர் பாட்டுடைத் தலைவருக்குத் தீங்கு நேருவதற்காகவே அப்படிப் பாடுவர் என்று ஒரு செய்தி வழங்குகிறது. அதையே அறம் வைத்துப் பாடுதல் என்றும், அறம் பாடுதல் என்றும் சொல்வார்கள். ஒருவர் இறந்துபோனால், அதற்கு இரங்கிப் பாடும் செய்யுளைக் கையறுநிலைச் செய்யுள் என்பர். அதைக் கையறம் என்றும் சொல்வதுண்டு. 'கம்பன் பேரிற் பாடிய கையறம்' என்று தமிழ் நாவலர் சரிதையில் வருகிறது. கையறம் பாடுவது என்பதே அறம் பாடுவது என்று வந்திருக்க வேண்டும். இறந்துபோனவருக்கு இரங்கிப் பாடுவது அது. உயிரோடு இருப்பவரையே இறந்து போனவராக வைத்துப் பாடினால் அவர் இறப்பார் என்று கருதிப் பாடும் பாடலாதலின் அறம் பாடுவதாயிற்று. இறவாதவருக்குக் கொடும்பாவி கட்டுவது போன்றது இது என்று தோன்றுகிறது.

64. தெலுங்கு தமிழிலிருந்து பிரிந்தது அல்ல, வடமொழியிலிருந்து வந்தது என்று நண்பர் ஒருவர் கூறுகிறார். தமிழிலிருந்து வந்ததற்குச் சான்று என்ன?

தெலுங்கில் வடசொற்கள் மிகுதியாகப் பயின்று வருவதனாலும், வல்லின எழுத்துக்களில் நான்கு வேறு ஒலியுடைய எழுத்துக்கள் இருப்பதனாலும் வடமொழியிலிருந்து பிரிந்ததாகச் சிலர் எண்ணுகிறார்கள். அது தவறு. வாக்கிய அமைப்பு முதலியவற்றைக் கொண்டுதான் மொழிகளின் குடும்பத்தை வரையறை செய்வது வழக்கம். திராவிட மொழிகள் என்னும் இனத்தைச் சார்ந்தது தெலுங்கு என்பதும், அந்த இனத்தில் பழமையான மொழி தமிழ் என்பதும் திராவிட மொழிகளின் ஒப்பியல் இலக்கணம் பற்றி நூல் எழுதிய கால்டுவெல் முதலியவர்களுடைய முடிவுகள். இதை நினைந்தே மனோன்மணீயத்தின் ஆசிரியர் சுந்தரம் பிள்ளை, 'கன்னடமும் களிதெலுங்கும் கவின் மலையாளமும் துளுவும், உன்னுதரத் துதித்தெழுந்தே ஒன்று பல ஆயிடினும்' என்று பாடியிருக்கிறார்.

65. மணிமேகலையில் வரும் சித்திராபதி என்பவள் யார்?

மாதவிக்குத் தாய்; மணிமேகலைக்குப் பாட்டி.

66. பாரத யுத்தத்தில் பதினெட்டு அக்குரோணி படைகள் என்று வருகிறது. அக்குரோணி என்பது என்ன அளவு?

அக்குரோணி என்பது அக்ஷௌஹிணி என்ற வடசொல்லின் திரிபு. 21,870 தேர்கள், 21,870 யானைகள், 65,610 குதிரைகள், 1,09,350 காலாட்கள் கொண்ட படையின் அளவை ஓர் அக்குரோணி என்பர்.

67. தமிழ் இலக்கியங்களில் கோசர் என்பவர்களைப் பற்றி வருகிறதே; அவர் ஒருவரா, கூட்டத்தினரா? விளக்க வேண்டும்.

கொங்கு நாட்டில் இருந்த ஒரு குழுவினர் கோசர் அவர்கள் எப்போதும் மெய்யையே கூறுபவர்கள். சங்க இலக்கியங்களில் அவர்கள் பெயர் வருகிறது. கொங்கிளங் கோசர், நல்மொழிக் கோசர் என்று அவர்களை வழங்குவார்கள்.

68. முசிடு என்று வைகிறார்களே: அந்தச் சொல் எதைக் குறிக்கிறது?

மரங்களில் மஞ்சள்நிற எறும்பு கூடு கட்டி வாழும், அது கடித்தால் மிகவும் கடுக்கும். அதற்கு முயிறு என்று பெயர். 'முயிறு மூசு குடம்பை' என்று அது மொய்க்கும் கூட்டைச் சங்க நூல் வருணிக்கிறது. முயிறு என்பதே முசிடு என்று மாறி வழங்குகிறது.

69. பூர்ண பலம், சதா பலம்—இவை எந்தப் பழங்களைக் குறிக்கும்?

தேங்காய், எலுமிச்சம்பழம் என்பவற்றைக் குறிக்கும்.

70. முட்டாள் என்ற சொல் அறிவிலியைக் குறிக்க வழங்குகிறது, அது எவ்வாறு வந்தது ?

முற்றாள் என்பதே முட்டாள் என்று வழக்கில் வந்து விட்டது. முழுமகன் என்பதற்கு அறிவிலி என்று பொருள். முற்று ஆள் என்பதும் முழுமகன் என்பதும் ஒரே பொருளைக் குறிக்கும் இருவேறு சொற்கள்: அறிவுக்கே இடமில்லாமல் உடல் முழுவதும் வெற்று ஆளாகவே இருப்பவன் என்று கொள்ளல் பொருந்தும்.

71. மனிதன் என்னும் சொல் ஆண்பாலில் வழங்குகிறது; அதற்குப் பெண்பால் என்ன ?

மனிதப் பெண் என்றுதான் சொல்ல வேண்டும். பேச்சு வழக்கில் மனுஷன், மனுஷி என்று இருபாலாருக்கும் உரிய சொற்கள் வழங்குகின்றன.

72. தேவதானம், பள்ளிச் சந்தம், பிரமதேயம் என்பவற்றுக்கு விளக்கம் தருக.

தேவதானம்-திருக் கோயில்களுக்கு இறையிலியாகக் கொடுத்த நிலங்கள். பள்ளிச்சந்தம்-சைன பௌத்தப் பள்ளிகளுக்கு மானியமாக விட்ட கிராமம். பிரமதேயம்- அந்தணர்களுக்கு மானியமாக விட்ட கிராமம்.

73. தூய தமிழில் அழகு என்பதற்கு எதிர்ப்பதமும் நண்பன் என்பதற்குப் பெண்பாலும் யாவை ?

அழகின்மை, நண்பினள்.

74. பழைய ஏடுகளில் 'இரஞ்சிதம்' என்ற உலோகத்தின் பெயர் காணப்படுகிறதே; இது என்ன உலோகம் ?

இரஞ்சிதம் என்பது பிழையான உருவம்; இரசதம் என்றிருக்கலாம். அது வெள்ளியைக் குறிக்கும்.

75. நொண்டு என்பது ஓர் எண்ணைக் குறிப்பதாகச் சொல்கிறார்கள். அது எந்த எண்?

ஒன்பது என்ற எண்.

76. வாய்க்கு வடமொழிச்சொல் இல்லை என்றால் 'ஜிஹ்வா' என்ற வடசொல்லின் பொருள் என்ன?

சுவையை அறியும் இந்திரியமாகிய நாக்கைக் குறிக்கும் சொல் அது.

77. இந்து, இம்மி, சொற்பம், சிறிய ஆகியவற்றின் பொருள்களும் எதிர்ப்பதங்களும் யாவை?

இந்த நான்கும் சிறிதளவு என்பதைக் குறிக்க வழங்குகின்றன. இந்து என்பது சில வட்டாரங்களில் மட்டும் வழங்கும். அதற்கு எதிர்ப்பதம் இருப்பதாகத் தெரியவில்லை. இம்மி என்பது மத்தங்காய்ப் புல்லரிசியின் பெயர். அதைச் சிறிய அளவுக்கு வாய்ப்பாடாகச் சொல்வது வழக்கு, தினை என்பதைப் போல. அதற்கு அம்மி என்பதை எதிர்ப்பதமாகச் சொல்லலாம். சொற்பம் என்பதற்கு எதிர்ப்பதம் 'அதிகம்.' சிறிய என்பதற்கு எதிர்ப்பதம் 'பெரிய'.

78. பகவன் என்பது தமிழ்ச் சொல்லா?

கடவுளைக் குறிக்கும்போது பகவன் என்பது பகவான் என்ற வடசொல்லின் திரிபு. பகம் என்பது ஐசுவரியம் வீரியம், புகழ், திரு, ஞானம், வைராக்கியம் என்ற ஆறு குணங்களைக் குறிப்பது. இந்த ஆறு குணங்களை யுடையவன் ஆதலால் பகவான் என்ற பெயர் வந்தது. பகவன் என்பது தமிழ்ச் சொல்லானால் பகலை உடையவன் என்னும் பொருளைத் தரும்.

79. சுவாமிகள்வாள், அவாள் இவை எவற்றின் திரிபு?

சுவாமிகள் அவர்கள், அவர்கள் என்பவற்றின் திரிபு.

80. பிலாக்கணம் என்ற பெயர் எப்படி வந்தது?

பிணக்கானம் என்பதே பிலர்க்கணம் ஆயிற்றென்று மகாவித்துவான் ரா. இராகவையங்கார் எழுதியிருக்கிறார்.

81. புதிர் என்று விடுகதையைச் சொல்கிறார்களே, அதற்கு என்ன காரணம்?

தொல்காப்பியத்தில் பிசி என்று வருகிறது. அது விடுகதைதான். அது பிதிர் என்றாகிப் பிறகு புதிர் என்று மருவி வந்திருக்க வேண்டும்.

82. கருவேப்பிலை என்று சொல்வது சரியா?

கறிவேப்பிலை என்பதுதான் சரி.

83. இனிமை என்பதன் எதிர்ப்பதம் என்ன?

இனிமைக்கு எதிர்ப்பதம் இன்னாமையாகும்.

84. நான் என்னும் சொல் தொல்காப்பியச் சூத்திரத்தில் உண்டா?

இல்லை.

85. கணவன் என்பது காரணப் பெயரா?

கணம் என்பது கூட்டம் என்னும் பொருளையுடையது. கூட்டத்துக்குத் தலைவன் என்ற பொருளுடையது, கணவன் என்ற சொல்.

86. அணிற்பிள்ளை, கிளிப்பிள்ளை என்றவற்றிற்குப் பிள்ளை என்ற பெயர் ஏன் வந்தது?

குழந்தையை வளர்ப்பது போலக் கருத்துடனும் அன்புடனும் வளர்ப்பதனால் அப்பெயர் வந்தது. கீரிப் பிள்ளை, தென்னம் பிள்ளை என்று வருவதற்கும் அதுவே காரணம்.

87. காரைக்குடி என்று பெயர் வந்ததற்குக் காரணம் என்ன ?

காரை என்பது ஒருவகை முள்ளுச் செடி; 'முட்காற் காரை' என்பது புறநானூறு. அந்தச் செடி படர்ந்திருந்த இடமாக முதலில் இருந்ததனால் அந்தப் பெயர் வந்ததென்று தோன்றுகிறது.

88. 'கத்திரிக்காய்க்கு இன்று ஏக கிராக்கி,' 'நீ பாடுவதற்கு ஏன் மிகவும் கிராக்கி பண்ணிக்கொள்கிறாய்' — கிராக்கி என்ற சொல்லுக்கு விளக்கம் வேண்டும்.

அதிக விலை என்ற பொருளில் வழங்கும் கிராகி (Khiragi) என்ற உருதுச் சொல்லின் திரிபு அது. அதிக விலை என்பதையும், அருமைப்பாடு என்பதையும் தமிழில் குறிக்கிறது.

89. ஆன்மிகம், ஆத்மா, சுதர்மம் — இவற்றுக்குப் பொருளும் விளக்கமும் தெரிவிக்க வேண்டும்.

ஆத்மா என்பது உயிர்; அதனோடு தொடர்புடையது ஆன்மிகம். உயிரின் நன்மையை எண்ணிச் செய்யும் செயல்களை யெல்லாம் ஆன்மிகம் என்று சொல்வது வழக்கம். சுதர்மம் என்பது ஸ்வதர்மம் என்பதன் திரிபு. அவனவனுடைய வருண ஆசிரமங்களுக்கு ஏற்ற கடமையைச் சுதர்மம் என்று பழங்காலத்தில் குறித்தனர்.

90. வேலைக்காரன் என்ற சொல் பழங்காலத்தில் வழங்கியதா ?

வேளைக்காரன் என்பதே வேலைக்காரன் என வந்தது. எந்த நேரத்திலும் இடும் ஏவலைச் செய்பவனுக்கு வேலைக்காரன் என்று பெயர். பழங்காலத்தில் அரசர்களிடம் வலங்கை வேளைக்காரர், இடங்கை வேளைக்காரர் என்று வீரர்கள் இருந்தனர் என்று கல்வெட்டுக்களால் தெரிய வருகிறது.

91. காசு, பிறப்பு என்னும் அணிகலன்கள் கழுத்தில் அணியப்படுவனவா ? 'பல்காசு நிரைத்த சில்காழ் அல்குல்' என்னும் திருமுருகாற்றுப்படை அடியால் காசு என்பது அரையில் கட்டியது என்று புலனாகவில்லையா ?

காசு என்பது அச்சுத்தாலி என்றும் பிறப்பு என்பது ஆமைத்தாலி என்றும் உரை எழுதியிருக்கிறார்கள். தாலி என்பது மார்பில் தொங்கும் அணிகலனைக் குறிப்பது. ஆகவே அவ்விரண்டும் கழுத்தில் அணிவன என்றே கொள்ள வேண்டும். காசு என்பதற்கு மணி என்றும் பொருள் உண்டு. 'பல்காசு நிரைத்த சில்காழ்' என்பது பல மணிகளைக் கோத்த சில வடங்களையுடைய மேகலையைக் குறிப்பது.

92. திருப்பதி என்ற சொல்லின் பொருள் வேண்டும்.

பதி என்பது ஊர். தெய்வம் உறையும் ஊரைத் திருப்பதி என்பர். பொதுவாக எல்லாத் தெய்வத் தலங்களுக்கும் அமைந்த அப்பெயர் சிறப்பாகத் திருமால் திருத்தலங்களில் ஆழ்வார்களால் மங்களாசாசனம் செய்யப்பெற்ற நூற்றெட்டுத் திவ்ய தேசங்களைக் குறிக்க வழங்குகிறது. அதனினும் சிறப்பாகத் திருவேங்கடத்தைத் திருப்பதி என்று மக்கள் வழங்குகின்றனர்.

93. ஜன்னல் என்பது தமிழ்ச் சொல்லா? இல்லையெனில் எம் மொழியிலிருந்து வந்தது ? அதற்கு ஏற்ற தூய தமிழ்ச் சொல் யாது ?

ஜன்னல் என்பது ஜேனெல்லா (Janella) என்ற போர்த்துக்கீசியச் சொல்லிலிருந்து வந்தது. சாளரம் என்று வழக்கில் உள்ள சொல் வடமொழித்திரிபு. காலதர் என்பது தூய தமிழ்ச்சொல்.

94. வைசுரோணன் என்பவன் யார்? அவனுக்கும் இராவணனுக்கும் என்ன உறவு?

வைசிரவணன் என்பதே வைசுரோணன் என்று திரிந்து வழங்கும். வைசிரவணன் குபேரன். விசிரவசு என்பவருக்குக் கேகசி என்பவளிடம் பிறந்தவன் குபேரன். இராவணனும் விசுரவசுவின் புதல்வன். ஆகவே அவ்விருவரும் சகோதரர்கள்.

95. 'கேடும் ஆக்கமும் கெட்ட திருவினர்' (பெரிய. புராணம்), 'கேடுகெட்ட மானிடரே கேளுங்கள்' (ஔவையார்) என்பவற்றில் வரும் கேடு என்னும் சொல்லின் பொருள் என்ன?

முதலில் உள்ள கேடு என்பதற்கு இழப்பு அல்லது நஷ்டம் என்பது பொருள். கேடுகெட்ட என்பது மிகக் கெட்ட என்ற பொருளில் வரும் வழக்குத் தொடர்.

96. கோவணம், கோவண ஆடை — இரண்டுக்கும் வேறுபாடு உண்டோ?

கௌபீனம் என்று சொல்லும் சிறு துணியே கோவணம். அரைஞாண் கயிற்றில் மறைக்க வேண்டிய உறுப்பை மறைத்துக் கட்டுவது இது. கோவண ஆடை என்பது கச்சமாகக் கட்டும் ஆடை.

97. செய்யுள், கவிதை, பாடல்—இம் மூன்றுக்கும் உள்ள வேறுபாடு என்ன?

மூன்றும் ஒரே பொருளில் வதங்குவதுண்டு. செய்யப் படுவதால் செய்யுளென்றும், பாடப்படுவதால் பாடல் என்றும் வழங்கும். கவிதா என்ற வடசொல் கவிதை என்று தமிழில் வழங்குகிறது.

98. திருச்சிராப்பள்ளி என்பதில் சிரா என்ருல் என்ன? எதைக் குறிக்கிறது?

சிரப்பள்ளி என்பதே சிராப்பள்ளி என மாறியது. திரு என்பது அடை. திரிசிராப்பள்ளி என்றும் சொல்வதுண்டு. திரிசிரஸ் என்ற அசுரன் உலாவிய இடம் என்று புராண வரலாறு கூறும்.

99. தெலுங்கு என்பது எதிலிருந்து வந்தது?

திரிலிங்கம் என்பதிலிருந்து வந்தது.

100. தமிழிலிருந்து ஆங்கில வழக்கில் புகுந்த சொற்கள் உண்டா?

அரிசி, மாங்காய், இஞ்சி, வெற்றிலை என்பன ரைஸ், மேங்கோ, ஜிஞ்சர், பீடல் என்று மாறி வழங்குகின்றன. தட்டி, கட்டுமரம், பந்தல் என்பன அப்படியே வழங்குகின்றன. இவற்றைப்போன்ற பல சொற்கள் ஆங்கிலத்தில் ஏறியுள்ளன.

101. வெற்றிலை என்பது வெற்றியைக் காட்டும் இலை என்ற காரணத்தினால் வந்தது என்று ஒருவர் சொல்கிறார். அது சரியா?

வெறுமை, இலை என்ற இரண்டு சொற்களும் இணைந்து வந்த பெயர் அது. வெற்றிலைக் கொடியில் இலையையன்றிப் பூ, காய், கனி ஏதும் இல்லை; வெறும் இலை மாத்திரமே இருக்கிறது. அதனால் வெற்றிலை என்று பெயர் வந்தது.

102. வீடுகளில் அடிக்கடி மூலைகளிலும் மேற்புறங்களிலும் கறுப்பாகப் படருகிறதே, ஒட்டடை; அந்தச் சொல் எப்படி வந்தது?

ஓரிடத்தில் ஒட்டி மேன்மேலும் அடுத்து அமைந்ததனால் ஒட்டடை என்ற பெயர் வந்தது.

103. யானைக்கு நால்வாய் என்ற பெயர் இருக்கிறதே; அதற்கு நான்கு வாய் உண்டா?

நாலுதல் என்பது தொங்குதல் என்பதைக் குறிக்கும். யானையின் வாயின் அடிப் பகுதி தொங்கிக் கொண்டிருப்பதால் நால்வாய் என்று பெயர் வந்தது.

104. ரேழி, தாவாரம்—இவற்றின் பொருள் என்ன ?

வீட்டின் உட் பகுதிக்கும் வாயிலுக்கும் இடையிலே செல்லும் வழியாக இருப்பது இடைகழி; அதுவே ரேழி என்று வழக்கில் சிதைந்தது. வீட்டின் பக்கத்தில் தாழ்வாகச் சார்ப்புடன் கூடிய பகுதிக்குத் தாழ்வாரம் என்று பெயர். அதுவே தாவாரம் ஆயிற்று.

105. ஸாஹித்யம், கிருதி, கீர்த்தனை, பாடல் ஆகிய சொற்களின் பொருள் என்ன ?

ஸாஹித்யம் என்பது இலக்கியம் என்னும் பொருளுடையது. சங்கீத வித்துவான்கள் இசைப் பாட்டுக்குரிய பெயராக இப்போது வழங்குகிறார்கள். கிருதி என்பது செய்யுள் என்பதுபோல இயற்றப்பட்டது என்னும் பொருளுடையது. கீர்த்தனம் என்பதே கீர்த்தனை ஆயிற்று. அதற்குப் புகழ் அல்லது துதி என்பது பொருள். இறைவனைப் புகழ்வதால் கீர்த்தனை ஆயிற்று. கிருதி, கீர்த்தனை என்ற இரண்டும் இப்போது பல்லவி, அநுபல்லவி, சரணங்களுடன் உள்ள இசைப்பாடல்களுக்குப்பெயர்களாக வழங்குகின்றன. பாடல் என்பது எல்லா வகையான செய்யுட்கும் இசைப்பாட்டுக்கும் பொதுவானது.

106. முடங்கல், மடல், கடிதம், லிகிதம்—இவற்றின் வேறுபாடுகள் யாவை ?

எல்லாம் இப்போது கடிதத்தைக் குறிக்க வழங்கும் சொற்களே. இவை உண்டானதற்குக் காரணங்கள் வேறு. பழைய காலத்தில் ஓலைகளை எழுதிச் சுருட்டி அனுப்புவார்கள். அதனால் முடங்கல் என்ற பெயர் வந்தது. முடங்கல் - சுருளுதல். பனமரத்தின் ஓலைக்கு மடல் என்று

பெயர். அதில் எழுதியதனுல் மடல் என்ற பெயர் உண்டாயிற்று. கடிதம் என்பது காகிதத்துக்குப் பெயர். காகிதத்தில் எழுதுவதால் அப்பெயர் வந்தது. லிகிதம் என்பது எழுதப்படுவது என்ற பொருளுடையது.

107. இலஞ்சம் என்பதற்குரிய தமிழ்ச் சொல் யாது ?

கைக்கூலி, கையூட்டு என்ற இரண்டு சொற்களைச் சொல்லலாம்.

108. நைந்தும் கிழிந்தும் போன ஆடையைப் பீத்தல் என்கிறோம்; அது எம்மொழியிலிருந்து வந்தது ?

பீற்றல் என்பதே பீத்தல் எனச் சிதைந்து வழங்குகிறது. பீறு என்பதிலிருந்து வந்தது அது. பீறு என்பதற்குக் கிழி என்று பொருள். எனவே கிழிந்த துணியைப் பீற்றல் என்று சொல்கிறோம்.

109. அனேக, அநேக, நன்னுள், அந் நாட்களில், பொன்னுள் — இவற்றில் ன, ந எழுத்துக்கள் வேறுபடுகின்றனவே; அவை சரியா ? ஏன் ?

அநேகம் என்பது வடசொல். அதை இருவகையாகவும் எழுதலாம். நன்னுள் என்பது நன்மை, நாள் என்று இரண்டு சொற்கள் சேர்ந்து அமைந்த தொகை; புணர்ச்சி விதியால் தந்நகரம் றன்னகரமாக மாறியது. பொன் நாள் என்ற இரண்டும் சேர்ந்தபோதும் அப்படியே ஆயிற்று. அந்நாள் என்பதில் அ என்ற சுட்டின்முன் நாள் என்பது வந்து நகரம் மிக்கது.

110. நீர் என்ற சொல் வடமொழியிலும் இருக்கிறதே. அது தமிழ்ச் சொல்தானு ?

நீரம் என்பது வடசொல். அது தமிழிலிருந்து சென்றதே. மீன், தாமரை போன்ற சொற்கள் தமிழிலிருந்து

வடமொழியில் ஏறி, மீனம் தாமரஸம் என்று வழங்குகின்றன என்று மொழி நூல் அறிஞர்கள் ஒப்புக்கொள்கின்றனர்.

111. பாலம் என்பது தமிழ்ச் சொல்லா ?

உருதுச் சொல்லிலிருந்து வந்தது; 'நெருப்பாறு மயிர்ப் பாலம்' என்று தமிழில் நெடுங்காலமாகப் புகுந்து வழங்குகிறது.

112. கொய்யாக் கனி என்ற பெயர் அக் கனிக்கு ஏன் ஏற்பட்டது ? பிறரால் கொய்யப்படாது தானே முற்றி விழும் கனி என்பதனுலா ?

கொய்யாக்கனி பிரேஸில் நாட்டிலிருந்து வந்தது. அங்கே அதைக் கொயாபா (Guayaba) என்று வழங்குவார்கள். அதுவே திரிந்து கொய்யா ஆயிற்று.

113. பதப்பர் என்ற சொல்லுக்குப் பொருள் என்ன? அது எங்காவது இலக்கியத்தில் வந்திருக்கிறதா ?

வெள்ளத்தைத் தடுக்க இடும் மணற்கோட்டை: என்பது பொருள்: 'பலசூழ் பதப்பர் பரிய' என்று பதிற்றுப்பத்தில் வருகிறது.

114. பண்பாடு என்ற தமிழ்ச் சொல் ஆங்கிலச் சொல்லான கல்ச்சரைக் (Culture) குறிக்க வழங்குகிறதே; அது பண்பு என்பதிலிருந்து வந்ததா, அன்றிப் பண்படுவது என்பதிலிருந்து வந்ததா ?

கல்ச்சர் என்ற சொல்லுக்கு ஏற்ற சொல் வேண்டுமென்று படைக்கப்பட்ட சொல் பண்பாடு என்பது. இதனை முதலில் வழங்கியவர் ரசிகமணி டி. கே. சி. அவர்கள் என்று நினைக்கிறேன். பண் என்பது நிறைவு அல்லது செப்பம் என்னும் பொருளுடையது. நிலத்தைப் பண்படுத்தல் என்று

சொல்லும் வழக்கிலிருந்து இதை உணரலாம். ஒருவன் செப்பம் அடைந்து நிறைதலைப் பண்படுதல் என்று சொல்ல லாம்; அதுவே பண்பாடு என்றும் சொல்லத்தகுவது. செப்பம் பெற்று நிறைவு அடையும் முறையே பண்பாடு. வேறு சிலர் கல்ச்சர் என்ற சொல்லின் ஒலியோடு ஒட்டிக் கலா சாரம் என்ற சொல்லைப் படைத்தனர். பழைய வழக்கில் சால்பு, சான்ருண்மை என்று உள்ள சொற்களே கல்ச்சர் என்பதைக் குறிப்பவை.

115. அருணகிரிநாதர் முருகனை, 'சூர்க்கொன்ற ராவுத் தனே' என்று சொல்கிருர், ராவுத்தன் என்ற சொல்லுக்குப் பொருள் என்ன? அது தமிழ்ச் சொல்லா? வேறு மொழிச் சொல்லா?

ராவுத்தன் என்பது குதிரை வீரன் என்ற பொருளுடை யது. அது ரவுத் என்ற உருதுச் சொல்லிலிருந்து வந்தது. டாக்டர் ஐயரவர்கள் 'ராவுத்தர்' என்ற கட்டுரையில் இந்தச் சொல்லைப் பற்றிய ஆராய்ச்சியைத் தெரிவித்திருக்கிருர்கள்.

116. மாலை என்பது பிற்பகலைக் குறிப்பதா? சாயங் காலத்தைக் குறிப்பதா?

இரவின் முதல் யாமம் மாலை என்பது பழைய வழக்கு. பிற்பகல் என்பது ஆங்கிலத்தைத் தழுவிய (afternoon) வழக்கு; பகலின் பின் நேரத்தைக் குறிப்பது. சாயங்காலம் என்பது, சூரியன் மறையும் நேரத்தைக் குறிப்பது. அதைத் தமிழில் 'எற்பாடு' என்று சொல்வார்கள்.

117. கண்ட்ராவி என்ற சொல்லின் பொருள் என்ன?

கண்ணராவி (கண் அராவி) என்ற தொடரின் சிதைவு அது. கண்ணை அராவுவதுபோலத் துன்பந் தரும் காட்சி என்ற பொருளில் அது வழங்குகிறது

118. சங்கம் என்பது தமிழ்ச் சொல்லா ?

வட சொல்.

119. குல்லை என்பது எதைக் குறிக்கும் ?

துளசியையும் கஞ்சாவையும் குறிக்கும்.

120. 'முகர்தல்' என்று மூக்கின் செயலைச் சொல்கிறார்களே. அது சரியா ?

மோத்தல் என்பதுதான் சரியான சொல். 'மோப்பக் குழையும் அனிச்சம்' என்பது குறள். மோந்து பார்ப்பதை 'மோப்பம் பிடித்தல்' என்று வழங்குவதனாலும் இதை அறியலாம். 'மூக்கே நீ முரலாய்' என்று முரலுதல் என்ற சொல்லை அப்பர் இந்தப் பொருளில் வழங்கியிருக்கிறார்.

121. 'பாம்பென்றும் தாண்ட முடியாது, பழுதை என்றும் மிதிக்க முடியாது' என்ற பழமொழியில் வரும் பழுதை என்பதற்குப் பொருள் என்ன ?

வைக்கோலால் திரிக்கும் கயிற்றுக்குப் பழுதை என்று பெயர்.

122. மகள், மனை இவ்விரு சொற்களுக்கும் மனைவி என்ற பொருள் உண்டா ? இதற்கு இலக்கியச் சான்று தருக.

'மனக்கினி யாற்குநீ மகளாய தூஉம்' என்று மணிமேகலையில் மகள் என்னும் சொல் மனைவி என்ற பொருளில் வந்தது. 'பிறன்மனை நோக்காத பேராண்மை' என்ற திருக்குறளில் மனைவி என்ற பொருளில் மனை என்னும் சொல் வந்தது.

123. சொகினம் என்ற சொல் தமிழ்ச் சொல்லா ? அதுவே மருவிச் சகுனம் என்ற வட சொல்லாயிற்றா ?

சகுனம் என்ற சொல் பறவைகளால் பார்க்கும் நிமித்தத்துக்குப் பெயராக வந்து பிறகு எல்லா வகை நிமித்தங்

களுக்கும் ஆயிற்று. சகுனம் என்ற வடசொல்லே சொகினம் என்று தமிழில் வந்திருக்கலாம். புள் என்று தமிழில் வழங்கும்.

124. 'என் கடன் பணி செய்து கிடப்பதே', 'கடன் பட்டான்', காலைக் கடன்' என்ற இடங்களில் வரும் கடன் என்ற சொற்களின் பொருளில் உள்ள வேறுபாடு யாது ?

முதலும் மூன்றும் கடமை என்ற பொருளையும், இரண்டு பணத்தைக் கடனாகப் பெற்றதையும் சுட்டின.

125. 'செண்டாடுவான் சங்கரன்' என்ற வாக்கியம் ஒரு சத்திரத்தின் வெளித் திண்ணையில் கிறுக்கப்பட்டிருந்தது. இதற்குப் பொருளிருந்தால் தெரிவிக்கக் கோருகிறேன்.

செண்டு என்பதற்குப் பூம்பந்து என்று பொருள். அதனை ஆடுவதையே அந்த வாக்கியம் குறிக்கிறது. செண்டு என்பது குதிரைச் சவுக்கையும் குறிக்க வருவதுண்டு.

126. பெண்களுக்கு முக்கியமாக அச்சம், நாணம், மடம், பயிர்ப்பு என்ற நான்கு குணங்கள் இருக்க வேண்டும் என்று சொல்கிறார்கள். மடம், பயிர்ப்பு என்பவற்றின் பொருள் என்ன ?

மடம் என்பதற்குக் 'கொளுத்தக் கொண்டு கொண்டது விடாமை' என்று பொருள் கூறுவர். யாரேனும் ஒன்றைச் சொன்னால் அதைக் கேட்டுக்கொண்டு, அது தனக்குத் தெரிந்தாலும் அதைக் காட்டிக்கொள்ளாமல் இருத்தல் அது. ஒரு வகை அடக்கம் அது. பயிர்ப்பு என்பது பிற ஆடவரைத் தொடும்படி நேர்ந்தால் உண்டாகும் அருவருப்புணர்ச்சி.

127. அதிர்ஷ்டம் என்ற வட சொல்லுக்குச் சரியான தமிழ்ச் சொல் என்ன ?

நல்லூழ் என்று சொல்லலாம்.

128. அருணகிரிநாதர் பாடியுள்ள 'அந்தோ மனமே' என்ற திருப்புகழில், 'இந்தா மயில்வாகனர் சீட்டிது' என்று வருகிறது. இதில் சீட்டு என்பது ஆங்கிலச் சொல் அல்லவா ? அவர் காலத்தில் ஆங்கிலம் வழக்கில் இருந்ததா ?

சீட்டு என்பது தமிழ்ச் சொல்தான். அதுவே ஆங்கிலத்தில் 'சிட்' (Chit) என வழங்குகிறது. திருமுகம் அல்லது கடிதத்தைச் சீட்டு என்று சொல்வது வழக்கம். கடிதமாக உள்ள கவிக்குச் சீட்டுக் கவி என்ற பெயர் உள்ளதனால் இதை அறியலாம். தீட்டு என்பது கையெழுத்திட்ட கடிதத்துக்கு ஆயிற்று; தீட்டுவது தீட்டு. அதுவே சிதைந்து சீட்டு என்று ஆகிவிட்டது.

129. தூய்மையானவள் என்று பொருள்படும்படியான பெண் பெயர் வேண்டும்; வடமொழியானாலும் சரி, தமிழானாலும் சரி; நிர்மலா என்பது போல எதிர்மறை வாய்பாட்டில் இல்லாமல் இருக்க வேண்டும்.

புனிதவதி என்ற பெயர் அத்தகையது.

130. இஃது, அஃது என்ற சொற்களை எங்கே பயன்படுத்த வேண்டும் ?

வரும் மொழியில் உயிரெழுத்து முதலில் வரும்போது பயன்படுத்துவது பழைய வழக்கம். உ-ம்: இஃது ஏது ? அஃது ஆகுமா ?

131. மிலாறு என்னும் சொல் இலக்கியத்தில் இடம் பெற்றுள்ளதா ? அல்லது பிற்கால வழக்கா ?

வளார் என்பது இலக்கியத்தில் வருகிறது. 'புளியம் வளாரால் மோதுவிப்பாய்' என்பது தேவாரம். அது விளாறு ஆகி, மிலாறு என்றும் ஆயிற்று.

132. பேட்டி என்பது செந்தமிழ்ச் சொல்லா ?

அது உருதுச் சொல்லிலிருந்து வந்தது.

133. முற்றிலும் என்ற சொல் தவறு ? ஏன் ?

முற்றும் என்பதுதான் சரியான சொல். சுற்றிலும் என்பதைப் போல இருப்பதால் முற்றிலும்என்று தவறாக எழுதும் வழக்கம் வந்துவிட்டது.

134. தென்றல் என்று ஏன் பெயர் அமைந்தது ?

தெற்குப் பக்கத்திலிருந்து வீசுவதால். வடக்கேயிருந்து வீசுவது வாடை; கிழக்கே இருந்து வீசுவது கொண்டல்; மேற்கேயிருந்து வீசுவது கோடை.

135. 'மெனக்கெட்டு' என்று அடிக்கடி நாம் பேசுகிறோமே; அது எப்படி வந்தது ?

'வினை கெட்டு' என்பதே அப்படித் திரிந்தது.

136. தற்குறியென் றலென்ன ? தண்டமிழி லேஇந்தச்
சொற்குறிக்கும் மானிடர்யார் ? சொல்
லுங்கள்—நற்குறியாய்க்
கேட்டாற் பொருளுரைக்கும் கி. வா. ஜ.
என்றனக்கோர்
பாட்டாற்று றுங்கள் பதில்.

தன்னைக் குறிக்கத் தனிப்பேர் அமைந்திருக்க
அன்ன தெழுதுதற்கும் ஆற்றலிலான்—துன்னுமொரு
கீறலா லேகுறிக்கும் கீழ்மையால் தற்குறியாக்
கூறுவா ரென்றறிந்து கொள்.

137. மாந்துதல் என்பதற்கு என்ன பொருள் ?

உண்ணுதல், அநுபவித்தல் என்று பொருள்.

138. சரஸ்வதி என்பதைச் சரசுவதி என்று எழுதுவது போல ராஜேசுவரி என்பதை ராசேசுவரி என்று எழுதுவது சரி தானே ? ராஜேஸ்வரி என்று எழுதலாமா ?

ராஜேச்வரி என்பதுதான் வடசொல்; ஸ் வேறு, ச் வேறு; அதை ராசேசுவரி என்று எழுதுவதே சரி. ராஜேஸ்வரி என்பது தவறு.

139. ஜ்வரம் என்பதற்குத் தமிழ்ச் சொல் எது ?

காய்ச்சல் என்று யாவரும் வழங்கும் சொல்லே தமிழ்ச் சொல்தானே ? வெப்பு நோய் என்றும் சொல்லலாம்.

140. 'காணுத இடத்தில் பிறரைப் பற்றிக் கூறுவது அசிங்கமல்லவா ?' என்று சொல்கிறோம். சிங்கம் வீரத்தில் சிறந்தது; அசிங்கம் வீரமில்லாதது என்று பொருள் கொள்ள வேண்டுமா ?

அசங்க்யம் என்பதே மாறி அசிங்கம் என்று மருவியது. சங்கத்தில் அல்லது நாலுபேர் கூடிய இடத்தில் பேசவோ, வெளிப்படுத்தவோ கூடாதது என்று பொருள்படும். அஸப்யம் என்று சபையில் சொல்லத் தகாதவற்றைக் குறிப்பது வழக்கம். அவையல் கிளவி என்று தமிழில் சொல்வார்கள்.

141. சலாம், கக்கூஸ், சன்னது என்னும் சொற்கள் எந்த மொழியிலிருந்து வந்தவை ?

சலாம் : உருது; கக்கூஸ் : டச்சு மொழி; சன்னது : உருது.

142. தமிழ்ப் புத்தகங்களைப் பொதுவாக ஏன் நூல் என்று குறிப்பிடுகிறார்கள் ?

நூலைப் போல இருப்பதனால் அந்தப் பெயர் பெற்றது. அது உவம ஆகுபெயர். பஞ்சினை ஒரு பெண் இராட்டையில் கதிரின் முனை வழியே நூற்றுக் கையால் நூலை உண்டாக்குவது போல, சொல்லால் புலவன் தன் மதிநுட்பம் கொண்டு வாயால் நுவல்வதால் உவமையாயிற்று.

143. நாதோபாஸனை என்கிறார்களே; அப்படி என்றால் என்ன ?

நாதம் என்பது இங்கே இசையைக் குறிக்கும். சங்கீதத்தைப் பக்தியுடன் பயின்று அதன் வழியே இறைவனை வழிபடுவதையே நாதோபாஸனை என்று கூறுகிறார்கள்.

144. அக்கசாலை என்பது என்ன ?

நாணயம் அச்சடிக்கும் இடம்.

145. லாயக்கு என்பது தமிழா, அல்லது வேறு மொழியா? அதன் பொருள் என்ன ?

தக்கது என்னும் பொருளில் வழங்கும் அந்தச் சொல் உருதுவிலிருந்து வந்தது.

146. திருக்கோயிலூர், திருக்கோவிலூர், திருக்கோவலூர் இந்த மூன்றில் எது சரி ?

திருக்கோவலூர் என்பதே சரியான உருவம். கோவல் வீரட்டம் என்றும் அத்தலத்துக்குப் பெயர் உண்டு.

147. துளிர் என்று எழுதுவது தவறா ?

தளிர் என்பதே இலக்கியத்தில் வழங்குகிறது. இப்போது உலக வழக்கில் துளிர் என்று சொல்கிறோம்.

148. பந்தம் பிரி, பந்தம் பறி—இவ்விரண்டில் எது சரி ? அது எதைக் குறிக்கிறது ?

பந்தம் பறி என்பதே சரி. சிவன் கோயிலில் நடைபெறும் திருவிழா இறுதியில், உமாதேவியார் ஊடல் கொள்ள அதற்கு அடையாளமாகத் தீவட்டிகளாகிய பந்தங்களை அம்மையின் பரிவாரத்தினர் பறித்துச் செல்வதாக நடைபெறும் விழா இது.

திருமங்கை மன்னன் திருமாலை வழிபறிக்க முயன்றதைக் காட்டும் திருவிழாவுக்கும் அப்பெயர் உண்டு.

149. தமிழ் மணம் கமழ்வது கற்பூரத்திலா, கர்ப்பூரத்திலா ?

இரண்டிலும் கமழும். ஆனால், கருப்பூரம் என்பதில் மிகுதியாகக் கமழும். 'கருப்பூரம் நாறுமோ கமலப்பூ நாறுமோ' என்பது ஆண்டாள் திருவாக்கு.

150. ஆலத்தி, ஆரத்தி — இவற்றில் எது தமிழ்ச் சொல் ?

ஆரதி என்ற சொல்லின் திரிபே இரண்டும்.

151. இருவருடைய, இருவர்களுடைய—இந்த இரண்டில் எது சரியானது ?

இரண்டும் சரியே.

152. ஆயுள் வேதமா ? ஆயுர் வேதமா ?

இரண்டும் சரியே. ஆயுர்வேதம் என்பது வடமொழித் தொடர். ஆயுள்வேதமென்பது தமிழ் முறைப்படி வந்த தொடர்.

153. காய்கரி, காய்கறி, கரிகாய், கறிகாய் — இவற்றுள் எது சரி ?

காய்கறி, கறிகாய் இரண்டும் சரியானவை.

154. பரிதி, பருதி—இவற்றில் ஞாயிற்றைக் குறிக்கும் சரியான சொல் எது ?

பரிதி என்பது வடமொழிச் சொல்; அதுவே இயல்பானது; அது மாறிப் பருதி என்றும் வருகிறது. இரண்டும் இலக்கியங்களில் வருகின்றன.

155. கொலை என்பதற்கும் படுகொலை என்பதற்கும் உள்ள வேறுபாடு என்ன ?

படு என்பது மிகுதியைக் குறிக்க வரும் சொல். படுகுழி, படுபழி என்பன போன்ற தொடர்களில் அந்தப் பொருளையே தருவதைக் காண்க.

156. தொடங்கும், துவங்கும்—இவற்றில் எது சரி ?

தொடங்கும் என்பதே இலக்கியத்தில் வருகிறது. உலக வழக்கில் துவங்கும் என்றசொல்லும் வந்துவிட்டது. ஆதலின் இரண்டும் சரியே.

157. அயிராவதம், அயிராவணம் என்னும் இரண்டும் ஒன்று ?

அயிராவதம் என்பது இந்திரனுக்குரிய வெள்ளை யானை அயிராவணம் என்பது சிவபெருமானுக் குரிய யானை.

158. பொய்கை, குளம் — இரண்டுக்கும் வேறுபாடு உண்டா ?

பொய்கை என்பது மனிதர் ஆக்காத நீர்நிலை; குளம் மனிதர் வெட்டியது.

159. பட்டிமண்டபமா ? பட்டி மன்றமா ? எது சரி ?

'பட்டி மண்டபத்துப் பாங்கறித் தேறுமின்', 'பட்டி மண்டபம் ஏற்றினை ஏற்றினை'என்று பழைய நூல்களில் பட்டி மண்டபம் என்ற தொடரே வருகிறது. மண்டபம் என்பதற்குப் பதிலாக மன்றம் என்று அமைப்பதில் தவறு இல்லை. மண்டபம் : வடசொல்.

160. நிரோட்டம், நிரோட்டகம் இவற்றில் சரியான சொல் எது ?

நிரோட்டகம், நிரோட்டம் என்ற இரண்டும் சரி; நீரோட்டம் என்று நெடிலாக்கக்கூடாது. ஓஷ்டம் என்பது உதட்டுக்குப் பெயர். உதட்டுக்கு வேலை இல்லாமல் உச்சரிப்பதனால் அந்தப் பெயர் வந்தது. நிரோட்டக அந்தாதியை இதழகல் அந்தாதி என்றும் சொல்வார்கள்.

161. மன்றத்துக்கும் கழகத்துக்கும் உள்ள வேறுபாடு என்ன ?

இப்போது இரண்டுககும் வேறுபாடு இல்லை. முன்பு மன்றம் என்பது மரத்தடியில் கூடும் இடத்துக்குப் பெயராக வழங்கியது. கழகம் என்பது சூதாடும் இடத்தையும் குறிப்பது.

162. பாட்டுப் பாடுகிறான், பாட்டுப் படிக்கிறான்—இவற்றுள் எது சரி ?

திருநெல்வேலி மாவட்டத்தில் பாட்டுப் படிக்கிறான் என்பது வழக்கில் இருக்கிறது. பாட்டுப் பாடுகிறான் என்பதே நூல் வழக்கில் வரும். இசைக் கருவியை இயக்கும்போது வாசிக்கிறான் என்பது வழக்கு

163. முட்டைப் பூச்சி, மோட்டுப் பூச்சி இரண்டில் எது சரி ?

வீட்டின் முகட்டிலிருந்து விழுவதால் அதற்கு அந்தப் பெயர் வந்தது. முகட்டுக்கு மோடு என்பது ஒரு பெயர்; ஆதலின் மோட்டுப் பூச்சி என்பதே சரியான பெயர்.

164. மாட்டுப் பெண், நாட்டுப் பெண்—இரண்டில் எது சரி ?

மணாட்டுப் பெண் என்பதையே அவ்வாறு இருவகையில் வழங்குகிறார்கள். மணம் செய்து அழைத்து வந்த பெண்

என்பது பொருள். 'மருமகளாக் கொண்டு மஞ்ஞட்டுப்புறம் செய்யுங்கொலோ' என்பது பெரியாழ்வார் திருவாக்கு.

165. அமுதம், அமிழ்தம், அமிர்தம்—இவற்றுள் சரியான சொல் யாது?

அம்ருதம் என்ற வடசொல்லின் திரிபு இவை. மூன்றும் சரியே.

166. வெயில், வெய்யில்—இந்த இரண்டில் எது சரி?

வெயில் என்பது இலக்கிய வழக்கு; 'என்பி லதனை வெயில்போலக் காயுமே, அன்பி லதனை அறம்' என்பது குறள். வெய்யில் என்பது உலக வழக்கு. செய்யுளில் உலக வழக்கையும் சிறுபான்மை ஆள்வதனால், 'வெய்யிற் கேற்ற நிழலுண்டு' என்று பாடியவர்களும் உண்டு.

167. ராணி என்பதும் அரசாணி என்பதும் ஒரேபொருளை உடைய சொற்களா? அவை எப்படி வந்தன?

ராஜ்ஞீ என்பது ராஜா என்பதன் பெண்பால். அதுவே ராணி என்று வந்தது. ராஜா என்பது அரசன் என்று வந்ததுபோல, ராஜ்ஞீ என்பது அரசாணி என்று வந்தது. இரண்டும் ஒரே பொருளையுடைய சொற்களே.

168. சுறுசுறுப்பு, சுருசுருப்பு—இரண்டையும் எழுதுகிறார்களே; எது சரி?

இரண்டும் சரியே. ஆனாலும் சுறுசுறுப்பு என்ற சொல்லின் ஒலியிலே சுறுசுறுப்பு இருப்பதனால் அதை வழங்குவது சிறப்பு.

169. பருந்துகழு கென்று பகர்வர்தமிழ் மக்கள்
இருந்தஇவை ஒன்ரு இரண்டா ?—விருந்
தாகத், தப்பிதமில் கட்டுரைகள் தந்த விடைய
வனே, செப்புமின் நல்விடையைத் தேர்ந்து.

பருந்தெனும்புள் வேறு; கழுகாம் பறவை
இருந்திடும்வே றுமென் றியம்பு.

170. உழுந்தென் றுளுந்தென் றுரைப்பதனைக் கண்டேன்
பழுதெதுவோ ? ஏனோ? பகர்வீர்—பொழுதெல்லாம்,
கன்னித் தமிழில் கதை, கவிதை, கட்டுரைகள்,
பன்னும் விடையவனே பார்த்து.

உழுந்தென்னும் சொல்லே உளதிலக்கி யத்தில்;
அழுந்துபட வேவழக்கில் ஆர்ந்து—வழங்குவது
மற்றை யுருவம்; வரும்ழளவின் ஒற்றுமையால்
உற்றதிது வென்றே உணர்.

171. மங்களம், மங்கலம் என்ற இரண்டு சொற்களும் வேறு வேரு ?

இரண்டும் ஒன்றே. லகர ளகர ஒற்றுமை பற்றி இரு வேறு விதமாக வழங்குகின்றன.

172. வீதி, தெரு—இவற்றுள் எது சரி ?

இரண்டும் சரியே. வீதி என்பது வரிசை, ஒழுங்கு என்னும் பொருளுடைய வடசொல். தெரு என்பது தமிழ்ச் சொல்.

173. புரிமணையா, பிரிமணையா—எது சரி ?

புரிமணை என்பதுதான் சரி. வைக்கோல் புரியைச் சுற்றி மணையாக அமைப்பதால் வந்த பெயர்.

174. அவ்வையார், ஔவையார்—எது சரி ?

ஔவையார் என்பதே சரி. எதுகைபற்றி அவ்வையார் என்று பாடலில் சில சமயம் வரலாம்.

175. ஆணை, கட்டளை—இந்தச் சொற்களுக்குள் வேறு பாடு உண்டா ?

ஆணை என்பது ஆஜ்ஞா என்ற வடசொல்லின் திரிபு; கட்டளை என்பது தமிழ்ச்சொல்.

176. திருமதி, ஸ்ரீமதி, சௌபாக்கியவதி இவை மூன்றில் ஒரு பெண்ணைக் குறிப்பிடும்பொழுது எது பொருத்தமாக இருக்கும் ?

முன்பெல்லாம் எல்லாப் பெண்களையும் ஸ்ரீமதி என்றும், தம்மினும் வயசு குறைந்தவர்களைச் சௌபாக்கியவதி என்றும் சொல்லி வந்தார்கள். இப்பொழுதும் சிலர் அந்த வழக்கை ஆளுகிறார்கள். ஸ்ரீமதி என்பது வடமொழியாக இருப்பதால் தமிழாக்க வேண்டுமென்று கருதிய சிலர் திருமதி என்று எழுதுகிறார்கள். ஸ்ரீமான் என்பதைத் திருவாளர் என்று மொழிபெயர்த்தார்கள்; அது பழைய இலக்கியத்தில் கண்ட சொல்தான். ஆனால் ஸ்ரீமதி என்பதற்குச் சரியான மொழி பெயர்ப்பு, திருமதி அன்று; திருவாட்டி என்பதே சரி.

177. ஞாயம் என்று எழுதுவது சரியா ? நியாயம் என்பது சரியா ?

நியாயம் என்பது இலக்கணத்தோடு பொருந்திய வடிவம்; ஞாயம் என்பது உலக வழக்குச் சொல். உலக வழக்குச் சொல்லும் அருமையாக இலக்கியத்தில் வருவதுண்டு.

178. காவிரி, காவேரி—எது சரி ?

இரண்டும் சரி. தமிழில் காவிரியென்றும் வடமொழியில் காவேரி என்றும் வழங்கும். கவேரனுடைய மகள் ஆற்றின் வடிவில் வந்தமையால் காவேரியாயிற்று என்று வடமொழியாளர் காரணம் கூறுவர். செல்லும் இடந்தோறும் பொழில்களை வளர்ப்பதனால் காவிரியாயிற்று என்று தமிழ் முறையில் காரணம் கூறுவர். 'மலைத்தலைய கடற்காவிரி' என்று பத்துப் பாட்டிலும், 'நடந்தாய் வாழி காவேரி'

என்று சிலப்பதிகாரத்திலும் இரண்டு வடிவங்களும் வந்துள்ளன.

179. கவிஞர், பாவலர்—இரண்டுக்குமுள்ள ஏற்றத் தாழ்வினை விளக்குக.

இரண்டும் ஒரே பொருளுடையன. முன்னையது வடசொல் திரிந்தது. பின்னது தமிழ்.

180. மெல்ல, மெள்ள—இவற்றில் எந்தச் சொல் மெதுவாக என்ற பொருளைத் தருகின்றது ?

இரண்டுக்கும் ஒரே பொருள்தான். மெல்ல என்பதே வழக்கில் மெள்ள என்று வருகிறது.

181. முன்னூறு ரூபாய், முந்நூறு ரூபாய்–எது சரி ?

மூன்று நூறு என்பதைக் குறிக்கும்போது முந்நூறு என்பதே சரி.

182. கோயில், கோவில்; கட்டிடம், கட்டடம் – இவற்றில் எவை சரியானவை ?

யாவும் சரியானவையே. கோவில் என்பது விதியின்படி அமைந்தது. கோயில் என்பது புறநடையால் அமைந்தது. கட்டிடம் என்பது இருசொல் அடங்கிய தொடர்; கட்டு இடம் என்பன இணைந்தது. கட்டடம் என்பது கட்டப்பட்டது என்ற பொருளுடைய தனிச்சொல்.

183. குஞ்சியும் கூந்தலும் ஒரே பொருள் தருவதாயினும் குஞ்சி என்று வரும் இடத்தில் கூந்தல் என்று எழுதுவது பிழை என்கிறார்களே; எவ்வாறு ?

ஆண்களின் கேசத்தைக் குஞ்சி என்றும் பெண்களின் கேசத்தைக் கூந்தல் என்றும் கூறுவது பெரும்பான்மை மரபு. சிறுபான்மை குஞ்சி என்பது மகளிர் கூந்தலுக்கும்

வரும். 'கோதையர் குஞ்சியுள் தெளிக்கும் தீர்த்தமும்' என்பது தேவாரம்.

184. முப்பழம், திரிகடுகம் என்ற இரண்டும் ஒன்ரு ?

வாழை, மா, பலா மூன்றும் முப்பழங்கள்; கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய் என்பவை திரிகடுகம்.

185. முரிதல், முறிதல் — இவ்விரண்டிற்கும் உரிய பொருள் வேறுபாடு என்ன ?

முரிதல்—வளைதல்; முறிதல் ஒடிந்து போதல்.

186. பண்பாடு, பண்பு-இரண்டும் ஒன்ரு ?

இரண்டும் வெவ்வேறு. பண்படுதல் என்ற பொருளை உடையது, பண்பாடு என்னும் சொல். அதில் பண் என்றும் பாடு என்றும் இருவேறு சொற்கள் உள்ளன. பண்பு என்பது நல்ல குணத்தைக் குறிக்கிறது. அது பிளவுபடாத தனிச் சொல்.

187. இராமன் என்ற சொல்லை மரியாதையாகச் சொன்ஞல் இராமஞர் என்றுதான் சொல்ல வேண்டுமா? இராமர் என்று சொல்வது தவரு ?

தவறு அன்று; சங்க காலத்துப் புலவர்களாகிய கபிலர், பரணர் என்பவர்களின் பெயர்கள் கபிலஞர், பரணஞர் என்று வழங்கவில்லை. இராமர், இராமஞர் என்று இரண்டு வகையாகவும் சொல்லலாம். ஆஞல் இராமஞர் என்பது திட்டமாக ஒருவரையே குறிக்கும். இராமர் என்பது ஒருவரையும் குறிக்கலாம்; பல இராமர்களையும் குறிக்கலாம்

188. ஸ்ரீராமஜெயம், ஸ்ரீராமஜயம்—இரண்டில் எது சரி ?

ஸ்ரீராமஜயம் என்பதே சரி.

189. பவாநி, பவானி—இவற்றில் எது சரி ?

இரண்டும் சரியே. அது வடசொல்லாதலின் அதிலுள்ள படியே பவாநி என்று எழுதலாம்; தமிழில் வழங்குவதனால் தமிழுக்குரிய சிறப்பெழுத்தையிட்டுப் பவானி என்றும் எழுதலாம்.

190. கொடி பற்றிப் படரும் கொம்பு கொளுகொம்பா, கொழுகொம்பா ? மேற்கோள் தருக.

'தாவிப் படரக் கொழுகொம் பிலாத தனிக்கொடி போல்' என்பது கந்தரலங்காரம். கொழுகொம்பு என்பதே சரி. கொள்கொம்பு என்றும் வழங்கும்; 'கொள்கொம் பொடியக் கொடிவீழ்ந் ததுபோல்' என்பது கம்ப ராமாயணம்.

191. கோயம்புத்தூர், கோயமுத்தூர் — இவற்றில் எது சரி ?

கோவன் என்பவன் அமைத்த புதிய ஊராதலின் கோவன் புத்தூர் என்று தோன்றி நாளடைவில் கோயன் புத்தூர், கோயம்புத்தூர் என்று மாறியது. கோசர்கள் என்பவர்கள் அமைத்த புத்தூர் ஆதலின் கோசன் புத்தூர் என்று இருந்து பிறகு கோயம்புத்தூர் என்று மாறியது என்றும் சொல்வர். எந்த வகையிலும் கோயம்புத்தூர் என்று வழங்குவதே சிறப்பு.

192. 'வேட்டகத்துக்குப் போயிருக்கிறான்' என்பதில் வேட்டகம் என்ற சொல்லைப் பிரித்து எழுதி விளக்கம் சொல்ல வேண்டுகிறேன்.

வேட்ட அகம் என்னும் சொற்கள் இணைந்து வேட்டகம் என்றாயின. வேட்டல் என்பது மணம் செய்துகொள்ளுதலைக் குறிக்கும். திருமணம் செய்துகொண்ட மாமனார் வீடு என்ற பொருள் அமைந்தது.

193. இருபத்தியைந்து: முப்பத்தியாறு, நாற்பத்தியேழு என்று சிலர் எழுதுகிறார்கள். இவை சரியா?

இருபது ஐந்து என்ற இரண்டும் சேர்ந்தால் இருபத்தைந்து என்றுதான் வரும்; அப்படியே முப்பத்தாறு, நாற்பத்தேழு என்று எழுதுவதுதான் சரி.

194. இலக்கியம், இலக்கணம் என்ற இரண்டு சொற்களும் ஒன்றாக எங்கேனும் வருகின்றனவா?

அகத்திய சூத்திரம் என்று வழங்கும் ஒன்றில், 'எள்ளினின் றெண்ணெய் எடுப்பது போல, இலக்கியத்தினின் றெடுபடுவ திலக்கணம்' என்று வருகிறது. அதன் நடையைப் பார்க்கும்போது அது பழைய சூத்திரமென்று உறுதியாகச் சொல்ல முடியாது, ஆனால் நன்னூலில் 'இலக்கியங் கண்டதற் கிலக்கணம் இயம்பலின்' என்று வருகிறது.

195. 'தேமேண்ணு இரேன்' என்கிறார்களே; அதன் பொருள் என்ன?

'தெய்வமே என்று இருப்பாயாக' என்பது பொருள். 'தெய்வமே என்று' என்ற தொடரே 'தேமேண்ணு' என்று, பேச்சு வழக்கில் சிதைந்துவிட்டது. சும்மா இரு என்ற பொருளில் வழங்குகிறது.

196. நாணயம் என்பது ரூபாய் நாணயத்தையும் ஒரு மனிதனின் நேர்மையையும் குறிக்கிறது; நாநயமா, நாணயமா?

நாநயம் என்பதே நாளடைவில் மருவி நாணயமாயிற்று. மரூஉ மொழிகள் இலக்கண விதிப்படி மாறும் என்பது இல்லை. நயம் என்பதற்கு நீதி என்று பொருள் உண்டு. நியாயமான சொல்லையுடைமைக்கு நாநயம் என்று வழங்கி, அப்பால் அதற்குக் காரணமான பண்பையும் குறிக்கலாயிற்று.

197. மகடூஉ முன்னிலை என்பது என்ன?

மகடூஉ என்பதற்குப் பெண் என்று பொருள். புலவர்கள் ஒன்றைச் சொல்லும்போது ஒரு பெண்ணை நோக்கிச் சொல்வதுபோலப் பாடுவது வழக்கம். அப்போது அந்தப் பெண்ணை விளிப்பார்கள். அதை மகடூஉ முன்னிலை என்று சொல்வார்கள். நீதி நூல்களிலும் யாப்பருங்கலக் காரிகையிலும் மகடூஉ முன்னிலை மிகுதியாக வரும். ஆடவரை முன்னிலைப் படுத்திப் பாடுவது ஆடூஉ முன்னிலை.

198. செங்கோட்டியாழ் என்பதற்கும் திருச்செங் கோட்டுக்கும் ஏதேனும் தொடர்பு உண்டா?

கோடு என்பது யாழின் தண்டுக்குப் பெயர். வளையாமல் நேரான கோட்டையுடைய யாழுக்கு அப்பெயர் அமைந்தது. திருச்செங்கோட்டுக்கும் அதற்கும் ஒரு தொடர்பும் இல்லை.

199. 'கண்ணீரும் கம்பலையுமாக நின்றான்' என்பதில் வரும் கம்பலை என்பதன் பொருள் என்ன?

கம்பலை என்பதற்கு நடுக்கம் என்பது ஒரு பொருள். ஓசை என்னும் ஒரு பொருள் உண்டு. அழுகையும் கூச்சலுமாக நிற்றலைக் குறிப்பதனால் கம்பலை என்பதற்கு ஓசை என்று பொருள் கொள்வது சிறப்பு; 'வம்ப மாக்கள் கம்பலை மூதூர்' என்று மணிமேகலை அடியில் அப்பொருளில் வருவது காண்க.

200. எடுப்பு, தொடுப்பு, முடிப்பு என்பன தியாகையரவர்களுக்கு முன் இல்லை; ஆழ்வார் நாயன்மார் பாடல்களில் நிச்சயமாக இல்லை; சரியா?

சரியே; பல்லவி, அநுபல்லவி, சரணம் என்ற மூன்றுக்கும் இப்போது ஏற்படுத்திக்கொண்ட தனித் தமிழ்ப்பெயர் அவை. பல்லவி முதலிய உறுப்புக்களையுடைய கீர்த்தனங்களை முதலில் உண்டாக்கியவர் புரந்தரதாசர்.

201. துஷ்ட சதுஷ்டயம் என்ற தொடருக்குப் பொருள் என்ன ?

நான்கு துஷ்டர்கள் சேர்ந்த குழு என்று பொருள். பாரதத்தில் வரும் துரியோதனன், துச்சாதனன், சகுனி, கர்ணன் என்னும் நால்வரையும் இந்தத் தொடரால் குறிப்பது வழக்கம்.

202. வடக்கனந்தல், கனகனந்தல், நரியந்தல் என்றால் என்ன?

அந்தல் என்று வழங்கினாலும் அது ஏந்தல் என்பதன் திரிபு. வடக்கனேந்தல், கனகனேந்தல், நரியேந்தல் என்பவையே சரியான பெயர்கள். ஏந்தல் என்பது ஏரிக்குப் பெயர். ஏரிக்கு அருகில் ஊர் இருப்பதனால் அந்தப் பெயர்கள் வந்தன. மழவராயனேந்தல், சொக்கனேந்தல் என்று வழங்கும் பெயர்களையும் காண்க.

203. கண்ணுள் வினைஞர் என்ற பெயர் எவருக்கு உரியது?

ஓவியர்களின் பெயர். தம்முடைய ஓவியங்களை நம் கண்ணில் நிற்கும்படி செய்வதனால் அப்பெயர் வந்தது.

204. அகராதி என்ற பெயர் எப்படி உருவாயிற்று ?

அகாராதி க்ஷகாராந்தம் என்பது வடமொழி வழக்கு. அகரம் முதல் க்ஷகாரம் வரையில் என்பது பொருள். அதுவே அகராதி என்று வந்தது. அகரம் முதல் வரிசையாக உள்ள எழுத்துக்களை முதலாகவுடைய சொற்களின் தொகுப்புக்கு அகராதி என்ற பெயர் வருகிறது.

205. வெண்பொற் காசுகள் என்பதன் சரியான பொருளை விளக்க வேண்டுகிறேன்.

வெள்ளியாலான காசுகள் என்பது பொருள்; வெண்பொன்–வெள்ளி. ரூபாயை இப்போது இவ்வாறு வழங்குகிறார்கள்.

206. நந்தனார் சரித்திரத்தை ஒரு பாகவதர் கதாகாலட்சேபமாகச் செய்தார். அதை ஹரிகதை என்று விளம்பரப்படுத்தினார்கள். சிவபக்தர் கதை எப்படி ஹரிகதை ஆகும் ?

நந்தனார் சரித்திரம் சிவகதை. கதாகாலட்சேபங்களில் சிவகதை, ஹரிகதை என்று இரு வேறு பிரிவு உண்டு. இப்போது தவறாக எல்லாவற்றையும் ஹரிகதை என்று சொல்கிறார்கள்.

207. மஹிள ஸமாஜம் என்பதை மகளிர் கழகம் என்று மொழிபெயர்த்திருக்கிறார்கள். அப்படியானால் மஹிளா என்பதே மகளிர் என்று ஆயிற்றா ?

மக, மகன், மகள் என்று தமிழில் ஒரு வேர்ச் சொல்லிலிருந்து பல சொற்கள் வந்துள்ளன. மகள் என்பது பன்மையில் மகளிர் என்று வந்தது. மஹிளா என்பதற்கும் மகளிர் என்பதற்கும் சொல்லால் எந்தத் தொடர்பும் இல்லை.

208. தேவகுசுமம் என்பது என்ன ?

கிராம்புக்குப் பெயர்.

209. மைக்கா நாள் என்று அடுத்த நாளைக் குறிப்பிடுகிறார்களே; அது எப்படி வந்தது ?

மற்றும் நாள் என்பதன் திரிபு; மற்று ஆம் நாள் என்பதே அது.

210. அப்பழுக்கு என்கிறோமே, இதில் அப்பு என்பதன் பொருள் யாது ?

அப்பு என்பது அப்பிக் கொண்டது என்ற பொருள் தரும்; இயல்பாக உடம்பில் உள்ளது அழுக்கு; அழுக்குள்ள பொருளைச் சார்ந்ததனால் உண்டானது அப்பு.

211. கடிகாரம் என்பது எந்த மொழிச் சொல்?

கடிகாஹாரம் என்ற வடமொழித் தொடரின் திரிபு.

212. பஞ்சாங்கம் என்று பெயர் வந்ததற்குக் காரணம் என்ன?

திதி, வாரம், நட்சத்திரம், யோகம், கரணம் என்ற ஐந்தையும் தெரியப்படுத்துவதனால் அப்பெயர் வந்தது.

213. 'தேரை மோந்த தேங்காய்'—இத் தொடரின்பொருளை விளக்குக.

தேங்காயின் உள்ளீடெல்லாம் இல்லாமல் போக்கும் நோய் ஒன்றுக்குத் தேரை என்று பெயர். அது சார்ந்த தேங்காயில் உள்ளே ஏதுமில்லாமல் இருக்கும் என்பதை அத் தொடர் குறிக்கிறது.

214. 'அவள் எவனையும் ஏறெடுத்துப் பார்த்ததில்லை' என்பதில் வரும் ஏறு என்பது எதைக் குறிக்கிறது?

ஏற எடுத்துப் பார்த்தல் என்று பிரிக்கவேண்டும். தலை எடுத்துப் பார்த்தலையே அது குறிக்கிறது. ஏற இறங்கப் பார்த்தல் என்று கூறும்போதும் ஏறப் பார்த்தல் வருகிறது.

215. சங்கின் ஒரு வகைக்கு வலம்புரி என்று பேர் கூறுகிறார்கள். இங்கே புரி என்பதற்குப் பொருள் என்ன? வலம்புரி விநாயகர் என்பதில் புரி என்பதற்கு என்ன பொருள்?

புரி என்பது முறுக்கும் பொருளுக்கும் சுழிக்கும் பொருளுக்கும் வரும் பெயர். சில சங்குகள் வலமாகச் சுழிந்திருப்பதனால் வலம்புரிச் சங்குகள் என்ற பெயர் பெற்றன. சில விநாயகர் உருவங்களில் துதிக்கை வலம்

பக்கத்தே வளைந்திருக்கும்; அதனால் வலம்புரி விநாயகர் என்று சொல்வார்கள்.

216. பத்தாம் பசலி என்றால் என்ன ?

மிகப் பழையது, இப்போது உதவாதது என்ற பொருளில் இத்தொடர் வழங்குகிறது. பசலி என்பது கி. பி. 591 முதல் தொடங்கும் ஆண்டுக் கணக்கு. பத்தாம் பசலி என்பது கி. பி. 600-ஐக் குறிக்கும். ஆகவே, பழையது என்ற பொருளை உடையதாயிற்று.

217. 'அரவநெடுங் கடலாடை' என்பதில் அரவத்தையுடைய கடல் என்று பொருள் கொள்வது தவறா ? சரியான பொருள் என்ன ?

அரவத்தையுடைய கடல் என்பது தவறு அன்று. ஆனால், அரவம் என்பதற்கு ஓசை என்று பொருள் கொள்ள வேண்டும்.

218. 'சாவா மூவாப் பேராளன்' என்கிறார்களே; அதற்குச் சரியான பொருள் என்ன ?

சாவா என்பது இறவாத என்னும் பொருளை உடையது. மூவா என்பது மூப்பை அடையாத என்ற பொருளை உடையது. சாவதும் இன்றி முதுமையை அடைவதும் இன்றி எப்போதும் இளமையோடே இருக்கும் பெரியவன் என்று அத் தொடருக்குப் பொருள் கொள்ள வேண்டும். இறைவன் அத்தகையவன்.

219. நெல்லும் புல்லும் என்று சேர்த்துச் சொல்லும் போது புல் என்பது மாட்டுக்கு உணவாகிய புல்லைத்தான் குறிக்கிறதா ?

புல் என்பதற்குப் பல பொருள் உண்டு. நெல்லோடு சொல்லும்போது புல் என்பது புன்செய்த் தானியங்களைக் குறிக்கிறது.

220. கோடி காட்டுதல் என்றால் என்ன ?

கோடி என்பது முனை என்னும் பொருளையுடையது. ஒன்றன் இயல்பைத் தெரிந்துகொள்ளச் சிறிதளவு குறிப்பாகக் காட்டுவதைக் கோடி காட்டுதல் என்று சொல்கிறார்கள்.

221. கட்டிக் கரும்பு என்று வழங்குவது எதனால் ?

கட்டி என்பது கற்கண்டுக்குப் பெயர்; சர்க்கரைக்கட்டி என்றும் சொல்வர். கற்கண்டு உண்டாக்குவதற்கு ஏற்ற உயர்ந்த சாதிக் கரும்பைக் கட்டிக் கரும்பு என்று சொல்லி வந்தார்கள்.

222. 'இல்லவே இல்லை' என்று சொல்லுகிறோமே, இது எப்படி வந்தது ? இவ்வாறு எழுதுவது பிழையா ?

அல்லவே அல்ல என்று சொல்லுவதைப் பார்த்து இல்லவே இல்லை என்று வந்தது. இப்படி ஒன்றைப் பார்த்து அது போன்றதாக எண்ணித் தவறாகப் பிரயோகம் செய்வதை ஒப்புமை வழு (Error of Analogy) என்று ஆங்கிலத்தில் கூறுவர். தைலாபிஷேகம் என்று சொல்வதைப் பார்த்துப் பாலாபிஷேகம் என்று சொல்வதைப் போன்றது இது. முன்னது இலக்கணப்படி சரி. பின்னது தவறு. ஆனாலும் பல காலமாக வழக்கில் வந்துவிட்டால் அவற்றைப் புலவர்கள் எடுத்து ஆள்வார்கள். இலக்கியம் கண்டதற்கு இலக்கணம் இயம்புவது மரபு. ஆகவே, இலக்கியத்தில் ஏறிய பிறகு அதைச் சரியென்றே கொள்ள வேண்டும். அந்த வகையில் 'இல்லவே இல்லை' என்பது இல்லை என்பதை வற்புறுத்தும் பொருளில் வழக்கில் மிகுதியாக வழங்கி நிலைத்துவிட்டமையால், அப்படி எழுதுவது தவறு அன்று.

223. பாரி மகளிரை இருங்கோ வேளின்பாற்படுத்தும் பொருட்டுக் கபிலர் பாடிய பாடல் ஒன்றில், 'வடபால் முனிவன் தடவினுள் தோன்றி' என்று வருகிறது. அதன் விளக்கம் யாது ?

வடக்கே சம்புமா முனிவன் ஒரு யாகம் செய்ய, அந்த யாக குண்டத்திலிருந்து தோன்றியவனை முதல்வனுகப் பெற்றது இருங்கோ வேள் பிறந்த குடி. அந்த முனிவனையே இந்த அடி சுட்டுகிறது.

224. 'தொழுனை யாற்றில் தூமணி வண்ணனை, விழுமம் தீர்த்த விளக்குக்கொல்'—சிலம்பில் வரும் வரிகளில் குறிப்பிடப்பட்டவர்கள் யார் யார் ? வரலாறு யாது ?

'யமுனை ஆற்றில் மணிவண்ணனுகிய கண்ணனுடைய துன்பத்தைத் தீர்த்த நப்பின்னைப் பிராட்டியோ' என்று ஆய்மகளிர் கூறுவதாக அமைந்த பகுதி இது. கண்ணன் நப்பின்னையால் காதலின்பம் நுகர்ந்த வரலாற்றைக் குறிப்பது இது.

225. நற்றிணை 328-ஆம் செய்யுளில், 'எண்பிழி நெய்யொடு வெண்கிழி வேண்டாது' என வருகிறது. விளக்க வேண்டும்.

விறலி ஆடுவதற்கு முன் எண்ணெய் பெற்றுத் தலையை வாரிக்கொண்டு வெள்ளைத்துகில் பெறுவது வழக்கம். அவற்றைப் பெறுமலே அவள் ஆடுகிறுள் என்று இந்தப் பாட்டில் வருகிறது. எண் பிழி நெய்-எள்ளைப் பிழிந்தெடுத்த எண்ணெய்; எண்-எள்; வெண்கிழி-வெள்ளைத் துகில்.

226. திருக்குறளில் மருந்தென்னும் அதிகாரத்தில் இரண்டாம் குறள் உரையில், 'குறிகளாவன யாக்கையின் நொய்ம்மை, தேக்கின் தூய்மை...' முதலிய விளக்கங்கள் வருகின்றன. இவற்றுள் தேக்கு என்பது யாது ?

ஏப்பத்தைக் குறிப்பது. தூய்மையான ஏப்பமாக இருந்தால் அது நோயின்மையைப் புலப்படுத்தும்.

227. 'நூலும் கோலும் குடையும் கரகமும்' என்பதில் கரகம் என்ற சொல்லின் பொருள் யாது ?

கமண்டலம் என்பது பொருள்; குண்டிகை என்றும் சொல்வர்.

228. காவடிச் சிந்தில் முதற் பாட்டில், 'திருவுற் றிலகு கங்கை வரையில் புகழ் மிகுந்து' என்று வருகிறது. இமயம் வரையில் என்று கூறாமல் கங்கை வரையில் என்று கூறியதில் என்ன சிறப்பு இருக்கிறது ?

அந்தப் பாடம் தவறு. 'திருவுற்றிலகு கங்க வரையிற் புகழ்மிகுந்து' என்று இருக்க வேண்டும். கங்கவரை என்பது கழுகு மலையின் பெயர். கங்கம்-கழுகு. காவடிச் சிந்து கழுகு மலையில் எழுந்தருளியிருக்கும் முருகனைப் பாடிய நூல்.

229. 'சாதி யிரண்டொழிய வேறில்லை' என்ற பாட்டில், 'பட்டாங்கி லுள்ள படி' என்று வருகிறது; பட்டாங்கு என்பதற் குப் பொருள் என்ன ?

பட்டாங்கு என்பது உண்மை என்ற பொருளையுடையது. இங்கே உண்மை நூலைக் குறித்து நின்றது.

230. 'அறம் செய விரும்பு' என்பதன் சரியான பொருள் யாது ?

தர்மம் செய்ய விரும்பு என்பதே பொருள். அறம் என்பது ஈகைமட்டும் அன்று. மனிதன் செய்யத் தகுவன என்று விதிக்கப்பட்டன யாவும் அறம்.

231. திருவாசகத்தில், 'உற்றாரை யான் வேண்டேன்' என்று தொடங்கும் பாடலில், 'கற்பனவும் இனி அமையும்' என்று வருகிறதே; அதன் பொருள் என்ன ?

கற்பவை இனிப் போதும் என்பது பொருள்.

232. 'கந்தமல ரிற்கடவுள் தன்வரவு காணும், இந்திர னென' என்று கம்பராமாயணத்தில் கையடைப் படலத்தில் வருகிறது. கஞ்ச மலர் என்று தாமரையைச் சொல்லக் கேட்டிருக்கிறேன. இங்கே கந்த மலர் என்று வருகிறதே, எப்படி ?

மலர் என்பதே தாமரையைக் குறிக்கும் சொல். கந்தம் என்பது அதற்கு அடை; மணம் என்ற பொருளுடையது. மணம் உள்ள தாமரை மலர் என்பது பொருள்.

233. 'கூன் கொண்டு சென்றவன்...மாதவனே'-இதன் பொருளை விளக்குக.

இந்தப் பாட்டின் திருத்தமான பாடம் வருமாறு: "கூனென்று சென்றவன் தான்நிமிர்ந் தோடக் குருடன் கொம்புத், தேனென்று காட்ட முடவன் குடங்கொண்டத் தேன்பிழியத், தான்நின்ற ஊமை தனக்கென்று கேட்கத் தருவர்வரம், வான்நின்ற சோலை புடைசூழ் வடமலை மாதவரே." திருவேங்கடமுடைய பெருமாள் தம்மைப் பணிவாருடைய உறுப்புக் குறைகளை நீக்கியருள்வார் என்ற கருத்தைத் தொடர்ச்சியாக அமையும்படி இணைத்துப் பாடியது இது.

234. ஏற்பது இகழ்ச்சி என்ற ஔவையார் ஐயமிட்டுண் என்று சொன்னர்; முரண்பாடு அல்லவா ?

ஏற்பது இகழ்ச்சி என்பது உண்மையானலும் உலகில் வறியவர்கள் இருக்கத்தான் இருக்கிறர்கள். அவர்களுக்கு உதவுவது கடமை. கேளாமலே கொடுப்பதும் உண்டு. அப்போது ஏற்காதவர்களுக்கும் ஐயம் கிடைக்கும்.

235. 'ஐந்தவித்தா னாற்றல் அகல்விசும்பு ளார்கோமான், இந்திரனே சாலும் கரி' என்று திருக்குறள் சொல்கிறது. இந்திரன் புலனடக்கத்துக்காகப் புகழ் பெற்றவன் அல்ல. அப்படியிருக்கப் புலன்களை அடக்கிய

வர்களின் ஆற்றலுக்கு இந்திரனை எடுத்துக்காட்டாகச் சொல்லியிருப்பது எவ்வாறு பொருந்தும் ?

ஐந்து அவித்தவனாகிய கௌதம முனிவரால் சாபம் பெற்றவன் இந்திரன். சாபம் பெற்று ஐந்தவித்தானுடைய ஆற்றலைத் தெரிந்துகொள்ளச் செய்தானாகலின் இவ்வாறு கூறினார். 'தான் ஐந்து அவியாது சாபம் எய்திநின்று, அவித் தானது ஆற்றல் உணர்த்தினானாகலின் இந்திரனே சாலும் கரி என்றார்' என்று இதைப் பரிமேலழகர் விளக்கியிருக்கிறார்.

236. 'புலையன் எறிந்த பூசற் றண்ணுமை, ஏவல் இளையர் தாய்வயிறு கரிப்ப' என்ற தொடரின் பொருளையும், எந்த நூலில் வருவது என்பதையும் அறிவிக்க வேண்டும்.

இந்தச் செய்யுட்பகுதி எந்த நூலில் இருக்கிறதென்று தெரியவில்லை. பல உரையாசிரியர்கள் ஒருமை பன்மை மயக்கத்துக்கு இதை உதாரணம் காட்டுகிறார்கள். 'ஏவல் இளையர் தாயர் வயிறு' என்று இருக்க வேண்டுவது தாய் என இருப்பதனால் இதனைக் காட்டுகிறார்கள். 'போர் தொடங்குவதற்கு முன்பு, புலையன் அடித்த போரைக் குறிக்கும் முரசொலியினால், அம்பிலே வன்மையுடைய இளைய வீரர்களின் தாய்மார்களின் வயிறு பொரும'என்பது பொருள். கரிப்பு – பொருமல்.

237. 'எண்ணிய சகாத்தம் எண்ணூற்
றேழின்மேல் சடையன் வாழ்வு
நண்ணிய வெண்ணெய் நல்லூர்
தன்னிலே கம்ப நாடன்
பண்ணிய இராம காதை
பங்குனி உத்த ரத்தில்
கண்ணிய அரங்கர் முன்னே
கவியரங் கேற்றி னானே'

என்ற பாடலை இயற்றியவர் யார்? 'எண்ணிய சகாத்தம் எண்ணூற்றேழு' என்பதன் பொருள் என்ன ?

இப்பாடலைச் செய்தவர் யாரென்று தெரியவில்லை. சாலிவாகன சகாப்தம் 807இன் மேல் என்பது ஒரு பொருள். எண்ணுகிற நூற்றேழின் மேல் என்று கொண்டு 1107இன் மேல் என்பது ஒரு பொருள். ஆயிரத்துக்கு மேல் எண்ணு கின்ற என்று வருவித்துப் பொருள் கொள்ள வேண்டும்.

238. இடைக்காடர் ஊசிமுறியில்,

ஆற்றங் கரையின் அருகிருக்கு மாமரத்தில்
காக்கை யிருந்து கஃறென்னக் - காக்கைதனை
எய்யக்கோல் இல்லாமல் . . . என்றனே
வையக்கோ னின் மகன்'

என்று வரும் பாடலில் மூன்றுவது அடியில் மூன்று பூஜ்யத்துக்கு விளக்கம் என்ன ?

அங்கே 'இச்இச்இச் சென்றனே' என்று சில பதிப்புக் களில் காணப்படும். காச்கையை ஓட்டும் ஒலியைக் குறிக்கும் இடம் அது. அதை அப்படியே எழுத்தில் எழுத முடியாது. அதனால்தான் இந்தப் பாட்டு எழுத்தாணியினால் எழுத முடியாத ஊசிமுறிப் பாட்டாயிற்று.

239. விபீஷணன் இராமனை முதலில் தரிசித்தபோது, 'கார்முகில் கமலம் பூத்த தன்றிவன் கண்ணன் கொல்லாம்' என்று கூறுவதாகக் கம்பன் பாடுகிறன். கண்ணன் என்பது கிருஷ்ணனைக் குறிக்கும் பெயர் அல்லவா? இராமன் காலத்தில் கிருஷ்ணனைச் சொல்வது காலவழுவாகாதா ?

கண்ணன் என்பது கரிய திருமால் என்ற பொருளை யுடையது. கண்ணனைப் போன்ற நாராயணன் என்றும்

கொள்ளலாம். கிருஷ்ணனைக் குறிப்பதாகக் கொள்ள வேண்டிய அவசியம் இல்லை.

240. இராமலிங்க சுவாமிகள் இயற்றிய ஸ்ரீராம நாமத் திருப்பதிகத்தில் வரும் ஒரு பாட்டில் பூவை என்று வருகிறது. பூவை என்பது பூவரசம் பூவைக் குறிக்கிறதா ?

'அறம்பழுக்கும் தருவேஎன் குருவே என்றன்
ஆருயிருக் கொருதுணையே யரசே பூவை
நிறம்பழுக்க அழகொழுகும் வடிவக் குன்றே.'

காயாம் பூவைக் குறிக்கும் ; அது நீல நிறம் உடையது.

241. 'ஆன்முலை யறுத்த' என்று தொடங்கும் புறநானூறு 34-ஆம் பாடலில், 'அறம்பா டிற்றே ஆயிழை கணவ' என்ற அடியில் வரும் அறம் என்பது எந்த நூலைக் குறிக்கிறது ?

பண்டை அற நூலைக் குறிக்கிறது. சிலர் திருக்குறளைக் குறிப்பதாகக் கொள்வர்.

242. பாரதியார், 'மங்கியதோர் நிலவினிலே' என்று தொடங்கிப் பாடிய அழகுத் தெய்வத்தைப் பற்றிய கவிதையில் 'நாலிலே ஒன்றிரண்டு படித்திடலாம் என்றாள்' என்பதன் பொருள் என்ன ?

'ஞாலத்தில் விரும்பியது நண்ணுமே என்றேன்
நாலிலே ஒன்றிரண்டு பலித்திடலாம் என்றாள்'

என்பது அந்த பகுதி. பலித்திடலாம் என்பதே சரியான பாடம். விரும்பியதில் கால் பகுதியோ அரைப் பகுதியோ பலிக்கும் என்பது பொருள்.

243. 'பெருமனைக் கிழத்திக்கு, நெல்லிரு நாழி நிறையக் கொடுத்தாங், கெண்ணான் கறமும் இயற்றி' என்று சிதம்பர

மும்மணிக் கோவையில் வருகிறது. நாழி என்பது எவ்வளவு? முப்பத்திரண்டு அறங்கள் எவை ?

நாழி என்பது சிறிய படி ஒன்று அல்லது பட்டணம் படியில் பாதி என்று தெரிகிறது.

முப்பத்திரண்டு அறங்களாவன: ஆதுலர் சாலை, ஓதுவார்க்கு உணவு, அறு சமயத்தார்க்கு உணவு, பசுவுக்கு வாயுறை, சிறையில் உள்ளோருக்குச் சோறு, பிச்சை, நடைத் தின்பண்டம், குழந்தைக்குச் சோறு அளித்தல், மகப்பெறுவித்தல், குழந்தையை வளர்த்தல், குழந்தைக்குப் பால் தருதல், அநாதைப் பிணம் சுடுதல், கெட்டுப் போனவரை மீண்டும் உயரச் செய்தல், வண்ணார் நாவிதர்க் களித்தல், திருமணம், பூணூல் செய்வித்தல், நோய் மருந்து, கண்ணாடி, நாளோலை, கண் மருந்து, தலைக்கு எண்ணெய் அளித்தல், பெண் போகம், சமைத்து ஊட்டுதல், பிறர்அறம் காத்தல், தண்ணீர்ப் பந்தல், மடம், குளம், சோலை, ஆவுறிஞ்சுதறி அமைத்தல், ஏறு விடுத்தல், விலையுயிர் கொடுத்துக் கொலையுயிர் மீட்டல் என்பவை.

244. 'பாலத்துச் சோசியனும்—கிரகம்,
படுத்தும் என்று விட்டான்'

என்று பாரதியார் பாடுகிறார். பாலத்துச் சோசியன் என்பவர் யார் ?

பாரதியார் திருநெல்வேலிச் சீமைக்காரர். பாலம் என்றது திருநெல்வேலியிலுள்ள தாமிரபரணிப் பாலத்தை. அதன் அருகே உள்ள இடத்தைத் திருநெல்வேலிப் பாலம் என்பர். அங்கே முன்பு யாரேனும் புகழ்பெற்ற சோதிடர் இருந்திருப்பார்.

245. 'சாதம் ஒழிக்கும் அம்புயம்என் தலைமேல்
இருக்கும் புதுமலரினம்'

இதில் சாதம் என்பதற்கு என்ன பொருள் ?

சாதம்—பிறப்பு; வடசொல் திரிபு.

246. ''மங்கை யழலும் வாஞட்டு
மயில்கள் அழுதார்; மழவிடையோன்
பங்கில் உறையும் குயில்அழுதாள்;
பதும மலர்மேல் மாதழுதாள்,
கங்கை அழுதாள்; நாமடந்தை
அழுதாள்; கமலத் தடங்கண்ணன்
தங்கை அழுதாள்; இரங்காத
அரக்கி மாரும் தளர்ந்தழுதார்.''

(கம்பராமாயணம்)

இந்தப் பாடலில் 'மழவிடையோன் பங்கில் உறையும் குயில்' என்பது பார்வதியைக் குறிக்கும் என்று தோன்றுகிறது. ஆகவே, 'கமலத்தடங் கண்ணன் தங்கை' என்ற தொடரின் பொருள் என்ன ?

கண்ணன் தங்கையாகப் பிறந்த துர்க்கை என்று பொருள் கொள்ள வேண்டும். பார்வதியும் துர்க்கையும் சக்தியின் வேறு வேறு அம்சங்கள்.

247. மணிமேகலையில் வரும் மணிபல்லவத் தீவு இப்போது இருக்கிறதா ?

யாழ்ப்பாணத்தைச் சார்ந்த நயினு தீவு என்பதே மணி பல்லவத் தீவு என்று சொல்கிறுர்கள். தக்க சான்றுகளால் நிறுவப் பெறவில்லை.

248. 'வங்கக் கடல் கடைந்த மாதவனை' என்று ஆண்டாள் பாடியது வங்காளக் குடாக் கடலைக் குறிப்பதா ?

வங்கம் என்பது கப்பலைக் குறிக்கும் சொல். கப்பல் ஓடும் கடல் என்று பொருள் கொள்ள வேண்டும்.

249, 'உம்பர்தருத் தேனுமணிக் கசிவாகி' என்ற திருப்புகழ் அடிக்குப் பொருள் என்ன ?

உம்பர் தருவாகிய கற்பகம், காமதேனு, சிந்தாமணி இந்த மூன்றும் கேட்டவற்றையெல்லாம் தரும். அவற்றின் சாரத்தைப் போல விநாயகரும் கேட்டவற்றைத் தருவார் என்பதைக் குறிக்கிறது. உம்பர்தரு – கற்பகம்; தேனு – காமதேனு; மணி - சிந்தாமணி; கசிவு - சாரம்.

250. 'முக்காலுக் கேகாமுன் முன்னரையில் வீழாமுன்' என்ற தனிப் பாடலில் 'முன்னரையில் வீழாமுன்' என்ற தொடரின் பொருள் என்ன ?

'முக்காலுக் கேகாமுன் முன்னரையில் வீழாமுன்
அக்கா லரைக்கால்கண் டஞ்சாமுன் – விக்கி
இருமாமுன் மாகாணிக் கேகாமுன் கச்சி
ஒருமாவின் கீழரையின் றேது'

என்பது பாடல். முக்கால், அரை, கால், அரைக்கால், இருமா, மாகாணி, ஒருமா, கீழரை என்ற பின்ன எண்கள் தொனிக்கப் பாடியது. 'மூன்று காலால் நடக்கும் முதுமைப் பருவத்தை அடைவதற்கு முன், முதுமையைத் தோற்றி, முன் அடையாளமாக வரும் நரையிலே வீழ்வதற்கு முன், அந்த யமனை மூச்சுக் காற்றுக் கண்டு அஞ்சி நிற்பதற்கு முன், விக்கி இருமுவதற்கு முன், பெரிய இடமாகிய சுடுகாட்டுக்குப் போவதற்கு முன், காஞ்சிபுரத்தில் ஒற்றை மாமரத்தின் கீழே எழுந்தருளியிருக்கும் பெருமானை இன்று சொல்வாயாக' என்பது பொருள். முன் நரையில் வீழாமுன் என்று பிரித்துப் பொருள் செய்ய வேண்டும்.

251. திருவள்ளுவர் பரத்தையர், சூது பற்றி எச்சரிக்கை செய்துள்ளாரே; இவை அவர் காலத்துக்கு முன்பே இருந்தனவா?

ஆம். அதனால்தான் அவற்றின் தீமையைக் குறித்துப் பாடியிருக்கிறார்.

252. பாரதியார் தம் புதிய ஆத்திசூடியில் 'கோல் கைக் கொண்டு வாழ்' என்கிறார். அதன் பொருள் என்ன ?

கோல் என்பது அரசனுடைய செங்கோலைக் குறிப்பது. அது ஆட்சியைக் குறித்து நின்றது இங்கே. 'நம்முடைய நாட்டின் அரசாட்சியை நாமே பெற்று வாழ வேண்டும்' என்ற கருத்துடையது அந்த வாக்கியம்.

253. கந்தர்சஷ்டி கவசத்தில், 'ஒருநாள் முப்பத் தாறுருக் கொண்டு, ஓதியே செபித்து உகந்துநீறணியில்' என்ற வரிகளில் குறிக்கப்பட்ட பொருள் தினமும் முப்பத்தாறு முறை ஓத வேண்டும் என்பதா ?

முப்பத்தாறு உரு என்பது முப்பத்தாறு முறை செபிப்பதை உணர்த்துவதுதான்.

254. 'குணங்கள் அஞ்சாற் பொலியும் நலச்சேட்டைக் குலக்கொடி' என மாணிக்கவாசகர் காக்கையின் குணங்களைக் கூறியுள்ளார். ஐவகைக் குணங்களைத் தெளிவுபடுத்த வேண்டுகிறேன்.

'காலை எழுந்திருத்தல் காணாமை லேவுணர்தல்
மாலைக் குளித்து மனைபுகுதல் – சாலவே
உற்றாரோ டுண்ணல் உறவாடல் இவ்வைந்தும்
கற்றாயோ காக்கைக் குணம்'

என்ற பாட்டில் அந்த ஐந்து குணங்களும் உள்ளன.

255. 'எருவிட்டு இறைஞ்சி' என்று மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழில் வருகிறது. இது எந்த வழக்கத்தை விளக்குவது ?

பிறையை வணங்கும் கன்னிப் பெண்கள் உலர்ந்த சாணத்தை அதன் முன் உதிர்ப்பது ஒரு வழக்கமென்று தெரிய வருகிறது. சந்திரன் பயிர்களை வளர்ப்பவனாதலால் பயிருக்கு உதவும் எரு விட்டு இறைஞ்சினார்கள் போலும்!

256. 'நரிப்பாய் நானும் இருப்பேனோ' என்பதில் வரும் நரிப்பு என்பதற்குச் சிறுமை என்று பொருள் சொல்கிறார்கள். அது பொருந்துமா ?

பொருந்தும். நரி என்பது சிறுமையைக் குறிக்க இணைக்கும் சொல். நரிப்பயறு, நரிக்குழி என்பவற்றை வழக்கிலே கேட்கலாம்.

257. 'இம்மை யறையனைய வேசூர மாதருமா, இம்மை யுமை யிம்மையையோ வென்செய்த — தம்மைமதன், மாமாமா மாமாமா மாமாமா மாமாமா, மாமாமா மாமாமா மா' — இந்தப் பாடல் திருவருட்பாவில் வெறி விலக்கு *என்ற* **தலைப்பின்கீழ் வருகிறது. இதன் பொருள் என்ன ?**

தலைவி களவுக் காலத்தில் தலைவனைப் பிரிந்திருத்தலைத் தாங்காமல் மெலிவுற்றபோது அவளுடைய தாயும் பிறரும் பூசாரியை அழைத்து வந்து, ஆட்டைப் பலி கொடுத்துத் தெய்வத்துக்குப் பிரீதி பண்ணச் சொல்கிறார்கள். அப்போது தோழி அதை விலக்குகிறாள். பூசாரியைக் கொண்டு செய்யும் இதற்கு வெறியாட்டு என்று பெயர். ஆவேசம் வந்து ஆடுவாதனால் அப்பெயர் வந்தது. அதை விலக்குவது வெறி விலக்கு என்னும் துறை. அகப்பொருள் துறைகளில் ஒன்று. இம்மையல் தையல் நைய - தலைவனிடம் கொண்ட இந்த மோகத்தால் தலைவி வருந்த, ஏசு ஊர மாதரும் பெண்களும் பலவகையான பழிச் சொல்லைப் பரவச் செய்ய, ஆ - என்ன வியப்பு, இம் மை—இந்த ஆடு, உமை-உங்களை, இம்மை - இப் பிறப்பில், ஐயோ என் செய்தது-ஐயோ பாவம்! என்ன செய்தது? (ஒன்றும் செய்யாத இதை வெட்டலாமா?), அம்மை—தாயே மதன்-(இதைக் கண்டு) மன்மதன், மாமாமா மாமா-அஞ்சுமா (அஞ்சுவானா?), மாமாமா மாமாமா-(இவள் துன்பம் இதனால்) ஆறுமா, மாமா மாமா மாமா மாமா-(இந்தப் பரிகாரம் தலைவனுக்கு) எட்டுமா ?

பின் இரண்டடிகளில் பத்தொன்பது மாக்கள் இருக்கின்றன. அவற்றை மூன்றாகப் பிரித்து, அஞ்சுமா, ஆறுமா, எட்டுமா என்று குறிப்பாகப் பாட்டில் பொருள் செய்து கொள்ள வேண்டும்.

258. 'விடங்கொண்ட மீனைப் போலும்' என்று தொடங்கும் பாடல் முழுவதையும் தெரிவிக்க வேண்டுகிறேன். அது கம்பராமாயணத்தில் உள்ளதா?

'விடங்கொண்ட மீனைப் போலும்
வெந்தழல் மெழுகு போலும்
படங்கொண்ட பாந்தள் வாயிற்
பற்றிய தேரை போலும்
திடங்கொண்ட ராம பாணம்
செருக்களத் துற்ற போது
கடன்கொண்டார் நெஞ்சம் போலும்
கலங்கினு னிலங்கை வேந்தன்'

என்பது அந்தப் பாடல். அது கம்பர் வாக்கன்று; தனிப் பாடல்.

259. பாரதியார் பாடலில் 7-ஆவது பாரத தேசம் என்னும் பாட்டில், 'பள்ளித் தலம்அனைத்தும் கோயில் செய்குவோம்' என்றும், பின்பு, 'ஆலைகள் வைப்போம் கல்விச் சாலைகள் வைப்போம்' என்றும் குறிப்பிட்டிருக்கிறுர். முதலில் வருவதற்கு, பள்ளிகளைக் கோவிலாக்குதலென்பதுதான் கருத்தா?

பள்ளிக் கூடங்களைக் கோயில்களைப் போலப் புனிதமான இடங்களாக மதித்துப் பாதுகாப்போம் என்பது பொருள்.

260. புறநானூற்றில் ஒக்கூர் மாசாத்தியார் பாடிய, 'கெடுக சிந்தை கடிதிவள் துணிவே' என்ற பாடலில் வரும், 'மேனுள் உற்ற செருவிற் கிவடன்னை' என்னும் வரியில் காணும், 'இவடன்னை' என்பதையும், குறுந்தொகையில் 20-ஆவது பாட்டில் வரும், 'என்னை யின்றியும் கழிவது கொல்லோ' என்னும் வரியில் வரும் 'என்னை' என்பதையும் பிரித்துப் பொருள் கூறுக.

இவள் தன்னை - இவள் தமையன். என் ஐ-என் தலைவன் (காதலன்).

261. 'திண்ணம் இரண்டுள்ளே சிக்க அடக்காமல், பெண்ணின்பால் ஒன்றைப் பெருக்காமல்—உண்ணுங்கால், நீர் கருக்கி மோர்பெருக்கி நெய்யுருக்கி உண்பவர்தம், பேருரைக்கிற் போமே பிணி.' இப் பாடலை இயற்றியவர் யார் ? இதன் பொருள் யாது ?

தேரையர் பாடியது என்பர். இரண்டு என்பது மலசலம். அவற்றை அடக்கக் கூடாது. பெண் போகத்தை மிகுதியாகச் செய்யக் கூடாது. ஒன்று என்பது விந்து. நீரைக் காய வைத்து, மோரை நீர்விட்டுப் பெருக்கி, நெய்யை உருக்கி உண்ண வேண்டும்.

262. 'காணி நிலம் வேண்டும்' என்ற பாரதியார் பாடலில் வருகிற காணி என்பது என்ன அளவு ? அதற்கு வேறு பொருள் உண்டோ ?

நிலத்தின் அளவைக் குறிப்பதாகவே கொள்ள வேண்டும். காணி என்பது கிட்டத்தட்ட 1·32 ஏகரா.

263. திருப்பாவைப் பாடல் ஒன்றில் வரும், 'தீக்குறளைச் சென்றோதோம்' என்ற அடி எதைக் குறிக்கிறது ?

'தீக்குறளை சென்றோதோம்' என்பது சரியான பாடம். தீய கோள் சொற்களைச் சென்று சொல்லமாட்டோம் என்பது பொருள். குறளை-புறங்கூறும் சொல்.

264. 'சரணகமலாலயத்தில் அரைநிமிஷ நேர மட்டில்' என்று அருணகிரியார் பாடுகிறாரே. அவர் காலத்தில் மணி, நிமிஷம் என்ற கணக்கு வந்து விட்டதா?

இமையைக் கொட்டும் காலத்துக்கு நிமேஷம் என்று பெயர்; அதுதான் இப்போது ஸெகண்ட் என்று சொல்லும் கால அளவு. ஒரு மாத்திரையளவு அது. அதைத்தான் நிமிஷம் என்று அருணகிரியார் குறித்தார்.

265. 'உலகத்தோ டொட்ட ஒழுகல் பலகற்றும், கல்லார் அறிவிலா தார்' என்ற குறளில் 'பலகற்றும் கல்லார்' என்ற இரண்டையும் எவ்வாறு அமைத்துப் பொருள் கொள்வது?

பல கற்றும், உலகத்தோடு ஒட்ட ஒழுகல் கல்லார் அறிவிலாதார் என்று வைத்துப் பொருள் செய்தால் தெளிவாகும்.

266. சிதம்பர சுவாமிகள் இயற்றிய மீனாட்சி அம்மை கலிவெண்பாவில் கடைசியில், 'சிவலோகத்தைந்தருவே' என்று வருகிறது. ஐந்தரு என்பவை யாவை?

ஐந்து வகையான தேவ விருட்சங்களைக் குறிக்கிறது. அவை மந்தாரம், பாரிஜாதம், சந்தானம், கல்பவிருட்சம், ஹரிசந்தனம் என்பன.

267. பாரதியார் பாடிய சீட்டுக் கவி ஒன்றில், 'சொல்லிலே நிகரில் லாத புலவர்நிற் சூழ லுற்றால், எல்லினைக் காணப் பாயும் இடபம்போல் முற்ப டாயோ?' என்று வருகிறது. எல் என்பதற்கு என்ன பொருள் கொள்ள வேண்டும்?

இருட்டிலிருந்து ஒளியை நோக்கிப் பாயும் விடையைப் போல என்று பொருள் கொள்வது சிறப்பு; ஆகவே, எல் என்பதற்கு ஒளி என்று பொருள் கொள்ளவேண்டும்.

268. பாரத வெண்பாவில் துரியோதனனை, 'தன்னெச்சில் தானுண்ணுத் தன்மையான்' என்று கர்ணன் கூறுவதாக வருகிறது. இதற்கு விளக்கம் என்ன?

இது துரியோதனனுடைய செல்வச் சிறப்பைக் குறிப்பிப் பது. அவன்முன் வெவ்வேறு கலங்களில் வெவ்வேறு உணவுப் பண்டங்களை வைத்திருப்பார்கள். ஒரு முறை ஒரு கலத்தி லிருந்து ஒரு பிடி எடுத்து உண்டுவிட்டால் அக்கலத்திலுள் ளது அவன் எச்சிலாகி விடுகிறது. ஆகவே, அதை அப்படியே விட்டுவிட்டு வேறு கலத்திலுள்ளதை எடுத்து உண்பானும். ஒரு கலத்தில் உள்ளதை ஒரு முறையே எடுத்து உண்பான்.

269. ஆதிபகவன் என்பது கடவுளைக் குறிக்கிறதா? திருவள்ளுவருடைய பெற்றேரைக் குறிக்கிறதா?

கடவுளையே குறிக்கிறது.

270. 'அகரமுத லெனவுரைசெய், ஐம்பத்தொ ரட்சரமும்' என்று திருப்புகழில் வருகிறது. ஐம்பத்தொரட்சரம் என்பன யாவை?

வடமொழி நெடுங்கணக்கில் உள்ள ஐம்பத்தொரட்சரங் களையே அது குறிக்கிறது. உயிர் எழுத்துக்கள் 16, பஞ்ச வருக்கம் 25, ய, ர, ல, வ, ள, ச, ஷ, ஸ, ஹ, க்ஷ என்பவை.

271. 'செவியிற் கண்டு கண்ணிற் கூறி. இருநிலம் புரக்கும் ஒருபெரு வேந்தன்' என்ற சிதம்பர மும்மணிக் கோவை அடிகளில் வரும் 'செவியிற் கண்டு' என்பதன் பொருள் என்ன? செவியிற் காண்பது எங்ஙனம்?

காதினுல் கேட்டு அறிதல் என்பது பொருள். ஒற்றுக்களா லும் வேறு வகைகளாலும் ஆராய்ந்து அவர் கூறுபவற்றைக்

கேட்டு அறிவது அரசர் கடமை. அதையே இத் தொடர் குறிக்கிறது.

272. ஈழநாட்டுக் காப்பியமான இரகுவம்சம் என்ற நூலில் கீழ்க்கண்ட பாடல் இருப்பதாக அறிகிறேன். இதற்கு விளக்கம் தர வேண்டுகிறேன்:

'இட்ட மெத்திய வெய்யவர் இடுக்கண்வந் திறுத்தால்
முட்ட வத்தலைப் பகைவரா குவரென முன்னோர்
பட்டு ரைத்தன காட்டுமா பானுவாற் பரியும்
கட்ட கட்டலைக் கொட்டைவான் சரோருகக்
களையே.'

சூரியனுடைய கதிரால் மலர்ச்சி பெற்று வளர்ந்த தாமரை, வயலில் களைபோல முளைத்திருக்க, அதைப் பறித்துப் போட்டுவிட்டார்கள். அப்போது அதற்கு நன்மை செய்த சூரியனுடைய கதிரே வாடச் செய்கிறது. இந்தக் காட்சியை ஒரு நீதியுடன் இந்தப் பாட்டுச் சொல்கிறது. விருப்பம் மிக்கவராக இருந்த கொடியவர்கள், துன்பம் வந்து கூடினால் முழுவதும் அப்போது பகைவராய் விடுவார்கள் என்று முன்னோர்கள் அநுபவத்தால் அறிந்து கூறியவற்றை உண்மை என்று காட்டுவதுபோல, சூரியனால், களையாகக் களையப்பட்ட, கள்ளைத் தன்னிடம் கொண்ட கர்ணிகையையுடைய சிறந்த தாமரையாகிய களைகள் துன்பத்தை அடையும். மெத்திய—மிகுதியான. வெய்யவர் என்பது பொல்லாதவரென்றும் சூரியரென்றும் இரு பொருள்பட நின்றது. இறுத்தால் - அடைந்தால். முட்டமுற்ற. அத்தலை—அப்போது. பட்டு- அநுபவித்து. காட்டுமா - காட்டுவது போல. பரியும் - துன்பத்தை அடையும். கட்ட - களையாகப் பறித்த. கள் தலை. கொட்டை - கர்ணிகை. வான் - பெருமை. சரோருகம் — தாமரை.

273. 'சென்னிமலை வேலவர்க்குச் சேர்ந்தகொம்பி ரண்டுண்டு, கன்னிகுற வள்ளிக்குக் காலில்லை— முன்னமே, ஆட்டுக்குக் கொம்பில்லை ஆனைக்குக் காலில்லை, பாட்டுக்குள் ஆராய்ந்து பார்'—இந்தப் பாட்டு எதில் உள்ளது? பொருள் யாது?

எழுத்தின் வடிவத்தைக் கொண்டு பாடிய தனிப்பாடல் இது. சென்னிமலை வேலவர் என்ற பெயரில் செ, வே என்ற எழுத்துக்களில் கொம்புகள் இருக்கின்றன; அந்தப் பெயரில் இரண்டு கொம்புகளைக் காணலாம். இப்படியே வள்ளி என்று எழுதினால் கால் வாங்கும் எழுத்து இல்லை. ஆடு என்று எழுதினால் அதில் கொம்புள்ள எழுத்து இல்லை. ஆனை என்பதில் கால் உள்ள எழுத்து இல்லை.

274. சிறுத்தொண்டர், 'மூவினம் உடையோம்' என்று கூறியதாகப் பெரிய புராணம் சொல்கிறது; மூவினம் என்பன யாவை?

ஆடு, பசுமாடு, எருமை என்பவை; இவற்றை முந்நிரை என்றும் கூறுவதுண்டு.

275. அருணசலக் கவிராயர் பாடியதாகப் பின் வரும் பாடலைத் தனிப்பாடல் திரட்டில் கண்டேன்:

'வாமாதூ போகே மனமே துதுதுதுது
ஆமா பசுமாதை அத்தனார்—தாமாய்
நடித்தவர் பாகர் நடந்தவர் வேணி
முடித்தவர் கங்கணர்கேண் மோ.'

வாது நடித்தவர், மாதுபாகர், தூது நடந்தவர், போது வேணி முடித்தவர், கேது கங்கணர் என்று கூட்டிப் பொருள் எழுதியிருக்கிறார்கள். முதலடியில் உள்ள ஐந்து துக்களுக்கும் தனியே பொருள் உண்டா? அவற்றை இந்தப் பாட்டிலுள்ள வேறு சொற்களுடன் இணைத்துப் பொருள் கொள்ளலாமா?

பாட்டின் முதலில் உள்ள வாமாதூரபோகே என்ற ஐந்து எழுத்துக்களோடும் தனித் தனியே ஒவ்வொரு துவையும் சேர்த்து, அப்படி வரும் சொல்லோடு நடித்தவர் முதலிய ஐந்து சொற்களையும் இணைத்துப் பொருள் கொள்வதுதான் முறை. இது நிரனிறை என்னும் அலங்காரம். முதல் அடியில் வந்தது எழுத்து நிரனிறை.

276. அருட்பிரகாச வள்ளலாரின், 'மாற்றறியாத செழும் பசும் பொன்னே' எனத் தொடங்கும் பாட்டில், 'விச்சையில் வல்லவர் மெச்சும் விருந்தே' என்று வருகிறது. விச்சை என்பதன் பொருள் என்ன?

விச்சை என்பது வித்தை என்பதன் திரிபு. பல வகையான சித்தி முதலியவற்றை விச்சை என்பதனுல் குறிப்பது வழக்கம்.

277. மான்றிருண்ட போழ்தில் வழங்கல் பெரிதின்ன' என்ற இன்னு நாற்பதில் வரும் பகுதிக்குப் பொருள் யாது? வழங்கல் என்ற சொல்லுக்குச் செல்லுதல் என்பது பொருந்துமா? கொடுத்தல் என்று கொள்ளுவதால் ஏற்படும் தவறு என்ன?

'மயங்கி இருண்ட பொழுதில் ஒளியும் துணையும் இன்றி நடந்து செல்லுதல் மிகவும் துன்பம் தருவது' என்று பொருள் கொள்ளவேண்டும். வழங்குதல் என்பதற்கு 'மாவழங்கு சுரம்' என்பதில் வருவதுபோலச் செல்லுதல் என்னும் பொருளும் உண்டு. கொடுத்தல் என்னும் பொருள் இந்த இடத்தில் பொருந்தவில்லை.

278. 'வெங்காயம் சுக்காளுல் வெந்தயத்தால் ஆவதென்ன, இங்கார் சுமந்திருப்பார் இச்சரக்கை—மங்காத, சீரகத்தைத் தந்தீரேல் வேண்டேன் பெருங்காயம், ஏரகத்துச் செட்டியா ரே.' இதற்குப் பொருள் தருக.

திருவேரகத்தில் எழுந்தருளியிருக்கும் முருகக் கடவுளே, வெம்மையான உடம்பு உயிரின்றிச் சுக்குப்போல் உலர்ந்து பிணமான பிறகு வெந்த அயமாகிய அய பஸ்மத்தால் ஆகும் காரியம் என்ன? இந்த உலகத்தில் இந்தப் பயனில்லாத பண்டத்தைச் சுமையாக யார் சுமந்துகொண்டிருப்பார்? தேவரீர் என்றும் அழியாத சிறப்பையுடைய மோட்ச வீட்டை அருளினால் இந்தப் பெரிய உடம்பை நான் விரும்ப மாட்டேன்.

279. 'எத்திசையு மேபரவு தக்கணு சலமுனி எதிர்த்தபா வலர்குடாரி' என்ற அருணாசலக் கவிராயர் சீட்டுக் கவியில் வரும் தக்கணுசல முனி யார்?

தென்மலையாகிய பொதிய மலையில் இருந்த அகத்திய முனிவர். தமிழ்ப் பெரும் புலவர் என்பதைக் குறிக்கத் தம்மை அவ்வாறு சொல்லிக்கொண்டார்.

280. 'அதிரா வினைகள் அறுப்பாய் போற்றி'– பொருள் வேண்டும்.

'எதனாலும் குலையாத பாவங்களை அறுப்பவனே, உனக்கு வணக்கம்' என்பது பொருள்.

281. 'பீரம் பேணிற் பாரந் தாங்கும்'-இதன் பொருள் என்ன?

தாய்ப்பாலை விரும்பி உண்டால் அந்தக் குழந்தை பிற்காலத்தில் கனமான சுமையையும் பொறுப்பையும் தாங்குவான் என்பது பொருள். பீரம்–தாய்ப்பால்.

282. 'ஆண்டியைக் கண்டால் லிங்கன்; தாதனைக் கண்டால் ரங்கன்' என்ற பழமொழியின் பொருள் என்ன?

ஆளுக்கு ஏற்றபடி வேஷம் போடுகிறவனைக் குறிக்க வந்தது அந்தப் பழமொழி. ஆண்டி சைவன்; அவனைக் கண்டால் அவன் மனம் உவக்கும்படி தன் பெயரை லிங்கன் என்று சைவப் பேராகச் சொல்வான். தாதன் என்பவன் வைணவத் தொண்டன்; அவனைக் கண்டால் தன் பெயர் வைணவப் பெயராகிய ரங்கன் என்பான் என்பது சொற்பொருள்.

283. 'ஆட்டுக்கு வால் அளந்துதான் வைத்திருக்கிறது' என்ற பழமொழியின் கருத்து யாது?

இறைவன் அவனவனுக்கு, ஏற்றபடி கருவிகளை அமைப்பான் என்ற கருத்தில் வழங்குவது. ஆடும் மாடும் இனமாக இருப்பவை; மாட்டுக்கு வால் நீளம்; ஆட்டுக்குக் குட்டை. பல வேலிகளில் புகுந்து மேயும் இயல்புடைய ஆட்டுக்குவால் நீளமாக இருந்தால் அது எங்கேனும் மாட்டிக் கொள்ளுமாதலால் இயற்கையில் அதன் வால் சிறியதாக அமைந்திருக்கிறது.

284. 'கறிவேப்பிலைக் கொழுந்து போல ஒண்ணே ஒண்ணு, கண்ணே கண்ணு' என்கிறார்களே, அதன் விளக்கம் என்ன?

கறிவேப்பிலைச் செடி எளிதில் முளைத்து வளர்வதில்லை; அதனால் அதை உவமை சொல்லும் வழக்கம் உண்டாயிற்று.

285. 'பாண்டியில் இரண்டும் பட்டியில் இரண்டும்' என்ற பழமொழியின் விளக்கம் யாது?

'பாண்டியில் இரண்டும் பட்டரில் இரண்டும்' என்பதே சரியான உருவம். பாண்டியில் இரண்டும் என்பது அதிவீரராம பாண்டியரையும், அவர் சகோதரர் வரதுங்கராம பாண்டியரையும் குறிப்பது. பட்டரில் இரண்டு என்பது சிவஞான முனிவரையும் அவர் மாணாக்கராகிய கச்சியப்ப

முனிவரையும் குறிப்பது. இப்பழமொழியே 'பாண்டியில் இரண்டும் ஆண்டியில் இரண்டும்' என்றும் வேறுபட்டு வழங்கும்.

286. 'பதினாறும் பெற்றுப் பெரு வாழ்வு வாழ்க!' என்று வாழ்த்துகிறார்களே; பதினாறு குழந்தைகள் என்பது பொருளா?

பதினாறு வகைப் பேறுகளைக் குறிக்கும். புகழ், கல்வி, வலிமை, வெற்றி, நன்மக்கள், பொன், நெல், நல்லூழ், நுகர்ச்சி, அறிவு, அழகு, பெருமை, இளமை, துணிவு, நோயின்மை, வாழ்நாள் ஆகியவை அவை.

287. 'கொன்றால் பாவம் தின்றால் போச்சு'—இதன் உட்கருத்து என்ன?

கொலை செய்த பாவத்துக்குக் கழுவாயாகப் பலருக்கு உணவு அளிக்க வேண்டும் என்பது கருத்தாக இருக்கலாம்.

288. 'முட்டாளுக்கு மோர் சாதம்' என்னும் பழமொழியின் கருத்து யாது?

முட்டாளுக்குச் சுவையுள்ள உணவு கொடுத்து உபசாரம் செய்ய வேண்டியதில்லை; அவன் ருசி பார்த்து உண்ணமாட்டான். பசியாற உணவு அளித்தால் போதும். வெறும் மோர் சாதம் படைத்தாலே போதுமானது என்பது கருத்து.

289. 'தமிழுக்கு முகம் இல்லை; வடமொழிக்கு வாய் இல்லை' என்கிறார்களே. இதன் பொருள் என்ன?

முகம் என்பது வடசொல். தமிழில் நெற்றி, தலை, வாய் முதலிய உறுப்புக்களுக்குரிய பெயர் இருப்பினும் முகம் என்பதைக் குறிக்கத் தனிச் சொல் இல்லை. வட மொழியில்

வாய் என்பதற்குத் தனியே ஒரு சொல் இல்லை. வாக்கு என்பதும் முகம் என்பதும் ஆகுபெயர்களாக நின்று வாயைக் குறிக்க வழங்குமேயன்றி, இயல்பாக ஒரு சொல் இல்லை. தமிழில் முஞ்சி என்று ஒரு சொல் முகத்துக்கு உண்டு என்று சொல்வதுண்டு. ஆனால் இழித்துக் கூறும்போது அது வழங்குமேயன்றி மற்றச் சமயங்களில் வழங்குவதில்லை.

290. 'கரணம் தப்பினல் மரணம்' என்ற பழமொழியின் பொருள் என்ன?

மூங்கிலின்மேல் நின்று கரணம் போடும் கூத்தாடி தவறினல் மரணம் உண்டாகும் என்று சிலர் பொருள் சொல்வதுண்டு. அதைவிடச் சிறந்த பொருள் உண்டு. களவிலே காதல் செய்த இருவர் பிறகு உலகறியத் திருமணம் செய்துகொண்டு வாழ்வது பழந்தமிழர் மரபு. நூல்களில் களவு, கற்பு என்று இந்த இருவகை வாழ்க்கையையும் புலவர் கூறுவர். களவிலே உள்ளம் ஒன்றுபட்ட காதலர்கள் மணம் புரிந்து கொள்ள இயலாத நிலை உண்டானல் இறந்து விடுவார்கள். கற்புக்குக் கேடு வருமென்று அஞ்சி இறப்பார்கள். இந்தக் கருத்தையே அந்தப் பழமொழி கூறுகிறது. கரணம் என்பது மணவினையைக் குறிப்பது.

'பொய்யும் வழுவும் புகுந்த பின்னர்
ஐயர் யாத்தனர் கரணம் என்ப'

என்பது தொல்காப்பியச் சூத்திரம்.

291. 'அவன் ஒரு பாட்டம் அழுது தீர்த்தான்', 'அவளுடைய ஆட்டம் பாட்டம் சொல்லி முடியாது'—பாட்டம் என்ற சொல்லுக்கு விளக்கம் கொடுங்கள்.

முதல் பாட்டத்துக்கு 'ஒரு முறை' என்று பொருள். மழை ஒரு முறை பெய்தால் 'ஒரு பாட்டம் பெய்தது' என்பர். அதை எண்ணி, 'ஒரு பாட்டம் அழுது தீர்த்தான்' என்று

சொல்லுகிறார்கள். நீண்ட நேரம் விடாமல் பெய்வதையே பாட்டம் என்பார்கள்.

ஆட்டம் பாட்டம் என்பதில் உள்ள பாட்டம் என்பது பாடலைக் குறிக்கிறது; ஆடல் பாடல் என்பதைப் போல ஆட்டம் பாட்டம் என்று வந்தது.

292. 'அவன் என்ன கொம்பனோ?' என்றும், 'அவனுக்கு என்ன, கொம்பு முளைச்சிருக்கோ?' என்றும் கூறுவதன் கருத்து என்ன?

ரிச்யசிருங்க முனிவர் அல்லது கலைக்கோட்டு முனிவருக்குத் தலையில் கொம்பு முளைத்திருந்தது. அவர் பெருந் தவத்தினர். அவர் சென்ற இடமெல்லாம் மழை பெய்யும். தசரதன் அவரை அழைத்து வந்து யாகம் செய்வித்துப் புதல்வர்களைப் பெற்றான். மற்றவர்களால் செய்வதற்கரியதைச் செய்பவன் என்ற பொருளில், 'கொம்பு முளைத்தவனோ?' என்று கூறுகிறார்கள்.

293. 'நம்பியான் வார்த்தது தீர்த்தம்' என்று பெரியவர்கள் சொல்லக் கேட்டிருக்கிறேன். பொருள் என்ன ?

இது ஒரு பழமொழி. நம்பியான் என்பது அர்ச்சகருக்குப் பெயர். அவர் எந்தத் தண்ணீரைத் தந்தாலும் அதைப் புனிதமான தீர்த்தமாகக் கொள்வார்கள். பெரியவர்கள் என்ன செய்தாலும் அதை உயர்ந்ததாக உலகம் கருதும் என்ற கருத்தை உடையது இந்தப் பழமொழி.

294. 'இலை மறைவு, காய் மறைவு' என்பதை விளக்க வேண்டுகிறேன்.

'இலைமறை காய்போல' என்பது பழமொழி. இலைக் கூட்டங்களுக்கு நடுவில் காயும் பச்சை நிறம் பெற்று மறைந்திருக்கும். அதைச் சற்று ஆராய்ந்து கண்டுபிடிக்க

வேண்டும். 'இலைமறைவு காய்மறைவாக ஆழம் பார்ப்பது' என்பதும் இலை மறைவில் காய் மறைந்திருப்பதை நன்றாகப் பார்த்துக் கண்டுபிடிக்க வேண்டும் என்ற கருத்தை உடையது. மேற்போக்காகப் பார்த்தால் தெளிவாகத் தெரியாத ஒன்றை ஆழ்ந்து கவனிக்க வேண்டும் என்பதே பொருள்.

295. 'கடபடா என்று உருட்டுகிறார்கள்' என்று சொல்கிறோம். என்ன பொருள் ?

கடம் என்பது குடம். படம் என்பது துணி. தர்க்க சாஸ்திரத்தில் கடத்தில் படம் இல்லை, படத்தில் கடம் இல்லை என்று சொல்வார்கள். இப்படிக் கடம், படம் என்ற சொற்களைச் சொல்லித் தர்க்க சாஸ்திரிகள் பேசும்போது மற்றவர்களுக்கு எளிதில் விளங்காது. அதனால், 'கடம் படம் என்று சொல்லி உருட்டுகிறார்கள்' என்று சொல்லும் வழக்கு வந்தது. அதுவே மாறி வேறு வகையில் வழங்குகிறது.

296. 'கல்லாடம் படித்தவர்களிடம் சொல்லாடாதே' என்பதில் குறிப்பிடும் கல்லாடம் என்ற நூல் எத்தகையது?

கல்லாடனார் என்னும் புலவர் அகத்துறையில் பாடிய நூறு அகவற்பாக்களை உடைய நூல் அது. திருக்கோவையாரிலுள்ள துறைகளை விரித்து அமைத்தவை அவை; திருவாலவாய்ப் பெருமானைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டது. இந்த நூலை இறைவன் திருமுன் அரங்கேற்றிய போது ஒவ்வொரு பாட்டுக்கும் ஒவ்வொரு முறை அப்பெருமான் தலையை அசைத்ததாக ஒரு வரலாறு வழங்குகிறது.

297. கணியன் பூங்குன்றனார் என்ற புலவர் பெயரில் வரும் கணியன் என்பது அவருடைய இயற்பெயரா ?

கணியன் என்பது சோதிடனைக் குறிப்பது; அது புலவருடைய இயற்பெயர் அன்று; அவர் சோதிடம் வல்லவராதலின் அந்தச் சிறப்புப் பெயர் அவருக்கு அமைந்தது. பூங்குன்றம் என்பது அவர் வாழ்ந்த ஊர்.

298. பெரிய புராணம் பாடிய சேக்கிழாருக்கு அந்தப் பெயர் இயற்பெயரா ? காரணப் பெயரானால் அதற்குக் காரணம் என்ன? இயற்பெயர் இன்னதென்று தெரியவில்லையா ?

சேக்கிழார் என்பது குலத்தின் பெயர். அவருடைய இயற்பெயர் இராமதேவர் என்பது கல்வெட்டினால் தெரிகிறது.

299. டாக்டர் உ. வே. சா. செய்யுள் நூல்கள் இயற்றியிருக்கிறார்களா ?

அவர்கள் பாடிய பாடல்கள் இரண்டு தொகுதிகளாக வெளிவந்துள்ளன. அங்கயற்கண்ணி மாலை முதலிய பிரபந்தங்களும் உண்டு. டாக்டர் உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம், திருவான்மியூர், சென்னை என்ற இடத்தில் கிடைக்கும்

300. நன்னூல் இயற்றிய பவணந்தி முனிவர் கொங்கு நாட்டைச் சேர்ந்தவரா ?

சனகாபுரம் என்ற ஊர் கொங்கு நாட்டில் உள்ளது. அங்கே பிறந்தவர் பவணந்தி.

301. 'படித்தவன் பாட்டைக் கெடுத்தான், எழுதியவன் ஏட்டைக் கெடுத்தான்' என்பது எதைப்பற்றிக் கூறுகிறது?

தவறாகப் படிப்பவனையும் தவறாக எழுதுபவனையும் எண்ணிச் சொன்னது. பிழைபட ஒரு பாட்டை ஒருவன்

கூறினால் பாட்டுப் பிழையானது என்று தோன்றும். பிழையாக எழுதியவனுடைய ஏடு ஒன்றுக்கும் பயன்படாது. இதையே இந்தப் பழமொழி சொல்கிறது. படித்தவனால் வரும் பேதம் பாட பேதம் எனவும் எழுதியவனால் வருவது பிரதிபேதம் எனவும் வழங்கும்.

302. எடுத்த காரியத்தை முடித்தே தீருவது என்று இருப்பவனைக் குறிக்க, 'கங்கணம் கட்டிக் கொண்டான்' என்கிறார்கள். கங்கணம் என்பதன் பொருள் என்ன? அது பழந்தமிழர் அணிகலனா?

கையில் அணியும் காப்புக்குக் கங்கணம் என்று பெயர். அது வடசொல். காப்புக் கட்டிக்கொள்வது, ஒரு செயலை முடிக்கிறவரைக்கும் வேறு செய்யமாட்டேன் என்று விரதம் இருப்பதற்கு அடையாளம். இதை எப்படியும் நிறைவேற்றுவேன் என்று தீர்மானம் பண்ணுவதையே அப்படிச் சொல்கிறார்கள்.

303. 'யானையுண்ட விளாங்கனி'—இந்தத் தொடரின் பொருளை விளக்குக.

விளாம்பழத்துக்கு ஆனை நோய் என்ற நோய் வரும். அப்போது விளாம்பழத்தில் உள்ள யாவும் இன்றி வெறும் ஓடு மாத்திரம் இருக்கும். யானை நோயைக் குறிக்கும்போது யானைக்குரிய அடைமொழிகளையும் சேர்த்துச் சொல்வது புலவர் மரபு. 'நெடுங்கை வேழம் துற்றிய வெள்ளிலே போல்' என்பது சிந்தாமணிப் பாட்டு.

304. 'சித்திரையப்பன் தெருவிலே' என்பதற்கு விளக்கம் தரவேண்டும்.

சித்திரா நட்சத்திரத்தில் பிறந்தவருடைய தந்தை வறுமையால் வாடுவார் என்ற பொருளுடையது அந்தப் பழமொழி. அது எந்த அளவுக்கு உண்மை என்பது வேறு விஷயம்.

305. 'நான்கு' பேர் மத்தியில் 'நான்கு பேர் மதிக்கும்படி' என்றெல்லாம் வழக்கில் வருகின்றனவே; அந்த நான்கு பேர் யார்? தாய், தந்தை, குரு, தெய்வமா? அல்லது வேறுயாரேனுமா?

பொதுவாகச் சில என்பதைச் சுட்டுவதற்கு நாலு என்றும், மிகச் சில என்பதைச் சுட்டுவதற்கு இரண்டு என்றும் சொல்வது தமிழர் வழக்கு. 'நாலும் இரண்டும் சொல்லுக் குறுதி' என்ற பழமொழி அதைச் சுட்டுகிறது. 'நாலு காசு கிடைத்துவிட்டால் துள்ளிக் குதிக்கிறுன்', 'இரண்டு ஊருக்குப் போனுல் உண்மை தெரிகிறது' என்பவை போன்ற இடங்களில் வரும் நாலு, இரண்டு என்ற சொற்கள், குறிப்பிட்ட அந்த எண்ணளவையே சுட்டுகின்றன என்று சொல்ல இயலாது. அந்த வகையில் பொதுவாகச் சிலர் மத்தியில் என்று சொல்லுவதையே, 'நாலு பேர் மத்தியில்' என்று சொல்கிறேம். 'நாலு பேர் போன வழி' என்று சொல்லும்போது சைவசமயாசாரியர் நால்வரைக் குறிப்பதாகக் கொள்வது சைவர்கள் மரபு.

306. 'திகைப்பூண்டை மிதித்தாற் போல' என்று சொல்கிருர்களே.-அதற்குப் பொருள் என்ன?

திகைப்பூண்டு என்பது தன்னை மிதித்தவர் மனத்தில் மயக்கத்தை உண்டாக்கிக் கலங்கச் செய்யுமாம். அதனுல் தெளிவின்றி மயங்குவதைக் குறிக்கும்போது இப்படிச் சொல்கிருர்கள்; திகை என்பது மயக்கத்தைக் குறிக்கும் சொல்.

307. வெள்ளிடை மலை என்பதற்கு விளக்கம் தருக.

வெள்ளிடை என்பது திறந்த வெளிக்குப் பெயர். திறந்த வெளியில் மலை இருந்தால் அது விளக்கமாகத் தெரியும். தெளிவாக உள்ளவற்றை வெள்ளிடை மலை என்று சொல்வது வழக்கம்.

308. எந்தப் புளுகும் கந்த புராணத்திலே' என்ற பழமொழி வழங்குகிறதே, அது எவ்வாறு பொருந்தும்?

'எந்தப் பொருளும் கந்தபுராணத்திலே' என்பதுதான் அதன் சரியான உருவம். பொருளைப் புளுகாக்கினது நம்முடைய திருவாக்கு!

309. 'ஏவா மக்கள் மூவா மருந்து'—இதன் பொருளை விளக்க வேண்டும்.

ஏவாமலே நாம் குறிக்கும் காரியங்களைச் செய்யும் மக்கள் மூப்பை மாற்றும் மருந்தாகிய அமிர்தத்தைப் போல்பவர்கள் என்பது பொருள்.

310. 'களவும் கற்று மற' என்பதில் வரும் களவு என்றது எதனை? இந்தத் தொடருக்கு என்ன பொருள்?

களவு நூல் என்ற ஒன்று உண்டு. கரவடர் என்பவர் ஸ்தேய சாஸ்திரம் என்ற ஒன்றை இயற்றினாராம். 'களவு நூல் தெரி வஞ்சனை' என்று திருப்புகழில் வருகிறது. திருடுகிற முறைகள் முதலியவற்றைச் சொல்வது அது. அதையும் நாம் கற்றுத் தெரிந்துகொள்ள வேண்டும்; களவு செய்வதற்கன்று; கள்வர்களைக் கண்டு பிடித்தற்கு. மதுரைக் காஞ்சியில் மதுரை மாநகர்க் காவலர்கள் காவல் நூலும் களவு நூலும் அறிந்து கொண்டிருந்தார்கள் என்ற செய்தி வருகிறது. 'களவு நூலைக் கற்றுக்கொள்; ஆனால் களவு செய்வதை மறந்து காவல் செய்வதற்கு அந்த அறிவைப் பயன்படுத்திக்கொள்' என்று பொருள் செய்யவேண்டும்.

311. 'ஊரில் ஒருவனே தோழன்; ஆரும் அற்றதே தாரம்' என்ற பழமொழிக்கு விளக்கம் தாருங்கள்.

பலர் நட்புடையவர்களாகத் தோன்றினாலும் உண்மையான உயிர்த் தோழன் ஒருவனே இருப்பான்; தனக்கு வேறு

பற்ருே உறவோ இல்லையென்றும், தன் கணவன் ஒருவனே பற்றென்றும் எண்ணியிருப்பவளே நல்ல மனைவி. இது பொருள்.

312. 'இடம் கொடுத்தால் மடம் பிடுங்குவான்' என்பதற்கு இரண்டு பொருள் உண்டா ?

பொல்லாதவனுக்குச் சிறிது இடம் கொடுத்தால் அவன் மெல்ல மெல்ல வீட்டையே பற்றிக்கொள்வான் என்பது ஒரு பொருள்.

இறைவனுக்கு உள்ளத்தில் இடம் கொடுத்தால் அவன் நம் அறியாமையை எடுத்துவிடுவான் என்பது மற்ருெரு பொருள்.

313. 'சம்பந்தன் தன்னைப் பாடுவான்; சுந்தரன் பொன்னைப் பாடுவான்; அப்பன் என்னைப் பாடுவான்.' இந்தப் பழமொழியின் கருத்து என்ன ?

இது சிவபெருமான் சொன்னது போல அமைந்திருக்கிறது. சம்பந்தர் ஒவ்வொரு பதிகத்தின் இறுதிப் பாட்டிலும் தம் புகழைச் சொல்லுவார். சுந்தரர் பொன்னும் பொருளும் வேண்டுமென்று பாடுவார். அப்பர் வாக்கில் இவை இல்லை; இறைவன் துதியாகவே இருக்கும். இந்தக் கருத்தையே அந்தப் பழமொழி குறிக்கிறது.

314. 'மூக்கால் அழுகிருன்.'—விளக்கம் வேண்டும்.

முணுமுணுக்கிருன் என்ற பொருளில் வழங்குகிறது. துன்பக் கண்ணீர் விடுகிருன் என்றும் பொருள் கொள்ளலாம். ஆனந்தக் கண்ணீர் கன்னத்தில் வழியுமென்றும் துன்பக் கண்ணீர் மூக்கின் வழியே வருமென்றும் இராம கிருஷ்ண பரமஹம்சர் சொல்கிருர்.

315. 'பார்ப்பானுக்கு இடம் கொடாதே' என்ற பழமொழிக்குப் பொருள் என்ன ?

அந்தணர் இடப்பக்கம் இருக்கும்படி செல்லாமல் அவரை வலமாகச் செல்ல வேண்டும் என்பது பொருள். பழைய காலத்து வழக்கம் இது. பழமொழி அல்லவா ?

316. 'பிள்ளையார் பிடிக்கக் குரங்காய் முடிந்தது' என்ற பழமொழிக்கு விளக்கம் தேவை.

ஏதோ ஒன்றை நினைத்து ஒரு காரியத்தைத் தொடங்க, அது விரும்பாத முறையில் முடிந்ததற்கு இந்தப் பழமொழியைச் சொல்வார்கள். பிள்ளையார் சதுர்த்தியில் மண்ணால் பிள்ளையாரைப்போல் வடிவம் செய்யப் போய் அது குரங்கைப் போல முடிந்தது என்பது சொற்பொருள்.

பஜனையில் விநாயகர் துதியில் தொடங்கி ஆஞ்சநேயர் துதியோடு முடிக்கும் வழக்கத்தை வேடிக்கையாகச் சுட்டுவதாகவும் கொள்ளலாம்.

317. 'இலை தின்னி காய் அறியான்.'—இதற்கு என்ன பொருள்?

வாழையை வளர்ப்பவர்கள் அதன் இலையை அவ்வப்போது நறுக்கிப் பயன்படுத்தினால் பிறகு அதில் நல்ல காய் காய்க்காது. இந்தக் கருத்தையே அது குறிக்கிறது.

318. 'சட்டியில் இருந்தால் அகப்பையில் வரும்'-இதற்கு வழக்கமாகச் சொல்லும் பொருளல்லாமல் வேறு ஏதாவது நுட்பமான பொருள் உண்டா ?

சஷ்டியில் விரதம் இருந்தால் கர்ப்பப்பையில் கரு உண்டாகும் என்பது ஒரு பொருள். குழந்தை வேண்டுபவர்கள் சஷ்டிவிரதம் இருப்பது மரபு.

319. 'அஞ்சுக்கு இரண்டு பழுதில்லை.'—அஞ்சு என்றது எது ? இரண்டு என்றது எது ?

பொதுவாக எதையேனும் ஏற்றுக்கொள்ளத் தக்கதா என்று பார்க்கும்போது அஞ்சுக்கு இரண்டு, அதாவது நாற்பது சதவிகிதம் சரியாக இருந்தால் குற்றம் இல்லை என்பது பொருள். கண், காது, நாக்கு, மூக்கு,தோல்என்ற ஐந்தில் கண்ணும் காதும் முக்கியமானவை; ஆதலின் அவற்றிற்குக் குற்றம் இல்லை என்பது ஒரு பொருள். அழகு பார்க்கும்போது இந்த ஐந்தில் 'மூக்கும் முழியும்' குற்றமில்லைஎன்பது மற்றொரு பொருள்.

320. 'அண்ணனுக்கு எட்டாதது தம்பிக்கு எட்டும்'.—என்ன பொருள் ?

இரண்டு உதடுகளைக் குறித்த பழமொழி இது. அண்ணன் என்பது மேலுதடு; தம்பி என்பது கீழுதடு. மேலுதடு கீழுதட்டோடு வந்து பொருந்துவதில்லை. கீழுதடே மேலுதட்டை எட்டிப் பொருந்தும். அதைக் குறிப்பது இது.

மற்றொன்று : அண்ணன் என்று சொல்லும் போது உதடுகள் ஒட்டுவதில்லை; தம்பி என்னும்போது அவை ஒட்டும்.

321. கோம்பி விருத்தம் என்பது எதைப்பற்றி யார் பாடியது ?

கோம்பி என்பது பச்சோந்தி. 'காமிலியான்(Chameleon) என்ற ஆங்கிலப் பாட்டைத் தழுவி அமரர் வெ. ப. சுப்பிரமணிய முதலியார் பாடியது.

322. பாசவதைப் பரணியைப் பாடிய ஆசிரியர் யார் ?

இலக்கண விளக்கத்தை இயற்றிய வைத்தியநாத தேசிகர்.

323. நான்மணிக் கடிகை என்ற சங்க நூலை இயற்றியவர் யார்? எந்தக் காலத்தில் வெளிவந்தது? அந்தப் பெயருக்குக் காரணம் என்ன?

நான்மணிக் கடிகை சங்க காலத்து நூல் அன்று. அது பதினெண் கீழ்க்கணக்கில் ஒன்று. அதனை இயற்றியவர் விளம்பிநாகனார். நான்கு மணிகள் இணைந்த சிறிய மாலைபோல ஒவ்வொரு பாட்டிலும் நான்கு நான்கு நீதிகளைக் கூறுவதனால் நான்மணிக் கடிகை என்று பெயர் பெற்றது. அறம், பொருள், இன்பம், வீடு என்ற உறுதிப் பொருள்கள் நான்கைப்பற்றிய நீதிகளை அதில் காணலாம். கடவுள் வாழ்த்துப் பாடல்கள் இரண்டுடன் 103 வெண்பாக்களை உடைய நூல் அது.

324. திருநேரிசைப் பதிகம் யாரால் பாடப்பட்டது?

திருநாவுக்கரசு சுவாமிகள் பாடிய பல பதிகங்கள் திருநேரிசையாக உள்ளன.

325. நீதி வெண்பா என்ற நூல் ஔவையார் இயற்றியதா?

வடமொழியில் உள்ள பல நீதி சுலோகங்களின் மொழிபெயர்ப்பு நீதி வெண்பா; ஔவையார் இயற்றியது அன்று; ஆசிரியர் பெயர் தெரியவில்லை.

326. அநுமப் புராணத்தைப் பாடியவர் யார்?

பண்டித வித்துவான் திரு. நா. கனகராசையர். இருபத்து நாலாயிரம் பாடல்களால் அநுமனுடைய வரலாற்றைப் பாடியிருக்கிறார். அது இன்னும் அச்சாகவில்லை.

327. வடமொழியில் வான்மீகியும், தமிழில் கம்பரும் முறையே எழுதிய இராமாயணத்தின் முக்கியக் கருத்து வேறுபாடு என்ன ?

இராமனை வால்மீகி மனிதப் பண்புகளிற் சிறந்தவனாக வைத்துப் பாடினார். தெய்வமாகவே கொண்டு கம்பர் லட்சிய நாயகன் ஆக்கினார்.

328. வடமொழியிலும் தமிழிலும் எப்போது இராமாயணம் எழுதப்பெற்றது ?

வடமொழியில் வால்மீகி எழுதிய இராமாயணம் பழையது. அதன் காலத்தை இன்னும் சரியாக வரையறை செய்யவில்லை. தமிழில் சங்க காலத்திலேயே ஓர் இராமாயணம் இருந்தது. அது மறைந்தது. கம்பன் பாடிய இராமாயணமே புகழுடன் விளங்குகிறது. அது 19-ஆவது நூற்றாண்டில் தோன்றியது என்பர்.

329. எழுபது செய்யுட்களையுடைய தமிழ் நூல் எழுபது என்ற பெயரோடு வழங்குகிறது. ஏரெழுபது என்பது ஒன்று; கம்பர் இயற்றியது. அது போல வேறு நூல் உண்டா ?

பதினெண்கீழ்க்கணக்கில் ஐந்திணை எழுபது என்பது ஒரு நூல். ஒட்டக்கூத்தர் ஈட்டி எழுபது என்ற நூலைப் பாடியிருக்கிறார். காலஞ்சென்ற மகாவித்துவான் ரா. இராகவையங்கார் அவர்கள் புவி எழுபது என்ற நூலைப் பாடியிருக்கிறார்.

330. திருக்குறளுக்குப் பின்னர் எழுந்ததா திருமந்திரம்?

கலிவிருத்தத்தால் அமைந்தது திருமந்திரம். அந்த யாப்பையும், அதன் நடையையும் கொண்டு ஆராய்ந்தால் அது திருக்குறளுக்குப் பிற்பட்டதே என்பது தெளிவாகும்.

331. பிரபந்தத் திரட்டு என்ற இலக்கண நூல் ஒன்று இருப்பதாகச் சொல்கிறார்களே; அச்சில் இருக்கிறதா ? பல பிரபந்தங்கள் கொண்ட திரட்டைத்தானே அப்படிச் சொல்வது வழக்கம் ?

பொதுவாக, ஒரு புலவர் இயற்றிய பிரபந்தங்களின் தொகுப்பை அவர் பெயரோடு சார்த்தி இன்னாருடைய பிரபந்தத் திரட்டு என்று சொல்வது இக்கால வழக்கம், சிவப்பிரகாச சுவாமிகள் பிரபந்தத்திரட்டு என்பது போல. ஆனால் பிரபந்தத்திரட்டு என்பது பிரபந்தங்களின் இலக்கணத்தைத் தொகுத்துக் கூறுவது. இன்னும் அச்சாகவில்லை. திருவான்மியூரில் உள்ள டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்கள் நூல் நிலையத்தில் இருக்கிறது.

332. துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் இயற்றிய சோணசைல மாலை என்ற நூல் எதனைப் பற்றிக் கூறுகிறது ?

திருவண்ணாமலையில் எழுந்தருளியிருக்கும் இறைவனைப் பற்றிய நூறு பாடல்கள் அடங்கிய நூல் அது. சோணசைலம் என்பது திருவண்ணாமலைக்கு ஒரு பெயர். ஒவ்வொரு பாட்டும், 'சோணசைலனே கைலை நாயகனே' என்று முடியும். சிவப்பிரகாச சுவாமிகள் திருவண்ணாமலையை ஒரு முறை வலம் வருவதற்குள் இந்த நூலைப் பாடி முடித்தாராம்.

333. வைணவ ஆழ்வார்கள் பாடிய நாலாயிரதிவ்ய பிரபந்தத்தை நாதமுனிகள் தொகுத்தமைத்தார் என்கிறார்கள். தேவார திருவாசகத்தைத் தொகுத்து வெளியிட்டவர் யார் ?

நம்பியாண்டார் நம்பி என்பவர் தொகுத்து வகுத்து அமைத்தார். தேவாரத்தை ஏழு திருமுறைகளாகவும், திருவாசகம், திருக்கோவையார் என்ற இரண்டையும்

எட்டாந் திருமுறையாகவும், திருவிசைப்பாவை ஒன்பதாம் திருமுறையாகவும், திருமந்திரத்தைப் பத்தாம் திருமுறையாகவும், ஆலவாய் இறையனார் பாடிய திருமுகப் பாசுரம், காரைக்காலம்மையார் பாடிய பாடல்கள் முதலியவற்றைக் கூட்டிப் பதினோராம் திருமுறையாகவும் அமைத்தார். பிற்காலத்தில் பெரிய புராணத்தைப் பன்னிரண்டாம் திருமுறையாகச் சேர்த்துக்கொண்டார்கள்.

334. கந்தர் அநுபூதியை யல்லாமல் அநுபூதி என்ற பெயருடைய வேறு நூல் உண்டா ?

அநுமார் அநுபூதி என்ற நூல் ஒன்று உண்டு; அருணாசலக் கவிராயர் பாடியதாகக் கூறுவர்.

335. பத்துப் பாட்டில் படிக்குப் பாதி ஆற்றுப் படைகள் இருக்கின்றன என்று ஒரு புலவர் கூறினார். புத்தகத்தில் திருமுருகாற்றுப்படை, பொருநர் ஆற்றுப்படை, சிறுபாணாற்றுப் படை, பெரும்பாணாற்றுப்படை என்று நான்கு ஆற்றுப் படைகளே உள்ளன. அவர் எவ்வாறு ஐந்து என்று கூறினார் ?

பத்துப் பாட்டின் இறுதிப் பாட்டாகிய 'மலைபடுகடாம்' என்பது கூத்தராற்றுப்படை என்றும் பெயர் பெறும். ஒரு கூத்தன் வேறு கூத்தரை ஆற்றுப்படுத்துவதாக அமைந்தது அந்தப் பாட்டு. அதையும் சேர்த்தால் ஐந்து ஆற்றுப் படைகள் ஆகும்.

336. திருவிளையாடற் புராணங்கள் இரண்டு உண்டு என்கிறார்களே; விளக்கம் தருக.

பழைய திருவிளையாடற் புராணம் ஒன்று உண்டு; அதைத் திருவாலவாயுடையார் திருவிளையாடல் என்று கூறுவர். அதை இயற்றியவர் செல்லிநகர்ப் பெரும்பற்றப் புலியூர் நம்பி என்பவர். இதனால் நம்பி திருவிளையாடல்

என்றும் வழங்கும். டாக்டர் உ. வே. சா. அவர்கள் அதைப் பதிப்பித்திருக்கிறார்கள். பிற்காலத்தில் தோன்றிய திருவிளையாடற் புராணம் பரஞ்சோதி முனிவர் இயற்றியது.

337. கந்தர் சஷ்டி கவசம் என்னும் நூல் பாராயணம் செய்யத் தக்கதுதானா? அதன் ஆசிரியர் வேறு நூல்கள் யாத்துள்ளாரா?

தேவராய சுவாமிகள் பாடிய கந்தர் சஷ்டி கவசம் பாராயணம் செய்யத் தக்கதே. பலர் இதனால் பயன் பெற்றுள்ளனர். அவர் இதையும் சேர்த்து ஆறு படை வீடுகளுக்கும் ஆறு கவச நூல்கள் இயற்றியதாக இப்போது தெரிகிறது. சமீபத்தில் சில அன்பர்கள் இந்த ஆறையும் அச்சிட்டிருக்கின்றனர்.

338. திருப்புகழின் மொத்தப் பாடல்கள் எத்தனை? இப்போது கிடைப்பவை எத்தனை? அவற்றிற்கு உரை உண்டா?

'எம் அருணகிரிநாதர் ஓது பதினாறாயிரம் திருப்புகழமுதுமே' என்று அந்தக்கவி வீரராகவமுதலியார் என்ற புலவர் சொல்வதால் 16,000 திருப்புகழ்ப் பாடல்களைப் பாடினார் அருணகிரிநாதர் என்று தெரியவருகிறது. ஆனால் இப்போது கிடைப்பவை 1304 பாடல்களே. இவற்றுக்குத் தணிகைமணி வ. சு. செங்கல்வராயப் பிள்ளை அவர்கள் உரை எழுதியிருக்கிறார்.

339. சிலப்பதிகாரத்துக்கு உரை எழுதிய பண்டைத் தமிழறிஞர்கள் யாவர்?

அரும்பதவுரை ஒன்று உண்டு; அதை எழுதியவர் பெயர் தெரியவில்லை. மற்றோர் உரையை எழுதியவர் அடியார்க்கு நல்லார்.

340. பதினெண் புராணங்கள் யாவை ?

மச்சபுராணம், கூர்ம புராணம், வராக புராணம், வாமன புராணம், சிவமகா புராணம், இலிங்க புராணம், பவிஷ்ய புராணம், கந்த புராணம், மார்க்கண்டேய புராணம், பிரம்மாண்ட புராணம், விஷ்ணு புராணம், பாகவத புராணம், கருட புராணம், நாரதீய புராணம், பிரம்ம புராணம், பத்ம புராணம், ஆக்கினேய புராணம், பிரம்மவைவர்த்த புராணம் என்பன.

341. சர்க்கரைப் புலவர் அட்டநாகபந்தமாக வரைந்த சித்திரகவி தனிப்பாடல் திரட்டில் உள்ளதா ? மயூரகிரிக் கோவை நூல் வடிவில் இருக்கிறதா ?

அட்டநாக பந்தம் கிடைக்கவில்லை. மயூரகிரிக் கோவை அச்சிடப்பெற்றிருக்கிறது.

342. தொல்காப்பிய நூலுக்குக் கடவுள் வாழ்த்து உண்டா ?

இல்லை.

343. ஐஞ்சிறு காப்பியங்கள் எவை ?

உதயணகுமார காவியம், நாககுமார காவியம், யசோதர காவியம், சூளாமணி, நீலகேசி. ஐஞ்சிறு காப்பியம் என்ற வழக்கு மிகப் பிற்காலத்தில் உண்டாயிற்று. இதைப் பற்றிய விரிவான கருத்துக்களைத் 'தமிழ்க் காப்பியங்கள்' என்ற நூலில் காணலாம்.

344. திருமுருகாற்றுப்படையின் பொருளமைதி ஆற்றுப் படை இலக்கணத்துக்கே முரணானது என்ற கருத்து வழங்கு கிறது; தங்கள் கருத்து என்ன ?

ஆற்றுப்படை என்ற பெயரும், 'புலம்பிரிந்துறையும் நலம்புரி கொள்கைச் செலவுநீ நயந்தனை யாயின்' என்று

முன்னிலைப்படுத்துவதும், 'பெறலரும் பரிசில் நல்குமதி' என்று பரிசிலைக் கூறுவதும் ஆற்றுப்படை இலக்கணத்தோடு பொருந்தியுள்ளன. உரையாசிரியர்கள் எழுதியவற்றையும் பார்த்தால் தெளிவாக விளங்கும்.

345. முத்தொள்ளாயிரம் என்ற பெயர் ஏன் வந்தது ?

சேரசோழ பாண்டியர்களாகிய மூன்று முடிமன்னர்கள் மீதும் தனித்தனியே தொள்ளாயிரம் பாடல்கள் அமைந்தமையால் அப் பெயர் வந்தது. தொள்ளாயிரம் பாடல்களால் அமைந்த நூல்கள் வேறு சிலவும் தமிழில் இருந்தன. வச்சத் தொள்ளாயிரம், அரும்பைத் தொள்ளாயிரம் என்ற நூல்களின் பெயர்களால் இதனை அறியலாம்.

346. திருமந்திரத்தை இயற்றிய திருமூலர் கடவுள் வாழ்த்துப் பாடலாக விநாயகர்மீது 'ஐந்து கரத்தனை' என்று பாடக் காரணம் உண்டா ?

மரபு பற்றிப் பாடினர். அந்தப் பாடல் திருமூலர் பாடியது அன்று என்று சொல்வாரும் உண்டு.

347. கோவைகளில் ராஜாக் கோவை, மந்திரிக் கோவை என்று இரண்டு இருக்கின்றனவாமே; அவற்றை இயற்றியவர் யார் ?

மாணிக்கவாசகர் இயற்றிய திருச்சிற்றம்பலக் கோவையாரை ராஜாக் கோவை என்றும், சிவப்பிரகாச சுவாமிகள் இயற்றிய திருவெங்கைக் கோவையை மந்திரிக் கோவை என்றும் புலவர் கூறுவர்.

348. 'தேவர் குறளும் திருநான் மறைமுடிவும்' என்று வரும் வெண்பாவில் 'முனிமொழி' என்று குறிப்பிட்டுள்ளது எந்த நூல் ?

பிரமசூத்திரம் என்று சொல்வர். 'முனிமொழி' என்றே ஒரு நூல் உண்டு. ஆனால் அது அவ்வளவு சிறந்த நூல் அன்று.

349. வீர கோதண்டராம சுவாமி உலா என்ற நூலை இயற்றியவர் யார் ?

பின்னத்தூர் நாராயணசாமி ஐயர் என்னும் புலவர், தில்லைவளாகத்தில் எழுந்தருளியுள்ள இராமபிரானைப் பற்றிப் பாடிய நூல் அது. நற்றிணையென்னும் சங்க நூலை முதல் முதலாகப் பதிப்பித்தவர் அந்தப் புலவர்.

350. பாட்டியல் என்ற நூல்கள் எந்த இலக்கணத்தைச் சொல்கின்றன ?

ஒரு நூலின் முதலில் உள்ள சொல்லுக்கும் அந்த நூலின் பாட்டுடைத் தலைவனுக்கும் உள்ள பொருத்தத்தையும், பலவகைப் பிரபந்தங்களின் இலக்கணங்களையும் சொல்வது பாட்டியல்.

351. திருக்குறளுக்கு ஓரடி முக்கால் என்று பெயர் உண்டென்று புலவர் ஒருவர் சொன்னார். அது உண்மையா ?

குறள் வெண்பாவுக்கு ஓரடி முக்கால் என்று பெயர்; இக் காலத்து மொழியில் சொன்னால் அதை ஒன்றே முக்காலடி என்று சொல்வோம். முதலடி நான்கு சீரும் இரண்டாம் அடி மூன்று சீருமாக வருவதால் இந்தப்பெயர் வந்தது. திருக்குறள் என்பது பாட்டினால்வந்த பெயர்; அதுபோலவே ஓரடி முக்கால் என்ற பெயரும் அமைந்தது.

352. குண்டலகேசி என்று ஒரு காவியத்துக்குப் பெயர் வரக் காரணம் என்ன ? அந்தப் பெயருக்குப் பொருள் யாது ?

பௌத்த மதத்தைச் சார்ந்த குண்டலகேசி என்பவள் கதையைச் சொல்வதனால் அந்தப் பெயர் வந்தது. சுருட்டையான கூந்தலையுடையவள் என்பது அப் பெயருக்குப் பொருள்.

353. பஞ்சலட்சணத் திருமுக விலாசம் என்ற நூல் ஐந்து இலக்கணங்களைச் சொல்வதா ?

பஞ்சத்தின் இயல்பைச் சொல்லும் பிரபந்தம் அது; வில்லியப்பப்பிள்ளை என்பவர் கலிவெண்பாவினால் பாடியது.

354. ஐம்பெருங் காப்பியங்கள் எவை? அவை யாவும் இப்போது கிடைக்குமா ?

சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, குண்டலகேசி, வளையாபதி என்பன ஐம்பெருங்காப்பியங்கள். அவற்றில் பின் இரண்டும் கிடைக்கவில்லை; சில பாடல்களே கிடைத்துள்ளன.

355. தொல்காப்பியம் என்ற பெயருக்கும் காப்பியம் என்ற சொல்லுக்கும் தொடர்பு உண்டா ?

தொல்காப்பியம் என்பது காப்பியமே அன்று. அது இலக்கண நூல். தொல்காப்பியரால் இயற்றப் பெற்றமையின் அந்த நூலுக்குத் தொல்காப்பியம் என்ற பெயர் வந்தது. காப்பியம் என்பது காவ்யம் என்ற வட சொல்லின் திரிபு. தமிழில் அதைப் பொருட்டொடர்நிலைச் செய்யுள் என்பர்.

356. திருமுருகாற்றுப்படை என்ற பெயர் எப்படி வந்தது ?

ஆற்றுப்படை என்பது ஒருவகை நூல். பிற்காலத்தில் அதைப் பிரபந்த வகைகளில் ஒன்றாகச் சொல்லியிருக்கிறார்கள். முருகாற்றுப்படை என்பது நூலின் பெயர். அது தெய்வத் தன்மையுடையது என்ற சிறப்பினால் திருமுருகாற்

றுப்படை என்று அடையுடன் வழங்குகிறார்கள். முருகனை அடைவதற்குரிய வழியைக் காட்டும் நூல் என்பது அதற்குப் பொருள். நக்கீரர் இயற்றிய அந்த நூல் பத்துப்பாட்டின் முதல் நூலாக விளங்குகிறது.

357. 'இருந்தமிழே உன்னால் இருந்தேன் இமையோர், விருந்தமிழ்தம் என்றாலும் வேண்டேன்' என்பது எந்த நூலில் வருகிறது.?

தமிழ் விடுதூது என்ற நூலில் வரும் கண்ணி அது.

358. சிவனடியார்களைப்பற்றிய வரலாறுகளைச் சொல்லும் பெரிய புராணத்தைப் போலச் செய்யுள் வடிவத்தில் திருமாலடியார்களின் வரலாற்றைச் சொல்லும் நூல்கள் உண்டா ?

திவ்யசூரி சரிதம், குருபரம்பரை, பக்தமான்மியம் என்ற நூல்கள் உள்ளன.

359. ஐங்குறுநூறு என்று பெயர் வந்ததற்குக் காரணம் என்ன ?

ஐந்து குறுநூறுகள் அமைந்தது என்பது பொருள். ஒரு திணைக்குக் குறும்பாடல்கள் நூறாக, ஐந்து திணைக்கும் ஐந்நூறு பாடல்கள் அடங்கிய சங்க நூல் அது.

360. பத்துப் பாட்டுக்குரிய நினைவுச் செய்யுள் இருந்தால் தெரிவிக்க வேண்டுகிறேன்.

'முருகு பொருநாறு பாணிரண்டு முல்லை
கருது வளமதுரைக் காஞ்சி—மருவினிய
கோலநெடு நல்வாடை கோல்குறிஞ்சி பட்டினப்
பாலை கடாத்தோடும் பத்து'

என்பது பழைய பாடல்.

361. 'பழையன கழிதலும் புதியன புகுதலும், வழுவல கால வகையி ஞனே' என்னும் இரு விழுமிய அடிகள் தமிழ் இலக்கியத்தின்கண் எங்கே உள்ளன ?

நன்னூலில் வரும் சூத்திரங்களில் ஒன்று இது.

362. 'உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டே' என்ற தொடர் எந்த நூலில் இருக்கிறது ?

சேந்தன் இயற்றிய திவாகரத்தில் இருக்கிறது.

363. தமிழ்ப் புலவர்களில் மகாமகோபாத்தியாயர் என்ற பட்டம் பெற்றவர்கள் யார் யார் ?

டாக்டர் உ. வே. சாமிநாதையர், பாஷாபாரததுரந்தரர் ம. வீ. இராமாநுஜாசாரியார், பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியார்.

364. காவடிச் சிந்து பாடிய சென்னிகுளம் அண்ணுமலே ரெட்டியார் யாருடைய மாணவர் ?

சிலகாலம் திருவாவடுதுறையில் இருந்து டாக்டர் ஐயரவர்களிடம் இலக்கணப்பாடம் கேட்டார். பல திரிபு யமகப் பாடல்களேப் பாடியிருக்கிருர்.

365. கச்சியப்பர் என்ற பெயருடைய புலவர்கள் எவ்வளவு பேர்கள் ?

கச்சியப்ப சிவாசாரியார் என்பவர் ஒருவர்; அவர் கந்த புராணத்தை இயற்றியவர். கச்சியப்ப முனிவர் என்பவர் ஒருவர்; அவர் விநாயக புராணம் முதலியவற்றை இயற்றியவர்.

366. சேக்கிழாருக்கு முன்பு திருஞானசம்பந்தரைப்பற்றிப் பாடிய புலவர்கள் உண்டா ?

ஒட்டக்கூத்தர் தக்கயாகப் பரணியிலும், நம்பியாண்டார் நம்பிகள் பல பிரபந்தங்களிலும் பாடியிருக்கிறார்கள்.

367. குருடராக இருந்த தமிழ்ப் புலவர்கள் யார் யார்?

அந்தகக்கவி வீரராகவ முதலியார், மாம்பழக் கவிராயர், இரட்டையரில் ஒருவர்.

368. கம்பர், சேக்கிழார் இருவருள் முந்தியவர் யார்?

கம்பரே முற்பட்ட காலத்தவர்.

369. ஔவையார் மைசூரைச் சேர்ந்த தகடூர் என்ற ஊரில் பிறந்ததாக ஒருவர் எழுதியிருக்கிறார். அவர் மைசூர் மாநிலத்தைச் சார்ந்தவரா?

ஔவையார் பிறந்த ஊர் இன்னதென்று உறுதியாகச் சொல்வதற்கில்லை. தகடூரில் இருந்த அதிகமான் நெடுமான் அஞ்சி என்பவரை அவர் பாடியிருக்கிறார். தமிழ்நாட்டில் உள்ள தர்மபுரியே அக்காலத்தில் தகடூர் என்று வழங்கி வந்தது. அதன் அருகில் அதிகமான் கோட்டை என்ற இடம் இருக்கிறது.

370. குமரகுருபர முனிவர் எந்த ஆதீனத்தின் தலைவராக இருந்தவர்?

அவர் எந்த ஆதீனத்துக்கும் தலைவராக இருந்ததில்லை. தருமபுர ஆதீனத்தில் இருந்த மாசிலாமணி தேசிகர் என்னும் ஞானாசிரியரிடம் உபதேசம் பெற்ற துறவி அவர். காசியில் சென்று ஒரு மடத்தைத் தாபித்துச் சிவத்தொண்டு புரிந்து வந்தார். அந்த மடம் குமாரசுவாமி மடம் என்று இன்று வழங்கி வருகிறது. அந்த மடத்தில் அவருக்குப் பின் வந்த தில்லைநாயக சுவாமிகள் என்பவர் திருப்பனந்தாளில் ஒரு

மடத்தை நிறுவினுர். காசியோடு தொடர்புடையதாதலின் அதற்குக் காசி மடம் என்ற பெயர் வந்தது.

371. மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்கள் தம்முடைய இல்லத்துக்குத் தியாகராஜ விலாசம் என்று பெயர் வைத்ததற்குக் காரணம் என்ன ? திருவாரூருக்கும் அவருக்கும் ஏதேனும் தொடர்பு உண்டோ ?

ஐயரவர்களுக்குக் கும்பகோணம் கல்லூரியில் தாம் பார்த்து வந்த தமிழாசிரியர் வேலையை வித்துவான் தியாகராச செட்டியார் பெறும்படி செய்தார். அந்த நன்றியை எண்ணி அப்படிப் பெயர் வைத்தார்கள்.

372. சிவஞான முனிவர் திருவாவடுதுறையாதீனத்தில் எத்தனையாவது பட்டத்தில் இருந்தவர் ?

சிவஞான முனிவர் ஆதீனத் தலைவராக இருக்கவில்லை. அவர் அடியார் கூட்டத்தில் ஒரு தம்பிரானுக இருந்தவர். தலைவர்களைத் தேசிகரென்ற பெயரோடு வழங்குவார்கள்.

373. காந்தி புராணம் இயற்றிய புலவர் யார் ? அவர் வேறு நூல்களை இயற்றியது உண்டா ?

திருப்பாதிரிப்புலியூரில் இருந்த பண்டிதை அசலாம்பிகை அம்மையாரே காந்திபுராணம் இயற்றினுர். அவர் திலகர் மான்மியம் என்ற நூலையும் இயற்றியுள்ளார்.

374. டாக்டர் உ. வே. சாமிநாதையர் கீர்த்தனை இயற்றியிருக்கிறுரா ?

இலங்கையிலுள்ள இலந்தை நகரில் எழுந்தருளியிருக்கும் முருகனைப்பற்றியும் அவிநாசியில் எழுந்தருளியுள்ள கருணும்பிகையைப்பற்றியும் கீர்த்தனங்கள் இயற்றியிருக்கிறுர்கள்.

375. அஷ்டாவதானம், சதாவதானம் என்பவை யாவை ?

ஒரே சமயத்தில் எட்டு விஷயங்களைக் கவனித்தல் அஷ்டாவதானம்; நூறு விஷயங்களைக் கவனித்தல் சதாவதானம். கொடுத்த பாட்டுக்குப் பொருள் சொல்லுதல், கொடுத்த கருத்தை வைத்துப் புதிய கவி பாடுதல், மணியை இத்தனை முறை அடித்தார்கள் என்று சொல்வது, சதுரங்க விளையாட்டு விளையாடுதல், இடையே ஏதாவது கேட்டால் விடை கூறுதல், லாட சங்கிலி போடுதல், வேலும் மயிலுந் துணை என்று அடிக்கடி சொல்லுதல், நீண்ட பெயரை முறைமாற்றி எழுத்துக்களைச் சொல்லக் கடைசியில் பெயர் முழுவதையும் சொல்லுதல், ஜாதகம் பார்த்துப் பலன் கூறுதல் என்று பலவற்றைப் புலவர்கள் கவனிப்பார்கள். அஷ்டாவதானம் வீராசாமி செட்டியார், அஷ்டாவ்தானம் சபாபதி முதலியார், சதாவதானம் கிருஷ்ணசாமிப் பாவலர் என்று அப் பட்டங்களை உடையவர்கள் இருந்திருக்கிறார்கள். தெலுங்கு தேசத்தில் இன்றும் அஷ்டாவதானம் செய்பவர்கள் உண்டு.

376. உ, வே. சாமிநாதையரவர்கள் தம் பெயரின் முதலெழுத்துக்களைப் போடும்போது வே. ச். என்று போடுவார்களாம். ஏன் அப்படி ?

வே. சா. என்று போட்டால் சா என்பது அமங்கலமாகத் தொனிக்கும் என்ற காரணத்தால் அப்படிப் போடுவார்கள்.

377. இராமாயணத்தை அன்றிக் கம்பர் வேறு என்ன இயற்றினார் ?

சரசுவதி அந்தாதி, ஏரெழுபது, திருக்கை வழக்கம், சடகோபர் அந்தாதி என்ற நூல்களையும் அவர் இயற்றினாரென்று கூறுவர்.

378. கம்பரும் ஒட்டக்கூத்தரும் சமகாலத்தில் வாழ்ந்தவர்களா? இருவரும் போட்டியிட்டார்கள் என்று கதை வழங்குகிறதே?

இருவரும் வேறு காலத்தினர். அவர்கள் போட்டியிட்டதாக உள்ளது கற்பனைக் கதை. கம்பர் ஒன்பதாம் நூற்றாண்டிலிருந்தவரென்பது சில ஆராய்ச்சியாளர் முடிவு. ஒட்டக்கூத்தர் இரண்டாம் குலோத்துங்க சோழன் காலத்தில் இருந்தவர்.

379. டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்கள் இலக்கண நூல் எதையாவது பதிப்பித்திருக்கிறார்களா?

நன்னூல்–மயிலைநாதர் உரை, நன்னூல்-சங்கர நமச்சிவாயர் உரை, புறப்பொருள் வெண்பா மாலை, தமிழ் நெறி விளக்கம் என்னும் இலக்கண நூல்களைப் பதிப்பித்திருக்கிறார்கள்.

380. கஞ்சனூர் ஆழ்வார் என்பவர் யார்? அவர் வரலாற்றை எங்கே காணலாம்?

கஞ்சனூரில் வைணவ குலத்தில் தோன்றிச் சைவராக மாறிய அரதத்த சிவாசாரியாருக்குக் கஞ்சனூர் ஆழ்வார் என்று பெயர். கஞ்சனூர் ஆழ்வார் சரிதை என்ற நூல் ஒன்று டாக்டர் உ. வே. சா. நூல் நிலையத்தில் இருக்கிறது. இன்னும் அச்சாகவில்லை.

381. டாக்டர் உ. வே. சா. அவர்களுக்குத் தாக்ஷிணாத்ய கலாநிதி என்ற பட்டத்தை யார் கொடுத்தார்கள்?

காஞ்சி காமகோடி பீடத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகள் வழங்கினார்கள்.

382. ஸ்ரீவைஷ்ணவர்களைக் குறிக்கும் போது உ. வே. என்று முதலில் அழைத்துக் குறிக்கிறார்கள். உபய வேதாந்தாசாரியார் என்பதன் சுருக்கம் என்று அதை

விரிக்கிறார்கள். டாக்டர் சாமிநாதையர் வைணவர் அல்லவே! அப்படியிருக்க அவரை எப்படி உ. வே. என்ற எழுத்துக்களை முதலில் இட்டு வழங்குகின்றனர்?

ஐயரவர்கள் பிறந்த ஊர் உத்தமதானபுரம். அவர்கள் தந்தையார் பெயர் வேங்கடசுப்பையர். இந்த இரண்டையும் குறிக்கும் எழுத்துக்கள் உ. வே. என்பவை.

383. காஞ்சி என்ற பெயரையுடைய பழைய நூல்கள் எவை?

பத்துப் பாட்டில் உள்ள மதுரைக் காஞ்சி. பதினெண் கீழ்க் கணக்கில் உள்ள முதுமொழிக் காஞ்சி. இரும்பல் காஞ்சி என்ற நூல் ஒன்று இருந்ததாகத் தெரிகிறது.

384. பெருந்தொகை என்பது குறுந்தொகை போன்ற சங்க நூலா?

பெருந்தொகை என்பது அமரர் மு. இராகவையங்கார் தொகுத்து வெளியிட்ட தனிப்பாடல் திரட்டு.

385. உபதேச காண்டம் என்பது எத்தகைய நூல்?

கந்த புராணத்தின் ஏழாவது காண்டம் உபதேச காண்டம். கோனேரியப்ப நாவலர், ஞானவரோதயர் என்ற இருவரும் தனித்தனியே அதைத் தமிழில் பாடியிருக்கிறார்கள்

386. குளுவ நாடகம் என்பது என்ன?

குறவஞ்சியில் வேட்டையாடி வருபவனாகச் சிங்கன் என்ற பாத்திரம் வருவதைக் காணலாம். அந்தச் சிங்கனுக்கு உதவியாளனாக வருபவன் குளுவன். அவனை மையமாக வைத்துப் பாடிய பிரபந்தம் அது. குளுவ நாடகம் எதுவும் அச்சேறியிருப்பதாகத் தெரியவில்லை.

387. கலைமகளைப்பற்றிய நூல்கள் தமிழில் எவை உள்ளன ?

கம்பர் இயற்றிய சரசுவதி அந்தாதி, குமரகுருபர முனிவர் இயற்றிய சகல கலாவல்லி மாலை என்பவை பழைய நூல்கள். கலைமகள் துதியாகத் தனிப் பாடல்கள் பல உண்டு.

388. கண்டன் அலங்காரம் என்பது எத்தகைய நூல் ?

இரண்டாம் இராசராச சோழனுக்குக் கண்டன் என்று பெயர். அவனைப் புகழ்ந்து வெண்பாவால் இயற்றிய நூல் கண்டன் அலங்காரம் என்று தெரிகிறது. சில பாடல்கள் மட்டும் கிடைக்கின்றன.

389. விவேக சிந்தாமணி என்பது சீவகசிந்தாமணியைப் போன்ற காப்பியமா ?

பல தனிப் பாடல்கள் கொண்ட தொகுதி விவேக சிந்தாமணி.

390. ஐந்தாவது வேதம் என்று எதற்குப் பெயர் ?

பாரதத்தை அவ்வாறு சொல்வர். 'நீடாழி உலகத்து மறைநாலொ டைந்தென்று நிலை நிற்கவே, வாடாத தவவாய்மை முனிராசன் மாபார தஞ்சொன்னநாள்' என்று வில்லி பாரதத்தில் வருகிறது.

391. கப்பற் கோவை என்பது யாரைப் பாடியது ? அந்தப் புத்தகம் எங்கே கிடைக்கும் ?

கப்பலூர் என்ற ஊரில் இருந்த கருமாணிக்கன் என்ற வள்ளலைப்பாடிய ஐந்திணைக் கோவை அது. திருவான்மியூரில் உள்ள டாக்டர் ஐயரவர்கள் நூல் நிலையத்தில் கிடைக்கும்.

392. தொண்ணூற்றாறு பிரபந்தங்களுக்கும் எடுத்துக்காட்டாக நூல்கள் இருக்கின்றனவா ?

சிலவற்றிற்கே உண்டு. தொண்ணூற்றாறு பிரபந்தங்கள் என்ற கணக்கும் பெயரும் இலக்கணமும் இருக்கின்றனவேயன்றி, இலக்கியங்கள் எல்லாவற்றுக்கும் இல்லை. சில பிரபந்தங்கள் இருந்ததாகவே தெரியவில்லை.

393. தொன்னூல், நன்னூல், சின்னூல்—இவற்றை இயற்றிய புலவர்கள் யார் யார் ?

தொன்னூலை இயற்றியவர் வீரமாமுனிவர் என்ற பெஷிப் பாதிரியார். நன்னூலை இயற்றியவர் பவணந்தி முனிவர். சின்னூலாகிய நேமிநாதத்தை இயற்றியவர் குணவீர பண்டிதர்.

394. 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற அடி எந்த நூலில் உள்ளது ? பாடியவர் யார் ?

புறநானூற்றில் வரும் ஒரு பாடலின் முதல் அடி அது. அதைப் பாடியவர் கணியன் பூங்குன்றன் என்னும் புலவர்.

395. சீதக்காதி என்ற முஸ்லிம் வள்ளலுக்கு அதுவே இயற்பெயரா ?

சையத் அப்துல் காதர் என்பது அவர் இயற்பெயர்; அதுவே சீதக்காதி ஆயிற்று.

396. குதம்பைச் சித்தர் என்ற பெயருக்கு என்ன காரணம் ?

குதம்பை என்பது மகளிர் காதில் அணியும் ஆபரணம். அதை அணிந்த பெண்ணைக் குதம்பாய் என்று விளித்து அந்தச் சித்தர் பாடினார். ஆதலால் குதம்பைச் சித்தர் என்ற பெயர் பெற்றார்.

397. அருணகிரிநாதருடைய காலம் எது ?

பதினைந்தாம் நூற்றாண்டு என்று தெரிகிறது.

398. பாணன் மனைவியைப் பாணினி என்று சொல்லலாமா ?

பாடினி என்றுதான் வழக்கு இருக்கிறது.

399. நாண்மங்கல விழா என்பது என்ன ?

பிறந்த நாள் விழாவை நாண்மங்கலம் என்பர்.

400. தருமன், பீமன் என்ற பெயர்கள் நாமைகதேசம் என்று படித்த ஞாபகம். விளக்கம் வேண்டுகிறேன்.

முழுப் பெயரின் ஒரு பகுதியைமட்டும் சொல்வது நாமைகதேச நாமக்ரஹணம்; பெயரின் ஒரு பகுதியைச் சொன்ன இடத்தில், முழுப் பெயரையும் கொள்க என்பர் வடநூலார். நாம ஏகதேசம் அல்லது பெயரின் ஒரு பகுதி என்பதுபொருள். தருமபுத்திரன் தருமன் எனவும், பீமசேனன் பீமன் எனவும் ஆனமை நாமைகதேசம்.

401. அயுதம் என்ற சொல்லின் பொருள் என்ன ?

பதினாயிரம்.

402. தொடுகடல் என்பது கீழ்கடலுக்குப் பெயர் என்கிறார்கள்; அதற்குக் காரணம் என்ன ?

தொடுதல் என்பதற்குத் தோண்டுதல் என்பது பொருள். தொடுகடல் என்பதற்கு, புதிதாகத் தோண்டப்பட்ட கடல் என்பது பொருள். சகரர் பூமியை அகழ்ந்து பாதாள உலகத்துக்குப் போனார்கள் என்றும், அவர் அகழ்ந்த இடம் கடலாயிற்றென்றும், சகரர் அகழ்ந்தமையால் சாகரம் ஆயிற்று என்றும் புராண வரலாறு கூறுகிறது. அதுவே

கீழ் கடல். ஒரு காலத்தில் நிலப்பரப்பாக இந்தியாவோடு இணைந்திருந்த பகுதி, பிறகு பூகம்பத்தால் மறைந்து கடலாயிருக்கும். அதையே புராணம் கதையாகச் சொல்கிறது போலும்.

403. 'வங்கணச் சிங்கி' என்று குறவஞ்சியில் வருகிறது: பொருள் என்ன?

வங்கணம்-நட்பு. நட்புடைய சிங்கியே என்பது பொருள். சிங்கி என்பவள் பறவைகளை வேட்டையாடும் சிங்கனுடைய மனைவி.

404. 'மயனெனக் கொப்பாய் வகுத்த பாவையில்'—மயன் என்பவன் யார்?

அசுரர்களின் தச்சனென்று புராணங்கள் கூறுகின்றன.

405. ஆடியானனன் என்றது யாரை? அந்தப் பெயர் வரக் காரணம் என்ன?

குருடனைக் குறிப்பது அது. திருதராஷ்டிரனைப் பாரதம் ஆடியானனன் என்று கூறும். ஆடி-கண்ணாடி; கண்ணாடியை யாவரும்பார்ப்பார்களே யன்றி,அது யாரையும் பாராது. அது போலப் பிறர் தம் முகத்தைப் பார்ப்பதே அல்லாமல் அம் முகம் பிறரைப் பார்க்க இயலாமையால் அப் பெயர் வந்தது.

406. தட்டாடை என்று சுற்றிக் கட்டும் ஆடையைச் சொல்கிறார்கள். தட்டுக்கும் அதற்கும் என்ன சம்பந்தம்?

தற்றுடை என்பதன் திரிபு அது; இறுக்கிக் கட்டும் ஆடைக்கு அது பெயர். 'மடிதற்றுத் தான்முந் துறும்' என்பது திருக்குறள்.

சமயம்

1. எதையும் எழுதத் தொடங்கும்போது உ போடுகிறுர்களே; ஏன்?

அதற்குப் பிள்ளையார் சுழி என்று பெயர். எதையும் தொடங்கும்போது விநாயகரை நினைக்கும் வழக்கத்தைப் பின்பற்றி அவ்வாறு செய்கிறுர்கள். பிள்ளையார் சுழி என்பது ஓம் என்ற எழுத்து நாளடைவில் மாறி அமைந்தது.

2. பிள்ளையார், மூத்த பிள்ளையார்—இருவரும் ஒருவரா, இருவரா?

பழங்காலத்தில் பிள்ளையார் என்று முருகனையும், மூத்த பிள்ளையார் என்று விநாயகரையும் வழங்கினுர்கள். இப்போது விநாயகரையே பிள்ளையார் என்று வழங்குகிறுர்கள்.

3. விநாயகப் பெருமான் பிரம்மசாரிதாஞ?

விநாயகப் பெருமான் பிரம்மசாரி அல்லர். விநாயகர் பலவகைப்படுவார். வல்லவை விநாயகர், சித்தி புத்தி விநாயகர் என்று வழங்கும் மூர்த்திகள் முறையே வல்லவை என்ற மனைவியையும், சித்தி புத்தி என்ற தேவிமாரையும் உடையவர்களாக இருப்பார்கள்.

4. 'வக்ரதுண்டன்' என்று விநாயகப் பெருமானுக்குப் பெயர் வரக் காரணம் என்ன?

விநாயகருடைய துதிக்கையை மூக்கு என்பது மரபு. யானைக்குத் துதிக்கையே மூக்காக இருக்கும். 'நெடுமூக்கிற் கரியுரித்தார்' என்பது தேவாரம். 'வக்ரதுண்டன்' என்ப

தற்கு வளைந்த மூக்கை உடையவன் என்பது பொருள். வளைந்த துதிக்கையையே வளைந்த மூக்கு என்றபடி.

5. சங்க நூல்களில் விநாயகரைப்பற்றிய செய்தியே வரவில்லை என்கிறார்கள். திருமுருகாற்றுப்படையில் 'ஒருகைமுகன் தம்பியே' என்று வருகிறதே!

திருமுருகாற்றுப்படைக்குப் பின் உள்ள வெண்பாக்கள் பிற்காலத்தில் யாரோ பாடியவை. நக்கீரர் பாடியன அல்ல. பாராயண நூலாகத் திருமுருகாற்றுப்படையை ஓதிய பிறகு அதற்குப் பயன் வேண்டும் என்ற கருத்தால் முருக பக்தியுடைய ஒருவர் பாடிச் சேர்த்திருக்கிறார் என்றே தோன்றுகிறது.

6. முருகனுக்குக் காவடி எடுக்கும் பழக்கம் எதனால் உண்டானது ?

இடும்பன் அகத்தியர் கூறியபடி இரண்டு மலைகளைக் காவடியாகத் தூக்கி வந்தானென்றும், அவற்றில் ஒன்று பழனியாகிய சிவகிரி என்றும், மற்றொன்று சக்திகிரி என்றும், பக்தனாகிய அவன் செய்தபடியே பிறகு மற்றப் பக்தர்களும் முருகனுக்குரிய பூசைப் பண்டங்களைக் காவடியாகக் கட்டிச் சுமந்துவரும் வழக்கம் உண்டாயிற்றென்றும் தெரிகிறது.

7. முருகனுக்குரிய ஷடட்சரத்தைப் பற்றிய செய்தி பழைய தமிழ் நூல்களில் உண்டா ?

'தற்புகழ்ந், தாறெழுத் தடக்கிய அருமறைக் கேள்வி, நாவியல் மருங்கின் நவிலப் பாடி' என்று திருமுருகாற்றுப் படையில் வருகிறது. ஆறெழுத்தாகிய முருகன் மந்திரத்தை நாப்புரளும் அளவிலே உச்சரிக்கிறார்களாம்.

8. பழமுதிர் சோலையில் எழுந்தருளியிருக்கும் முருகன் மேல் பாடியுள்ள 'அகரமும் ஆகி' என்ற திருப்புகழில், 'வன

முறை வேடன் அருளிய பூசை மகிழ்கதிர் காமம் உடையோனே' என்று வருகிறதே; வேடர்கள் பூசித்ததாகக் கந்த புராணத்தில் இல்லையே !

கதிர்காமத்தில் வேடர்களே முருகனைப் பூசித்து வந்தார்கள். இன்றும் காட்டில் வாழும் சிங்களவர்களே பூசிக்கிறார்கள். இது அந்தத் தலவரலாற்றில் உள்ள செய்தி.

9. முருகனுடைய முக்கியமான வாகனங்கள் எவை ?

மயில், ஆடு, யானை.

10. கந்தப் பெருமானை நாம் முருகன் என்று அழைக்கிறோம். அப்பெயர் எப்படி வந்தது ?

முருகு உடையவன் முருகன். முருகு என்பதற்குப் பல பொருள்கள் உண்டு. முக்கியமாக மணம், இளமை, அழகு, தெய்வத்தன்மை என்பவற்றைச் சொல்லலாம். இவற்றில் சிறந்து விளங்குவதனால் முருகன் என்ற பெயர் வந்தது. முருகன் அல்லது அழகு (திரு. வி. க.) என்ற நூலிலும், பெரும் பெயர் முருகன் (கி. வா. ஜ.) என்ற நூலிலும் இதன் விரிவைக் காணலாம்.

11. வேள் என்ற சொல் முருகனையும் காமனையும் குறிக்கும் என்கிறார்கள். இருவருக்கும் வேறுபாடு உண்டா ?

காமன் கருநிறம் உடையவன்; ஆதலின் கருவேள். முருகன் செந்நிறம் உடையவன்; ஆதலின் செவ்வேள்.

12. முருகன் ஏறும் மயிலாகச் சூரபன்மன் ஆனான் என்று சொல்கிறார்களே; அப்படியானால் முன்பு முருகனுக்கு வாகனம் இல்லையா ?

முருகனுக்குப் பிரணவமே மயிலாக இருப்பது. அப்பால் சூரனுடன் போர் புரியும்போது இந்திரன் மயிலாக வந்து

தாங்கினான். பிறகே சூரன் மயில் ஆக, அதை முருகன் வாகனமாகக் கொண்டான்.

13. முருகன் படத்தில் சேவல் இருக்கக் காரணம் என்ன ?

முருகனுக்குச் சேவல் கொடியாக இருப்பது.

14. செங்கல்வராயன் என்ற பெயர் எந்தக் கடவுளைக் குறிப்பது ? அந்தப் பெயர் வருவதற்குக் காரணம் என்ன ?

செங்கல்வம் என்பது செங்கழுநீர். திருத்தணிகையில் ஒரு பொய்கையில் மூன்று செங்கழுநீர் மலர்ந்ததனால் அதற்குச் செங்கல்வ கிரி என்று பெயர். அங்கே எழுந்தருளியிருக்கும் முருகனுக்குச் செங்கல்வராயன் என்று திருநாமம்.

15. முருகனைப்பற்றிய புராணங்கள் எவை எவை ?

கந்த புராணம், கந்த புராணச் சுருக்கம், முருகனுக்குரிய தலங்களைப்பற்றிய புராணங்கள், வள்ளியம்மை புராணம், தேவயானை புராணம் என்பவை.

16. திருமுருகாற்றுப் படையை அல்லாமல் முருகன் புகழைச் சொல்லும் ஆற்றுப்படை நூல் வேறு உண்டா ?

கச்சியப்ப முனிவர் இயற்றிய திருத்தணிகை ஆற்றுப்படை திருத்தணிகையில் எழுந்தருளியிருக்கும் முருகன் பெருமையைப் பாடுவது.

17. தமிழில் கந்த புராணத்தையன்றி முருகன் வரலாற்றைச் சொல்லும் நூல்கள் உண்டா ?

சம்பந்த சரணாலயர் இயற்றிய கந்தபுராணச் சுருக்கம், வெண்பாப்புலி வேலுச்சாமிக் கவிராயர் இயற்றிய கந்த புராண வெண்பா என்ற இரண்டு நூல்கள் உண்டு. அமரர்

கோவை சி. கு. சுப்பிரமணிய முதலியார் கந்தபுராணக் கலி வெண்பா என்ற சிறிய நூலை இயற்றியிருக்கிறார்.

18. பதுமகோமளை என்பவள் யார்?

கந்தபுராணத்தில் வரும் சூரபன்மனுடைய தேவி அவள்.

19. அம்பிகையின் நிறம் சிவப்பு என்கிறார்கள்; உண்மையா?

பரதேவதையாகிய ராஜராஜேசுவரி செந்நிறம் உடையவள்; 'உதிக்கின்ற செங்கதிர் உச்சித் திலகம்...என்ன விதிக்கின்ற மேனி அபிராமி' என்று அபிராமி அந்தாதியில் வருகிறது.

20. நீலாயதாட்சி, காமாட்சி, விசாலாட்சி, மீனாட்சி—இந் திருநாமங்களுக்குரிய தமிழ்ப் பெயர்கள் எவை?

கருந்தடங்கண்ணி, காமக்கண்ணி, பெருந்தடங்கண்ணி, அங்கயற்கண்ணி என்பவை தமிழிலக்கியத்தில் வரும் திருப் பெயர்கள்.

21. தேவியைக் கதம்பவன சாரிணி, கதம்பவன மத்யகா என்று சொல்கிறார்கள். கதம்பவனத்தின் தமிழ்ப் பெயர் என்ன? கதம்பவனத்தை க்ஷேத்திர விருட்சமாக உடையவை யாவை?

கடம்பவனம் என்று வழங்கும். கடம்ப மரத்தைத் தல விருட்சமாக உடையவை மதுரை, கடம்பர் கோயில் முதலியன.

22. அபிராமி அந்தாதியில், 'கறைக் கண்டனுக்கு மூத்தவளே' என்று வருகிறதே; அது எவ்வாறு பொருந்தும்?

சக்தி தத்துவத்தினின்றும் சதாசிவ தத்துவம் தோன்றும். இதை நினைத்து அவ்வாறு கூறினார்.

23. காளியைத் திகம்பரி, முண்டமாலினி என்று வழங்குவதற்குக் காரணம் என்ன ?

வேறு ஆடையின்றித் திக்கையே ஆடையாக உடைமையால் திகம்பரி என்றும், கபாலங்களைக் கோத்து மாலையாக அணிந்தமையால் முண்டமாலினி என்றும் திருநாமங்கள் வந்தன.

24. 'கல்லாலின் புடையமர்ந்து' என்று தட்சிணாமூர்த்தியின் துதியில் வருகிறது. கல்லால் என்பது என்ன மரம் ?

மலையில் வளரும் ஆல் என்று பொருள்; இப்போது இச்சிமரம் என்று வழங்குவதே அது.

25. பஞ்ச சபைகள் எவை ?

1. *திருவாலங்காட்டில் உள்ளது இரத்தின சபை;* 2. *சிதம்பரத்திலுள்ளது கனகசபை;* 3. *மதுரையிலுள்ளது ரஜதசபை (வெள்ளியம்பலம்);* 4. *திருநெல்வேலியிலுள்ளது தாமிர சபை;* 5. *திருக்குற்றாலத்தில் உள்ளது சித்திர சபை.*

26. சைலாதி மரபுடையோன் என்பது யாரைக்குறிக்கும்?

சிலாதருடைய புதல்வராதலின் நந்தியெம்பெருமானுக்குச் சைலாதி என்று பெயர். அவருடைய மரபில் வந்தவர்கள் சைவசித்தாந்த மடங்களின் தலைவர்கள். திருவாவடுதுறை ஆதீனத்தின் முதல் குருமூர்த்தியாகிய நமசிவாய மூர்த்தியை, 'குருநமசி வாய தேவன், சயிலாதி மரபுடையோன்' என்று ஒரு பாடல் குறிக்கிறது.

27. திருவாரூர்த் தியாகராஜ சுவாமியின் அஜபா நடனம் என்பது யாது ?

தியாகராஜப் பெருமான் திருமாலின் திருமார்பில் இருந்தார். சயனித்திருந்த திருமால் உச்சுவாச நிச்சுவாசத்தோடு அஜபா மந்திரத்தை ஜபித்தார். அதனால் அவர் மார்பு வீங்கித் தணிந்தது. அவர் மார்பிலிருந்த தியாகேசர் அந்த அசைவில் ஆடினார். அந்த ஆட்டமே அஜபா நடனமாகும். வாயால் உச்சரிக்காமல்உச்சுவாச நிச்சுவாசத்தோடு மனனம் பண்ணுவதால் அதற்கு அஜபா மந்திரம் என்று பெயர்; ஹம்ஸ மந்திரம் என்றும் பெயர் பெறும். அதனால் தியாகேசர் நடனத்துக்கு ஹம்ஸ நடனம் என்றும் பெயருண்டு. திருமாலின் திருமார்பில் இருந்தபடியே ஆடியதனால் அவருக்கு இருந்தாடழகர் என்ற பெயர் வந்தது.

28. பாட்டில் விடையைப் பகர்ந்திடும் கி. வா. ஜ.,
நாட்டில் இயற்பெயர் நற்றமிழ் ஞானசம்
பந்தருக் கில்லையோ ? ஆளுடைய பிள்ளையென்று
சந்ததமும் கூறிடுவார் உண்டு.

சமயகுர வர்நால்வர் தம்முளே மூவர்க்
கமையும் இயற்பேர் அறிவோம்.நமையாண்ட
சீரார்சம் பந்தர்பேர் சேக்கிழா ருங்கூறுர்;
ஆரே அறிவார் அதை ?

29. பதினெண் வகைச் சிவகணங்கள் என்பவை யாவை?

பதினெண்கணங்கள் என்று உண்டேயன்றிப் பதினெண் சிவகணங்கள் என்று இல்லை. 'ஒன்பதிற் றிரட்டி உயர்நிலை பெறீஇயர்' என்று திருமுருகாற்றுப்படையிலும், 'பதினெண் கணனும் ஏத்தவும் படுமே' என்று புறநானூற்றிலும் அக் கணங்களைப்பற்றிய செய்தி வருகிறது. நச்சினார்க்கினியர் கூறும் விளக்கம்: தேவர், அசுரர், தைத்தியர், கருடர், கின்னரர், கிம்புருடர், இயக்கர், விஞ்சையர், இராக்கதர், கந்தர்வர், சித்தர், சாரணர், பூதர், பைசாசர், தாராகணம், நாகர், ஆகாயவாசிகள், போக பூமியோர்,

30. சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்கு நாவலாரூரர் என்ற பெயர் எப்படி வந்தது ?

சுந்தரமூர்த்தி சுவாமிகளின் இயற்பெயர் ஆரூரர்; நாவல் என்பது திருநாவலூர் என்ற பெயருடையது. திருநாவலூரில் பிறந்த ஆரூரர் என்பதே பொருள்.

31. திருமாலும் பிரமனும் சிவபிரானுடைய அடியையும் முடியையும் தேடிப் போனதாக வழங்கும் கதைக்குப் புராண ஆதாரம் உண்டா ?

அருணசல புராணத்தில் இந்த வரலாறு வருகிறது.

32. ஸோமாஸ்கந்தர் என்ற சொல்லுக்கு உமையுடன் கூடிய முருகன் என்பது பொருள்; இந்தச் சொல்லால் சிவ பெருமானைக் குறிக்கிறோம்; இது எப்படிப் பொருந்தும் ?

உமையுடனும் ஸ்கந்தனுடனும் கூடியவன் (ஸ+உமா+ஸ்கந்த:) என்பதே அத் தொடருக்குப் பொருள்.

33. சங்கரன் என்ற சொல்லுக்குப் பொருள் என்ன ?

நன்மையைச் செய்கிறவன் என்று பொருள்.

34. திருமுறைகள் எத்தனை ? அப்பெயர் ஏன் வந்தது ?

சைவத் திருமுறைகள் பன்னிரண்டு. முறை என்பதற்கு நூல் என்பது பொருள். 'இறைநிலம் எழுதுமுன் இளைய பாலகன், முறைவரை வேனென முயல்வ தொக்குமால்' என்று கந்த புராணத்தில் அச்சொல் இப்பொருளில் வருவது காண்க; சிறந்த நூல்களாதலின் திருமுறைகள் என்றுபெயர் பெற்றன.

35. திருஞானசம்பந்தரைக் கவுணியர்கோன் என்று பெரிய புராணம் கூறுகிறது. கவுணியர் என்பது யாரைக் குறிக்கிறது ?

அந்தணர்களின் கோத்திரங்களில் ஒன்று கவுண்டின்ய கோத்திரம். அதில் தோன்றினவர்களைக் கவுண்டின்யர் என்பது வழக்கம்; அதுவே கவுணியர் எனத் திரிந்தது. சம்பந்தப் பெருமான் கவுண்டின்ய கோத்திரத்தில் தோன்றினவர்; கவுண்டின்யர் என்பவர் பழங்காலத்தில் இருந்த மகரிஷி.

36. சிவபெருமானுக்குப் பிள்ளைத் தமிழ் இல்லை என்கிறார்களே; அது உண்மையா ? ஏன் ?

ஆம்; 'பிறவா யாக்கைப் பெரியோா' னாதலின் அவன் குழந்தையாக இருந்ததில்லை. அதனால் பிள்ளைத் தமிழ் பாடுவது மரபு அன்று.

37. பஞ்ச புராணம் என்பது எந்த நூல்களைக் குறிக்கிறது ?

சிவ பூசைக்குப் பிறகு ஓதப்பெறும் பாடல்களையுடைய நூல்களைக் குறிக்கும். அவை தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, பெரிய புராணம் என்பன.

38. புராரி என்பது சிவனைக் குறிப்பதற்குக் காரணம் என்ன ?

புரங்களின் பகைவன் என்பது பொருள். சிவபெருமான் திரிபுரங்களை அழித்தமையால் இந்தப் பெயர் பெற்றான்.

39. ஆகமம் என்றால் என்ன? இருபத்தெட்டு ஆகமங்கள் எவை ?

ஆகமம் என்பதற்குப் பொதுவாக நூல் என்பது பொருள். நூல் ஆதாரத்தை ஆகமப் பிரமாணம் என்று சொல்லுவதிலிருந்து இதை அறியலாம். ஜைன ஆகமங்கள், பாஞ்சராத்திர ஆகமங்கள், வைகானஸ ஆகமங்கள், சிவாகமங்கள், தேவி ஆகமங்கள் என்று அந்த அந்தச் சமயத்துக்கு வேறு வேறு உண்டு. இருபத்தெட்டு ஆகமங்கள் சைவத்துக்குரியவை; அவை வருமாறு: காமிகம், யோகசம், சிந்தியம், காரணம், அசிதம், தீப்தம், சூட்சுமம், சகசிரம், அஞ்சுமான், சுப்பிரபேதம், விசயம், நிசுவாசம், சுவாயம்புவம் ஆக்கினேயம், வீரம், ரௌரவம், மகுடம், விமலம், சந்திரஞானம், முகவிம்பம், புரோற்கீதம், வனிதம், சித்தம், சந்தானம், சர்வோத்தமம், பாரமேசுவரம், கிரணம், வாதுளம்.

40. சிவபெருமானைத் 'தோடுடைய செவியன்' என்று சொல்வது எதனால் ?

சிவபெருமான் இடக்காதில் தோடும் வலக் காதில் சங்கக் குழையும் அணிந்திருக்கின்றான். வாம பாகம் அம்பிகைக் குரியதாதலின் அந்தக் காதில் பெண்கள் அணியும் தோட்டை அணிந்திருக்கிறான்.

41. சிவன் கோவில்களில் அம்பிகை, சுப்பிரமணியர் முதலியவர்களுக்கு மூலவரும் உற்சவரும் ஒரே உருவமாக இருப்பினும் சிவனுக்குமட்டும் மூலவர் லிங்க உருவமாயும் உற்சவர் வேறு விதமாகவும் அமையக் காரணம் என்ன ?

அம்பிகை, சுப்பிரமணியர் முதலிய மூர்த்திகளிலுங்கூட மூலமூர்த்திக்கும் உற்சவ மூர்த்திக்கும் வேறுபாடு உண்டு. தண்டபாணி மூல விக்கிரகமாக இருக்க, உற்சவ விக்கிரகம் வள்ளி தெய்வானையோடு உள்ள சுப்பிரமணியராக இருப்பதும் உண்டு; திருமால் ஆலயங்களிலும் மூல மூர்த்தி வேறு, உற்சவ மூர்த்தி வேறாக இருப்பது உண்டு. சிவ பெருமானுடைய வடிவங்கள் இருபத்தைந்தில் முதலாவதாக

இருப்பது லிங்கோற்பவ மூர்த்தி. அது உருவும் அருவும் இல்லாத அருவுருவம். அதை உற்சவ மூர்த்தியாக எழுந்தருளுவிக்கும் வழக்கம் எங்குமில்லை. அது ஸ்திரமாக உள்ள மூர்த்தி.

42. சிவபெருமானை ஏன் லிங்க உருவில் வழிபடுகிறோம் ?

சிவபெருமானுக்குரிய மூர்த்திகளில் முதலாவது லிங்கோற்பவ மூர்த்தி. அருவம், அருவுருவம், உருவம் என்ற மூன்று வகையான முறையில் இறைவனை வழிபடுகிறோம். அருவாக உள்ள இறைவன் அருவுருவாக வந்து பிறகு உருவமுடையவனாக வருகிறான். சிவலிங்கம் கை கால் முதலியன பெறாமையால் அருவம் போன்றது; கண்ணால் காணுவதனால் உருவம். ஆகவே அது அருவுரு. இறைவன் உருவாகத் தோற்றுவதற்குமுன் சோதிலிங்கமாக முதலில் தோன்றினான் என்பது புராண வரலாறு. 'மூலைத்தானை எல்லார்க்கும் முன்னே தோன்றி' என்பது தேவாரம்

43. நமசிவாய, சிவாயநம இரண்டும் என்ன ?

சிவனுக்கு நமஸ்காரம் என்பது சொற்றொடரின் பொருள். ஆனால் ஒவ்வோர் எழுத்துக்கும் தனித் தனியே பொருள் உண்டு. முதலிலுள்ளது ஸ்தூல பஞ்சாட்சரம்; அடுத்தது சூக்ஷ்ம பஞ்சாட்சரம்.

44. சிவ பக்தர்களான அறுபத்து மூன்று நாயன்மார்களில் நால்வர்மட்டும் சிறந்து விளங்கக் காரணம் யாது ?

நால்வரில் ஞானசம்பந்தர், அப்பர், சுந்தரர் என்னும் மூவரே அறுபத்துமூவரைச் சார்ந்தவர்கள். மாணிக்க வாசகர் அவர்களைச் சாராதவர். இந் நால்வரும் பல வகை அருட் செயல்களைச் செய்து அரிய பாக்களையும் அருளிச் செய்தவர்கள்; ஆகையினால் சைவ சமயசாரியர்களாகப் போற்றப் பெற்றனர்.

45. திருவெம்பாவையில் வரும், 'ஒரு உலவா ஒருதோழன் தொண்டருளன்' என்பதற்குச் சரியாகப் பொருள் விளங்க வில்லை; விளக்க வேண்டும்.

'ஒரு தோழம் தொண்டருளன்' என்பதுதான் சரியான பாடம். தோழம் என்பது பெருங் கூட்டத்தைக் குறிப்பது. பெருங் கூட்டமான தொண்டர்களை உடையவன் என்பது பொருள்.

46. நம்பியாண்டார் நம்பி கண்டுபிடித்த தேவாரப் பதிகங் களை அன்றிப் பிற்காலத்தில் ஏட்டுச் சுவடிகளில் எவையேனும் புதிய பதிகங்கள் கிடைத்திருக்கின்றவா?

திருவாரூருக்கு அருகில் திருவிடைவாய் என்ற சிவத் தலம் ஒன்று இருக்கிறது. அங்கே உள்ள கல்வெட்டு ஒன்றில் ஒரு முழுத் தேவாரப் பதிகம் கிடைத்திருக்கிறது. ஞானசம் பந்தர் பாடியது அது. அது நம்பியாண்டார் நம்பி வகுத்து அமைத்த திருமுறைகளில் இல்லை. இப்போது அதைச் சில புத்தகங்களில் அச்சிட்டிருக்கிறார்கள்.

47. பழைய நூல்களில் காஞ்சி ஏகாம்பர நாதரைப் பற்றியும் காமாட்சியம்மையைப் பற்றியும் எவையேனும் செய்திகள் வருகின்றனவா?

மாமூலனார் என்பது ஒரு புலவர் பெயர். அப்பெயர் ஏகாம்பரநாதரைக் குறிப்பதாகச் சிலர் கொள்வர், மாமரத் தின் அடியில் இருப்பவர் என்பது பொருள். மாவடி என்ற பெயரை இன்றும் சிலர் வைத்துக்கொள்கிறார்கள் அப்படியே காமக்கணி என்பது காமக்கண்ணி என்பதிலிருந்து வந்ததென்றும், காமாட்சி என்பதையே அவ்வாறு வழங்கினர் என்றும் கொள்ள இடம் உண்டு. இந்த இரண்டு பெயர்களும் சங்ககாலப் புலவர்களின் பெயர்களாக வந்துள்ளன.

48. ஆழ்வார்களின் பாசுரங்கள் வேதசாரம் என்று வைணவர்கள் கூறுவர். நாயன்மார்களின் பாசுரங்களுக்கு அத்தகைய சிறப்பு உண்டா ?

சைவத் திருமுறைகளைத் தமிழ் வேதம் என்பது வழக்கம். ஞானசம்பந்தரது தேவாரத்தைப்பற்றிக் குறிக்கும்போது, 'எல்லையிலா மறைமுதல்மெய் யுடனெடுத்த எழுதுமறை' என்று குறிக்கிறார், சேக்கிழார். 'தேவாரம் வேதசாரம்' என்ற புத்தகத்தைச் செந்தில்நாதையர் என்பவர் எழுதியிருக்கிறார்.

49. சிவசகசிர நாமம் எந்தப் புராணத்தில் இருக்கிறது ?

மகாபாரதத்தில் இருக்கிறது. விஷ்ணு சகசிர நாமமும் அதில்தான் இருக்கிறது.

50. 'ஆத்தி சூடி அமர்ந்த தேவனை' என்பது எந்தக் கடவுளைக் குறிக்கிறது ?

சிவபெருமானை. அவர் ஆத்தி மலரை அணிந்திருக்கிறார்.

51. 'அண்ணல் ஐம்முகங்களும் அருளும் ஆகமம்' என்ற பாடலில் வரும் ஐம்முகங்கள் யாவை ?

சிவபிரானுக்குரியனவாகிய ஈசானம், தத்புருஷம், அகோரம், வாமதேவம், சத்தியோஜாதம் என்னும் ஐந்து முகங்கள்.

52. பரமேசுவரர் என்பவர் மும்மூர்த்திகளில் ஒருவரா ? அல்லது வேறுபட்டவரா ?

வைணவர்கள் மும்மூர்த்திகளில் ஒருவர் என்பர்; சைவர்கள் மும்மூர்த்திகளுக்கும் மேலானவர் என்பர்.

53. மகேசுவர பூஜை என்று ஏன் பெயர் வந்தது ?

மகேசுவரனுடைய அடியார்கள் மாகேசுவரர்கள். அவர்களை வழிபட்டு உணவளிப்பதனால் மாகேசுவர பூஜை என்று பெயர் வந்தது; அதையே மகேசுவர பூஜை என்பர்.

54. குதிரை முகமுடைய கடவுளர் உண்டா ?

ஹயக்கிரீவர் குதிரை முகமுடையவர்; திருமாலின் அவதாரம். தும்புரு என்னும் முனிவர் குதிரை முகமுடையவர்.

55. திருச்சானூர் அம்மனுக்குரிய 'ஸ்ரீ அலமேலு மங்கா' என்ற பெயர் 'அலர்மேல் மங்கை' என்ற தமிழ்ப் பெயரிலிருந்து மருவியதுதானா ? அப்பெயரின் வடமொழி யுருவம் யாது ?

ஆம். பத்மாவதி என்பது வடமொழிப் பெயர்.

56. தசாவதாரத்தில் ஒன்றான புத்தாவதார மூர்த்தியும், புத்த மதம் ஸ்தாபித்த புத்தரும் ஒருவரா ?

இருவரும் ஒருவரே. தசாவதாரத்தில் புத்தாவதாரமும் சேர்ந்தது என்பது சிலர் கொள்கை; அஷ்டபதி பாடிய ஜய தேவர் அந்தக் கொள்கையை உடையவர்.

57. திருமண் அணிவதை நாமம் போடுதல் என்று வழங்குகிறார்கள். அது எப்படி வந்தது ?

திருமாலின் திருநாமத்தைச் சொல்லி அணிவதால் அந்த வழக்கு வந்திருக்க வேண்டும். வைணவர் அல்லாத பிறரே இதைப் பெரும்பாலும் வழங்குகிறார்கள்.

58. அஷ்டலட்சுமிகள் யாவர் ?

தனலக்ஷ்மி, தான்யலக்ஷ்மி, தைரிய லக்ஷ்மி, வீரலக்ஷ்மி, வித்தியாலக்ஷ்மி, கீர்த்திலக்ஷ்மி, விஜயலக்ஷ்மி, ராஜ்ய லக்ஷ்மி.

59. திருவிருத்தம் என்ற நூல் யாரால் இயற்றப்பட்டது? அது எவ்வகையான நூல்?

நம்மாழ்வார் இயற்றியது. கட்டளைக் கலித் துறையால் திருமாலின் புகழைச் சொல்வது.

60. எங்கள் ஊராகிய மதுரையில் அழகர் திருவிழாக் காலத்தில் நகரப் பெருமக்கள் சிலர் ஒருங்கிணைந்து ஆற்றின் ஓர் ஓரத்தில் ஒரு மண்டபத்தில் பெருமாளை வரவேற்றுப் பிறகு ஏழைகளுக்கு உணவளிக்கின்றனர். அதனைச் 'சிறப்பு' என்கின்றனர். உதாரணம்: பந்தல்குடியார் சிறப்பு. அந்தப் பெயர் எவ்விதம் வந்தது?

பொது, சிறப்பு என்ற இரண்டும் ஒன்றற்கொன்று வேறுபட்ட பொருளுடையன. சில விசேஷ நாளில் நடப்பதால் சிறப்பு என்று வழங்குகிறது. சிறப்பு என்பதற்கே விழா என்று பொருள் உண்டு.

'சிறப்பொடு பூசனை செல்லாது வானம்
வறக்குமேல் வானோர்க்கும் ஈண்டு'

என்ற திருக்குறளில் நைமித்திகமாகிய விழாவைச் சிறப்பு என்று சொல்கிறார் வள்ளுவர். ஆகவே, விழாவின் அங்கமாக உள்ள நிகழ்ச்சிகளைச் சிறப்பு என்று குறிக்கிறார்கள். கோயில் விழாக்களில் பெருமாளுக்குச் சமர்ப்பித்து அனைவருக்கும் உணவு அளிப்பதை வைணவர்கள், 'சிறப்பு விடுதல்' என்பார்கள்.

61. 'அஞ்சிலே ஒன்று பெற்றான்' என்ற பாடலில் அஞ்சு அஞ்சு என்று வருகிறதே; பொருள் என்ன?

'அஞ்சிலே ஒன்று பெற்றான், அஞ்சிலே ஒன்றைத் தாவி அஞ்சிலே ஒன்று ஆறாக ஆரியற் காக ஏகி, அஞ்சிலே ஒன்று பெற்ற அணங்கைக்கண்டு அயலார் ஊரில், அஞ்சிலே ஒன்றை வைத்தான் அவன்நம்மை அளித்துக் காப்பான்' என்பது கம்ப

ராமாயணத்தில் வரும் துதி. பஞ்ச பூதங்களையே அஞ்சு என்று குறிக்கிருர் புலவர். 'ஐந்து பூதங்களில் ஒன்ருகிய வாயு விஞல் பெறப்பட்ட அநுமன், ஐந்தில் ஒன்ருகிய ஆகாயமே வழியாக, மேலானவனுகிய இராமனுக்காகச் சென்று, ஐந்தில் ஒன்ருகிய பிருதுவி அல்லது பூமி பெற்றமகளாகிய சீதையைக் கண்டு, பகைவர் ஊரில் ஐந்தில் ஒன்ருகிய தீயை வைத்தான். அவன் நமக்கு அருள் செய்து பாதுகாப்பான்' என்பது பொருள். பஞ்ச பூதங்களையும் பாட்டில் இணைத்துச் சொன்னது ஓர் அழகு.

62. இராமாயணத்தில் வரும் பரசுராமரும் மகாபாரதத்தில் வரும் கர்ணனுக்கு வில் வித்தை கற்றுக் கொடுத்த பரசுராமரும் ஒருவரா ? அப்படியாஞல் ராமாயணமும் மகாபாரதமும் ஒரே சமயம் நடந்த நிகழ்ச்சிகளாகுமே

இருவரும் ஒருவரே. சிரஞ்சீவிகளில் ஒருவர் பரசுராமர். ஆதலின் அவர் இரண்டு காலங்களிலும் இருந்தவர்.

63. கம்பராமாயணத்தில் கடவுள் வாழ்த்துப் பாடலில் கம்பர் ஆக்கல், காத்தல், அழித்தல் என்ற மூன்று தொழில் புரியும் பிரம்மா, விஷ்ணு, சிவன் என்ற மூவரைப்பற்றிக் கூறிய பின், 'அவர் தலைவர், அன்னவர்க்கே சரண்' என்று ஒருமையில் கூறுகிருர். இதற்கு விளக்கம் என்ன ?

'உலகம் யாவையும் தாமுள வாக்கலும், நிலைபெறுத் தலும் நீக்கலும் நீங்கலா, அலகி லாவிளை யாட்டுடை யாரவர், தலைவர் அன்னவர்க் கேசரண் நாங்களே' என்பது பாட்டு. கடவுள் ஒருவர்; அவரே மூன்று தொழிலுக்கும் மூலகாரணர் என்ற கருத்தைச் சொல்வது இந்தப் பாட்டு. உடையார் எவரோ அவர் தலைவர்; அவருக்கு நாங்கள் சரணம் என்று பொருள் கொள்ள வேண்டும்;எல்லாம் ஒருவரையே குறிப்பன.

64. பால்நிறக் கடவுள், நீலநிறக் கடவுள் யாவர்?

பால்நிறக் கடவுள் பலராமன். நீலநிறக் கடவுள் கண்ணன். விநாயகரையும் பால்நிறக் கடவுள் என்று அருணகிரியார் கூறுவார்.

65. சீதை இராவணன் மகள் என்பதற்கு இலக்கியச் சான்று உண்டா?

வால்மீகி ராமாயணத்திலோ கம்ப ராமாயணத்திலோ அதற்கு ஆதாரம் இல்லை. ஆனாலும் தமிழ் நாடோடிப் பாடல்களிலும் வேறு மொழிகளிலுள்ள நாடோடிக் கதைகளிலும் சீதை இராவணனுக்கு மகளாகப் பிறந்த வரலாற்றுக்குரிய குறிப்புகள் கிடைக்கின்றன. 'இலங்கையிலே நான் பிறந்தேன்' என்பது தமிழ் நாடோடிப் பாட்டில் வரும் அடி.

66. சைவர்கள் பிள்ளையார் சுழியைப் போடுவது போல வைஷ்ணவர்கள் எதை முதலில் போடுவார்கள்?

ஸ்ரீ என்னும் எழுத்தை எழுதுவார்கள்.

67. தசரதனுடைய மனைவியருள் இளையவள் யார்? சுமித்திரையா, கைகேயியா?

சுமித்திரையே. 'நெறி திறம்பாத் தன் மெய்யை நிற்ப தாக்கி, இறந்தான்றன் இளந்தேவி' என்பது கம்பராமாயணம்.

68. சீதாபிராட்டி அநுமனிடம் அடையாளமாகக் கொடுத்த சூடாமணி என்பது என்ன?

சூடாமணி என்பதற்குத் தலையில் அணியும் மணிகளோடு கூடிய ஆபரணம் என்று பெயர். அது முன் தலையில் வகிடு பிரியும் இடத்தில் மங்கையர் அணிவது. அதைச் சுட்டி என்றும் சொல்வர். இந்த நாட்டில் குழந்தைகளுக்கே பெரும்பாலும் சுட்டியை அணிகிறோம். வட நாட்டில் இன்றும்

நெற்றிக்கு மேலே தலையில் சூடாமணியை மங்கைமார் அணி கின்றனர். பழங்காலத்தில் இங்கேயும் அணிந்திருந்தனர் என்பதற்கு இலக்கிய ஆதாரம் உண்டு.

69. ஆட்டுக்கிடாய் வாகனம் உடையவர்கள் யார் யார்?

முருகன், செவ்வாய், அக்கினி என்னும் மூவரும் ஆட்டை வாகனமாக உடையவர்கள்.

70. கடவுளுக்கு நிவேதனம் செய்யும் வழக்கத்தைத் தேவாரம் சொல்லவில்லை என்கிறார்களே; அது உண்மையா?

'பூசனை ஈச னார்க்குப் போற்றவிக் காட்டி னோமே' என்பதில் அவி காட்டினோம் என்பது நிவேதனத்தைக் குறிக் கிறது. பழைய கல்வெட்டுக்களில் நிவேதனத்துக்குரிய பொருள்களின் அளவுகள் சொல்லப்பெற்றிருக்கின்றன.

71. பழைய காலத்தில் ஐயப்பன் வழிபாடு தமிழ் நாட்டில் இருந்ததா?

இருந்தது. ஐயப்பனைச் சாத்தன் என்று வழங்கினர். காஞ்சீபுரத்தில் காமாட்சியம்மன் கோயிலில் சாஸ்தா சந்நிதி இருக்கிறது. 'காமக்கோட் டங்காவல், மெச்சி இனிதிருக்கும் மெய்ச்சாத்தன்' என்று ஒரு பழம் பாட்டு அவரைக் குறிக் கிறது.

72. சைவர்களுக்கும் அத்வைதிகளுக்கும் வித்தியாசம் உண்டா? சைவம், அத்வைதம் இவற்றின் அடிப்படைகள் யாவை?

சிவபெருமானை வழிபடுகிறவர்கள் யாவரும் சைவரே; ஆதலின் அத்வைதிகளிலும் சைவர் உண்டு; அப்பைய தீட்சி தர் அத்தகையவர். சைவம் என்பது வழிபாட்டினால் அமைந்த சொல். அத்வைதம் என்பது தத்துவக் கோட் பாட்டினால்

அமைந்த பெயர். சைவர்களில் பலவகைஉண்டு. முக்கியமாகச் சைவ சித்தாந்திகள், வீர சைவர்கள் என்பவர்கள் இப்போது உள்ளனர். சைவ சித்தாந்தத்துக்கும் அத்வைத வேதாந்தத் துக்கும் ஒற்றுமைகளும் வேற்றுமைகளும் உண்டு. அத்வைதம் ஒரே பொருள்தான் உண்மை என்றும், 'மாயையால் உண்டான தோற்றம் மாறினால் ஆன்மாவே பரமாத்மாவாக உள்ள நிலை அநுபவத்தில் கைவரும் என்றும் கூறும். சைவ சித்தாந்தம் பதி, பசு, பாசம் என்ற மூன்றும் நித்தியமான பொருள்கள் என்றும், பசு பதியுடன் இரண்டறக் கலத்தலே முக்தி என்றும் கூறும்.

73. முப்பத்துமூன்று தேவர்கள் என்பதற்கு வகை என்ன?

பன்னிரண்டு ஆதித்தர்கள், பதினொரு ருத்திரர்கள், எட்டு வசுக்கள் அசுவினி தேவர்கள் இருவர் ஆக முப்பத்து மூவர்.

74. துவாதச உபநிஷத்துக்கள் யாவை ?

ஈசாவாஸ்யோபநிஷத், கேநோபநிஷத், கடோபநிஷத், பிரச்நோபநிஷத், முண்டகோபநிஷத், மாண்டூக்யோபநிஷத், தைத்திரீயோபநிஷத், ஐதரேயோபநிஷத், சாந்தோக்யோப நிஷத், பிருகதாரண்யகோபநிஷத், சுவேதாசுவதரோபநிஷத் கௌஷீதகி உபநிஷத் என்பன.

75. கோபுரத்துக்கும் விமானத்துக்கும் வேறுபாடு உண்டா ?

இறைவன், இறைவியின் கருப்பக்கிருகத்துக்கு மேல் இருப்பது விமானம். மற்றவை கோபுரங்கள்.

76. ஆறு சாத்திரங்கள் எவை ? ஒவ்வொன்றும் எதைப் பற்றிக் கூறுகிறது ?

வேதத்தின் அங்கங்களான வியாகரணம், சோதிடம், நிருக்தம், சந்தஸ், சிக்ஷை, கல்பம் என்ற ஆறும் ஆறு சாத்திரங்கள். வியாகரணம் என்பது சொல் இலக்கணம். சோதிடம் என்பது கோள்களின் நிலையைக் கூறுவது. நிருக்தம் என்பது வேதத்தில் வரும் சொற்களின் பொருளைச் சொல்வது. சந்தஸ் என்பது யாப்பிலக்கணம். எழுத்திலக்கணத்தைக் கூறுவது சிக்ஷை. வேத மந்திரங்களில் இன்னது இன்ன கருமத்தில் பயன்படுவதென்று கூறுவது கல்பம்.

77. 'அருவினைகள் ஐந்தும் அறும்' என்ற ஔவை பாடலில் வரும் வினைகள் ஐந்து எவை ?

பஞ்ச மாபாதகங்கள்.

78. வேதங்களை மூன்று என்றும், நான்கு என்றும், பல என்றும் மூன்று விதமாகச் சொல்கிறார்களே; மூன்றும் எப்படிப் பொருந்தும் ?

பெருவழக்காக இருப்பது நான்மறை என்பது. ரிக்வேதம், யஜுர் வேதம், சாமவேதம், அதர்வவேதம் என்பவை அவை. அதர்வவேதம் என்பது ஏனைய மூன்று வேதங்களிலிருந்தும் தொகுத்த மந்திரங்களின் தொகுதி. ஆதலால் அதைத் தனியாகக் கருதாமல் வேதம் மூன்று என்று கொண்டார்கள். அதனால் வேதத்துக்குத் 'த்ரயீ' என்ற பெயர் வந்தது, சாகைகள் பலவாக் வேதம் விரிந்திருப்பதால் பல வேதம் என்ற வழக்கு வந்தது. 'அனந்தாவை வேதா' என்பார்கள்.

79. எம்பிரான் சதகத்தில், 'நண்ணுமறு சமயங்கள் பேர்வேறல்லால் நாதன்நீ ஒருவனே' என்றுள்ளது. மேற்கூறிய அறு சமயங்கள் எவை ?

சிவனைப் பரம்பொருளாக வழிபடும் சைவம், சக்தியைப் பரதேவதையாகக் கொள்ளும் சாக்தம், கணபதியை முதற் கடவுளாகக் கொண்ட காணபத்தியம், முருகனைப் பெருந்

தெய்வமாக வழிபடும் கௌமாரம், திருமாலைப் பரதெய்வ மாக வணங்கும் வைணவம், சூரியனைக் கடவுளாக வணங் கும் சௌரம் என்பன ஆறு சமயங்கள்.

80. வேதத்துக்கும் வேதாந்தத்துக்கும் உள்ள வேறுபாடு என்ன?

வேதம் என்பது முழு நூலுக்கும் பெயர். வேதாந்தம் என்பது அதன் இறுதிப் பகுதிக்குப் பெயர். வேதம் கர்ம காண்டம், உபாசனா காண்டம், ஞான காண்டம் என்ற மூன்று பகுதிகளை உடையது. ஞான காண்டமே வேதாந்த மாகிய உபநிஷத்துக்கள்.

81. 'வானத்தின்மீது மயிலாடக் கண்டேன், மயில்குயில் ஆச்சுதடி, அக்கச்சி-மயில் குயிலாச்சுதடி'—இதற்குப் பொருள் தருக?

யோகம் செய்பவருக்கு உண்டாகும் அநுபவத்தைக் கூறுவது இது. அழகிய ஒளிமயிலைப் போலச் சோதியின் காட்சி முதலில் தோன்றப் பின்பு இனிய நாதம் கேட்கு மாம். அதனையே இவ்வாறு குறிப்பாகச் சொன்னார் இராம லிங்க சுவாமிகள்.

82. கோயில்களில் மூலவர் என்றும் உற்சவர் என்றும் ஒரே தெய்வத்துக்கு இரு வேறு வடிவங்களை அமைத்து வழிபடுவதற்குக் காரணம் யாது?

கோயில் வழிபாட்டில் நித்தியமென்றும் நைமித்திக மென்றும் இரண்டு உண்டு. 'சிறப்பொடு பூசனை செல்லாது' என்ற திருக்குறள் நைமித்திகமாகிய விழாவைச் சிறப் பென்றும், நித்தியமாகிய ஆராதனையைப் பூசனையென்றும் குறிக்கிறது. விசேட காலங்களில் யாவரும் காணத் திருவீதியில் எழுந்தருளுவதற்காகவே உற்சவ மூர்த்திகளை அமைத்திருக்கிறார்கள். கோயிலுக்கு வர இயலாதவர்கள் எளிதில் வழிபட இந்த உற்சவமூர்த்திகள் பயன்படு

கின்றனர். இறைவனை நாடிச் சென்று வழிபடும் முயற்சியும் அன்பும் இல்லாதவர்களை ஆட்கொள்ள ஆண்டவன் விழாக் கொண்டு உலா வருகிறான் என்று பெரியோர் கூறுவர். 'நையாத மனத்தினரை நைவிப்பான் இத்தெருவே, ஐயா நீ உலாப் போந்த அன்றுமுதல்' என்பது திருவிசைப்பா.

83. சும்மா இருத்தல் என்பதன் முழுத்தன்மை என்ன? அவ்வாறு இருப்பது மனிதனால் முடியுமா?

சும்மா என்பதற்குச் செயலின்றி என்று பொருள். மனம், வாக்கு, காயம் என்ற மூன்றும் நினைப்பு, உரை செயல் என்பன அடங்கிச் சமாதி நிலையில் அமர்ந்திருத்தலையே சும்மா இருத்தல் என்பார்கள். கருவி கரணம் கழன்ற நிலை அது. மெய்ஞ்ஞானியர்கள் அந்த நிலையில் இருப்பார்கள். ராம கிருஷ்ணர், ரமண பகவான் போன்றவர்கள் அவ்வாறு இருந்தவர்கள்.

84. ஆழ்வார்களின் பாடல் பெற்ற திருமால் திருப்பதிகள் 108 என்ற வரையறை இருக்கின்றது. அதுபோல நாயன் மார்கள் பாடிய சிவஸ்தலங்கள் எத்தனை? இவற்றின் விவரம் அடங்கிய தொகுப்பு நூல் எங்கே கிடைக்கும்?

தேவாரப் பாடல் பெற்ற தலங்கள் 274. அவற்றைப் பற்றிய விவரங்களைச் சிவஸ்தல மஞ்சரி என்ற நூலில் காண லாம் கிடைக்கும் இடம். வ. சு. செ. தணிகை நாயகன், ஸ்ரீநிவாச அவென்யூ, வேங்கடராமையர் தெரு, நாராயண செட்டி தோட்டம், சென்னை-28.

85. காஞ்சிவாய்ப் பேரூர் என்று பேரூரைச் சொல் கிறார்களே; காஞ்சிவாய் என்பதற்கு என்ன பொருள்?

காஞ்சி என்பது ஓர் ஆற்றின் பெயர். இப்போது நொய்யல் என்று வழங்குகிறது. அதன் கரையில் இருப் பதால் அந்தப் பெயர் வந்தது.

86. கடம்பர் கோயில் எங்கே உள்ளது ?

திருச்சி மாவட்டத்தில் உள்ள குழித்தலையின் ஒரு பகுதியாக இப்போது கடம்பர் கோயில் இருக்கிறது.

87. திருவதிகை என்பது இயற்பெயரா ? அல்லது மரூஉவா ?

அதிகை என்பது, அதியரைய மங்கை அல்லது அதியரைய மங்கலம் என்பதன் மரூஉ.

88. அட்ட வீரட்டத் தலங்கள் எவை ?

1. திருக்கண்டியூர் - *பிரமன் சிரங்கொய்த தலம்.* 2. திருக்கடவூர் – *காலனைச் சங்காரம் செய்த தலம்.* 3. திருவதிகை - *திரிபுர சங்காரத் தலம்.* 4. திருவழுவூர் - *கஜாசுரனைச் சங்கரித்த இடம்.* 5. திருப்பறியலூர் - *தக்க சங்காரம் நடைபெற்ற இடம்.* 6. திருக்கோவலூர் - *அந்தகாசுர சங்காரப் பதி.* 7. திருக்குறுக்கை – *காமனைச் சங்கரித்த இடம்.* 8. திருவிற்குடி-*சலந்தராசுரனை அழித்த இடம்.*

89. அதியேந்திர விஷ்ணுக்கிருகம் என்பது எந்தத் திவ்ய தேசத்தைக் குறிக்கிறது ?

நாமக்கல்லிலுள்ள நரசிம்மசுவாமி கோயிலுக்கு அப்பெயர் உண்டென்று கல்வெட்டினால் தெரிகிறது. அதிகமான் வம்சத்தினர் எடுத்த கோயிலாக இருக்கலாம்.

90. சிதம்பரம் ஆகாயத் தலம் என்று கூறுகிறார்களே; அதை விளக்குக.

அங்கே இறைவன் வெறும் வெளியாக இருக்கிறான் என்று புராணம் கூறும்; அப்படி உள்ள இடத்தை இரகசியம் என்று கூறுகிறார்கள்.

91. ஆறு படைவீடுகள் யாவை ? பழமுதிர் சோலை எங்கே இருக்கிறது ?

திருப்பரங்குன்றம், திருச்செந்தூர், திருவாவினன்குடி, திருவேரகம், குன்றுதோறாடல், பழமுதிர்சோலை என்பன ஆறு படைவீடுகள். திருமாலிருஞ்சோலை மலையாகிய அழகர் மலையில் இருக்கிறது, பழமுதிர் சோலை என்னும் படைவீடு. மதுரையிலிருந்து பஸ்ஸில் போகலாம்.

92. மாணிக்கவாசகர் அருள் பெற்ற திருப்பெருந்துறை எங்கே இருக்கிறது ?

அறந்தாங்கியிலிருந்து கிழக்கே செல்லவேண்டும். இப்போது ஆவுடையார் கோயில் என்று வழங்குகிறது.

93. சுசீந்திரம் என்பது தாணுமாலயப் பெருமாள் கோயில் கொண்ட தலம். அதற்கு அப்பெயர் வந்தகாரணம் என்ன ?

சுசியாகிய அக்கினியும் தேவர் கோமானாகிய இந்திரனும் பூஜை செய்த தலம் ஆதலின் அப் பெயர் வந்தது.

94. சென்னையில் கந்த கோட்டமும் காஞ்சியில் குமர கோட்டமும் உள்ளன. கோட்டம் என்றால் பொருள் என்ன ? இப்படி எத்தனை கோட்டங்கள் உள்ளன ?

கோட்டம் என்பது இந்த இடங்களில் கோயில் என்பதைக் குறிக்கும். 'உச்சிக் கிழான்கோட்டம், ஊர்க் கோட்டம், வேற்கோட்டம்' என்று சிலப்பதிகாரத்தில் மற்றக் கோயில்களுக்கும் இந்தப் பெயர் வருதலை உணரலாம்

95. முருகனுக்குரிய ஆறு படைவீடுகளைச் சேர்ந்த குன்றுதோறாடல், பழமுதிர்சோலை மலை என வரும் இரண்டுக்கும் இப்போது என்ன பெயர்கள் வழங்குகின்றன ?

குன்றுதோறாடல் என்பது ஒரு தலம் அன்று. பல மலைகளையும் குறிப்பது. முருகன் எழுந்தருளிய மலை ஏதானாலும்

அது குன்றுதோறாடலில் அடங்கும். பழமுதிர் சோலை என்பது இப்போது அழகர் மலை என்று வழங்குகிறது.

96. இலங்கையில் தேவாரத் திருப்புகழ்ப் பாடல்களைப் பெற்ற தலங்கள் எவை ?

திருக்கேதீச்சரம், திருக்கோணமலை என்னும் இரண்டும் தேவாரத் திருப்புகழ்ப் பாடல்களைப் பெற்றவை. கதிர்காமத் துக்குத் திருப்புகழ்ப் பாடல்கள் உண்டு. ஒரு திருப்புகழில், 'செந்திலங் கண்டிக் கதிர்வேலா, தென்பரங் குன்றிற் பெரு மாளே' என்று வருகிறது. அந்தப் பாட்டில் கண்டி என்ற பெயர் வருகிறது. இலங்கையிலுள்ள கண்டி மாநகரம் என்று கொள்ளும்படி அது அமைந்திருக்கிறது.

97. மல்லிகார்ஜுனம் என்பது ஆந்திர நாட்டிலுள்ள ஸ்ரீசைலமென்றும், மத்தியார்ஜுனம் திருவிடை மருதூர் என்றும் சொல்கிறார்கள். புடார்ஜுனம் என்பது எந்தத் தலம் ?

திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள திருப்புடைமருதூர்.

98. 'பொன்னார் திருவடிக் கொன்றுண்டு விண்ணப்பம்' என்று தொடங்கும் அப்பர் பெருமானின் தேவாரப் பாடலில் வரும் 'தூங்கானை மாடம்' என்ற சிவத்தலம் தமிழ் நாட்டில் எங்கே உள்ளது ?

தென்னார்க்காடு மாவட்டத்தில் பெண்ணாகடம் என்ற ஊரில் உள்ளது. அந்தப்பாசுரத்தில், 'துன்னார் கடைந்தையுள் தூங்கானை மாடச் சுடர்க்கொழுந்தே' என்பதில் வரும் கடந்தை என்பது பெண்ணாகடத்தைக் குறிப்பது.

99. திருப்பனந்தாளில் உள்ள ஆலயத்துக்குத் தாடகையீச்சரம் என்ற பெயர் இருப்பதாகத் தேவாரத்திலிருந்து தெரிய வருகிறது. அந்தத் தாடகை இராமாயணத்தில் வரும் தாடகையா ?

திருப்பனந்தாள் திருக்கோயிலில் பூசை செய்துவந்த சிவாசாரியாருடைய மகள், அவள் பூசை பண்ணியபோது அவள் போட்ட மாலையை ஏற்றுக்கொள்ளச் சிவலிங்கப் பெருமான் வளைந்தார். அப்படி வளைந்த பெருமானைக் குங்கிலியக் கலயநாயனுர் நிமிர்த்திஞர்.

100. திருவண்ணுமலை என்ற பெயர் இறைவனை யாரும் அணுக முடியாத மலை என்ற காரணத்தால் வந்ததா ?

அண்ணு என்பது அந்த ஊரின் பெயர். அதில் உள்ள மலை அண்ணுமலை. கல்வெட்டுக்களில் இந்தப் பெயர் இருக்கிறது. அண்ணு என்பதும் ஏரி என்பதும் இணைந்து அத்து என்னும் சாரியை பெற்றுப் புணர்ந்து அண்ணுத்தேரி என்று ஆனதாகத் தொல்காப்பிய உரையாசிரியர்கள் எழுதியிருக்கிறுர்கள்; அதனுல் அண்ணு என்பது இயல்பான பெயர் என்பதை உணரலாம்.

101. தில்லை வளாகத்தில் எழுந்தருளியுள்ள இராமபிரானைப்பற்றிய நூல் ஏதேனும் உண்டா ?

அமரர் பின்னத்தூர் நாராயணசாமி ஐயர் 'வீர கோதண்டராமசுவாமி உலா' என்ற நூலை இயற்றி அச்சிட்டிருக்கிறுர்.

102. மயிலை அந்தாதி என்ற நூல் எந்தத் தலத்தைப் பற்றியது ? யார் இயற்றியிருக்கிறுர்கள் ?

மாயூரத்துக்கு மயிலை என்ற பெயர் உண்டு. அந்தத் தலத்தில் எழுந்தருளியுள்ள மாயூரநாதர்மீது இராமையர் என்பவர் இயற்றிய நூல் அது. மகாமகோபாத்தியாய டாக்டர் ஐயரவர்கள் அந்த நூலை அச்சிட்டிருக்கிறுர்கள்.

103. திருவாவடுதுறை மடத்தை நிறுவியவர் யார் ?

நமசிவாய மூர்த்திகள்.

104. பாடல் பெற்ற தலம், புராணத் தலம் என்ற இரண்டுக்கும் வேறுபாடு என்ன ?

மூவருடைய தேவாரப் பாடல் பெற்ற சிவத்தலத்தைப் பாடல் பெற்ற தலம் என்பார்கள். அப்படியின்றித் தல புராணத்தைமட்டும் பெற்றதைப் புராணத் தலம் என்பார்கள்.

105. மதுரைக்கு நான்மாடக்கூடல் என்று பெயர்வரக் காரணம் என்ன ?

முன் ஒரு காலத்தில் பெருமழை பெய்ய, அதனுல் விளையும் தீங்கினின்றும் மதுரையைக் காக்கும் பொருட்டு ஆலவாய் இறைவன் தன் சடாபாரத்திலுள்ள நான்கு மேகங்களை விட்டு, நான்கு மாடங்களாகக் கூடி நின்று பெய்யும் மழை யாவும் நகருக்குள் விழாதபடி செய்தருளிய மையால் அப்பெயர் வந்ததென்று திருவிளையாடற் புராணம் கூறுகிறது.

106. சோபானம் என்பது என்ன ? நால்வகைச் சோபானம் என்று குறிக்கும் பொருள்கள் எவை ?

சோபானம் என்பதற்குப் படி என்பது பொருள். இறைவனை அடைவதற்கு நான்கு வகைப் படிகள் அல்லது சோபானங்கள் உண்டு. சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பன அவை.

107. சைனர்களுக்கும் ஆகமம் உண்டு என்கிருர்களே! அவை யாவை ?

இரண்டு ஆகமங்கள் உண்டு; அவை அங்காகமம் பூர்வாகமம் என்பவை.

108. இரண்டு தலங்கள் திருக்காட்டுப் பள்ளி என்ற பெயருடன் இருப்பதாகச் சொல்கிருர்கள். அவை எங்கே இருக்கின்றன ?

கீழைத் திருக்காட்டுப்பள்ளி, மேலைத் திருக்காட்டுப்பள்ளி என்று இரு வேறு சிவத் தலங்கள் உண்டு. இரண்டும் பாடல் பெற்றவை. திருவெண்காட்டுக்கு மேற்கே ஒரு மைல் தூரத்தில் உள்ளது கீழைத் திருக்காட்டுப்பள்ளி. பூதலூர் ரெயில்வே ஸ்டேஷனுக்கு வடக்கே ஐந்து மைல் தூரத்தில் உள்ளது மேலைத் திருக்காட்டுப் பள்ளி. இதை இப்போது திருக்காட்டுப்பள்ளி என்றே வழங்குகிறார்கள்.

109. வைப்புத் தலம் என்பது என்ன ?

தேவாரத்தில் தனியே பதிகங்கள் உள்ள தலங்களைப் பாடல் பெற்ற தலங்கள் என்பார்கள். தனியே பதிகம் இல்லாமல் பாடல்களின் இடையே குறிக்கப்பெறும் தலங்களை வைப்புத் தலங்கள் என்பர். பாடலினிடையே வைத்துப் பாடியதால் வைப்புத் தலம் என்ற பெயர் உண்டாயிற்று.

110. 'நாதவிந்து கலாதீ நமோ நம' என்ற திருப்புகழில், 'ராஜகம்பீர நாடாளும் நாயக' என்று வருகிறது. அந்த நாடு எது ? ஏன் அந்தப் பெயர் வந்தது ?

வயலூர் இருக்கும் நாட்டுக்குரிய பழைய பெயர் அது. ராஜ கம்பீரன் என்பது இரண்டாம் இராசராச சோழன் பெயர். அவன் காலத்தில் அந்தப் பெயர் ஏற்பட்டது. வயலூருக்குப் போகும் வழியில் உள்ள கற்குடிக்கு இராச கம்பீர வள நாட்டு மலை என்று ஒரு பெயர் வழங்கியது.

111. இராமகிருஷ்ண பரமஹம்சர் வழிபட்ட தட்சிணேசுவரக் காளியின் பெயர் பவதாரிணி என்று நூல்களில் படித்திருக்கிறேன். அதற்குப் பொருள் என்ன ?

பவம் என்பது பிறப்பு. தாரிணி - கடக்கச் செய்பவள். பிறவிப் பெருங்கடலைக் கடக்கச் செய்கிறவள் என்பது அந்தத் திருநாமத்தின் பொருள்.

112. சப்தகோடி மகாமந்திரம் என்றால் ஏழு கோடி மந்திரங்கள் என்று பொருளா?

கோடி என்பது முடிவு என்ற பொருளை உடைய சொல். தென்கோடி, வடகோடி என்று சொல்வது போல, ஏழு வகையாக முடியும் மந்திரங்களைச் சப்தகோடி மகாமந்திரங்கள் என்பர். அவை நம, சுவாஹா, சுவதா, வஷட், வௌஷட், ஹூம், படட் என்பன.

113. குருலிங்க சங்கமம் என்பன யாவை?

குரு என்பது ஆசாரியனை; லிங்கம் என்பது இறைவனை, சங்கமம் என்பது தொண்டர்களை.

114. தரிசிக்க, பிறக்க, இறக்க, நினைக்க முத்தி தரும் தலங்கள் எவை?

தரிசிக்க முத்தி தருவது தில்லையாகிய சிதம்பரம்; பிறக்க முத்தி தருவது திருவாரூர்; இறக்க முத்தி தருவது காசி; நினைக்க முத்தி தருவது திருவண்ணாமலை.

115. சப்த விடங்கத்தலங்கள் எவை? அங்குள்ள தியாகராச மூர்த்திகளுக்குத் தனித்தனிப் பேருண்டா?

(1) திருவாரூரில் வீதி விடங்கர் எழுந்தருளிக்கிறார்; அவருடைய நடனம் அசபா நடனம். (2) திருநள்ளாறு என்னும் தலத்தில் நகவிடங்கர் எழுந்தருளியிருக்கிறார்; அவருடைய நடனம் உன்மத்த நடனம். (3) திருநாகைக் காரோணத்தில் (நாகபட்டினம்) சுந்தர விடங்கர்; பாராவார தரங்க நடனம். (4) திருக்காறாயிலில் (திருக்காறை வாசல்) ஆதிவிடங்கர்; அவர் நடனம் குக்குட நடனம். (5) திருக்கோளிலி (திருக்குவளை)யில் அவனி விடங்கர், பிருங்க நடனம் ஆடுகிறார். (6) திருவாய்மூரில் நீலவிடங்கர், கமல நடனம் ஆடுகிறார். (7) திருமறைக் காட்டில் (வேதாரணியம்) புவனிவிடங்கர், ஹம்ஸபாத நடனம் ஆடுகிறார்.

116. தட்சிண கைலாசம் என்று சொல்லப்பெறும் தலங்கள் எவை ?

ஆந்திர நாட்டில் உள்ள திருக்காளத்தியும், தமிழ் நாட்டிலுள்ள திரிசிராப்பள்ளியும், இலங்கையிலுள்ள திருக் கோணமலையும். திருவையாற்றில் திருநாவுக்கரசர் திருக் கைலாய தரிசனம் செய்தமையின் அங்குள்ள தனிக் கோயிலுக்குத் தட்சிண கைலாசம் என்ற பெயர் உண்டு.

117. காரோணம் என்ற பெயருடைய தலங்கள் எவை ? காரோணம் என்ற சொல்லின் பொருள் என்ன ?

காயாரோகணம் என்பதே காரோணம் ஆயிற்று. பிறர் காயத்தை (உடலை)ச் சுமத்தலால் அப் பெயர் வந்தது. கச்சிக் காரோணம், குடந்தைக் காரோணம், நாகைக் காரோணம் என மூன்று காரோணத் தலங்கள் உண்டு.

118. குரங்கு பூசித்த தலங்கள் எவை ?

குரக்குக்கா, குரங்கணில் முட்டம், தென் குரங்காடு துறை (ஆடுதுறை), வடகுரங்காடு துறை (ஆடுதுறைப் பெருமாள் கோயில்.)

119. ஆடுதுறை, திருவாடுதுறை இரண்டும் ஒன்று ?

ஆடுதுறை என்று வழங்கும் தலம், தென் குரங்காடு துறை என்று தேவாரத்தில் வருவது. திருவாடுதுறை என்பது திருவாவடுதுறை என்ற பெயரின் சிதைவு. அது வேறு தலம்.

120. அக்கமணி என்று ருத்திராட்சத்தைக் கூறு வதற்குக் காரணம் என்ன ?

அட்சமணி என்பதே அக்கமணி ஆயிற்று. சிவபெரு மானுடைய கண்ணிலிருந்து துளித்த நீர் ருத்திராட்ச மாயிற்று. அட்சம் - கண். ருத்திரனது கண்ணிலிருந்து

தோன்றியதாதலின் ருத்திராட்சம் எனப் பெயர் பெற்றது. அதையே அட்சமணி என்பர்.

121. உம்மாச்சி என்று குழந்தைப் பேச்சில் கடவுளைக் குறிக்கிறார்கள். அது எப்படி வந்தது ?

உமாமகேசுவரன் என்பதே அவ்வாறு வந்ததென்று காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகள் அருளியிருக்கிறார்.

122. குரோத பட்டாரகர் என்பது யாருக்குப் பெயர்?

துருவாச முனிவருடைய பெயர். ஸ்ரீ வித்தியா உபாசகர்கள் அப்படிக் குறிப்பார்கள்.

123. கறுப்பன் வெள்ளையன், காத்தான், தீத்தான் — இந்தப் பெயர்கள் தெய்வப் பெயர்களா ? அப்படியானால் எந்த எந்தத் தெய்வத்தைக் குறிக்கும் ?

கறுப்பன், — கிருஷ்ணன்; வெள்ளையன் — வெள்ளை நிறமுடைய பலராமர்; காத்தான்—காப்புக் கடவுளாகிய திருமால்; தீத்தான்—திரிபுரத்தையும் காமனையும் எரித்தவனாகிய சிவபெருமான்.

124. தகராகாசம் என்பது என்ன ?

இருதயத்தின் இடையிலுள்ள சூட்சுமமான சிறிய வெளி. இதைக் குகையென்றும் கூறுவர்; தகராலயம் என்றும் சொல்வதுண்டு.

125. முருகனுக்கு எந்தப் பக்கத்தில் வள்ளி நாயகி எழுந்தருளியிருக்கிறாள் ?

வலப்பக்கத்தில்.

பல்வகை

1. கற்கிமுகி என்பதன் பொருள் என்ன? அந்தப் பெண்ணைப்பற்றிய செய்திகள் எங்கே வருகின்றன ?

கற்கி என்பது குதிரையின் பெயர். குதிரை முகமுடைய பெண் பூதத்துக்குப் பெயர் அது. திருப்பரங்குன்றத்தில் குகையில் நக்கீரரோடு ஆயிரம் புலவர்களை அந்தப் பூதம் அடைத்ததாகவும் நக்கீரர் திருமுருகாற்றுப் படையைப் பாடி முருகனை வருவித்து அந்தப் பூதத்தை அழிக்கச் செய்த தாகவும் ஒரு வரலாறு உண்டு. திருப்பரங்குன்றப் புராணம், சீகாளத்திப் புராணம் முதலிய நூல்களில் இந்தக் கதை வரு கிறது. 'கற்கிமுகி யைப்பொருத ராவுத்த னவனும்' என்று திருவகுப்பில் அருணகிரி நாதரும் இதைச் சொல்கிறார்.

2. மயன் அசுரர்களின் தச்சன்; தேவத் தச்சன் யார்?

விசுவகர்மா.

3. இசைக் கருவிகள் ஐந்து இன்னவை என்று உதாரணங்கள் தந்து விளக்க வேண்டுகிறேன்.

(1) மிடற்றுக் கருவி - பாடும் தொண்டை; இது வாய்ப் பாட்டில் பயன்படுகிறது (2) தோல் கருவி - பறை, முரசு, கஞ்சிரா முதலியன. (3) தொளைக்கருவி — புல்லாங்குழல், நாகசுரம் (4) நரம்புக் கருவி — வீணை, வயலின். (5) கஞ்சக் கருவி — தாளம், மோர்சிங் முதலியன.

4, அத்தான் என்பது எந்த உறவின் முறையைக் குறிக்கிறது ?

அத்தை மகன் என்பது அத்தான் என்று வந்திருக்க வேண்டும். அதிலிருந்து மணம் செய்துகொள்ளும் உரிமை

யுள்ள மாமன் மகனுக்கும், அக்காள் கணவனுக்கும் வழங்குகிறது.

5. வடக்கு இருத்தல் என்பது என்ன ?

தம் உயிரைப்போக்கிக்கொள்ளவேண்டுவோர் வடக்குத் திசையில் சென்று உணவு முதலியவற்றை நீத்து இருத்தல்.

6. மணி மந்திர ஒளஷதம் என்பவை யாவை ?

விஷத்தைப் போக்கும் பரிகாரங்கள் மூன்று. விஷம் போக்கும் கல் உண்டு; அதுவே மணி. மந்திரத்தாலும் மருந்தாலும் போக்குவதுண்டு; அவையே மற்ற இரண்டும்.

7. புகழ்பெற்ற நான்கு வகைப் பொன் எவை ?

சாதரூபம், கிளிச்சிறை, ஆடகம், சாம்பூநதம் என்பவை. 'சாத ரூபம் கிளிச்சிறை யாடகம் சாம்பூ நதமென் றோங்கிய கொள்கையிற், பொலந்தெரி மாக்கள்' (ஊர்காண் காதை 202-3) என்பது சிலப்பதிகாரம்.

8. ஒரு புத்தகத்தில், 'புலியின் வாயில் விழுந்து ஓர் அன்பு பழுத்த பெரியவர் இறந்தார்' என்றும், 'இன்றும் அமர வாழ்வு வாழ்கிறார்' என்றும் குறிப்பிடப் பெற்றுள்ளது. அவர் யார் ?

புத்தர் தம் உடம்பைப் புலிக்கு இரையாக அளித்தார் என்று ஒரு வரலாறு உண்டு. நீங்கள் சுட்டும் புத்தகத்தின் ஆசிரியர் புத்தரையே எண்ணி எழுதியிருக்கிறார் என்று தோன்றுகிறது. 'வன்பசிக் கடும்புலிக் குடம்பளித்து' என்பது ஒரு பழம்பாடல்.

9. முக்குலத்தோர் என்பவர்கள் யார் ?

கள்ளர், மறவர், அகம்படியர் என்னும் மூன்று வகுப்பினர்.

10. கரிகாலன், தன் காலத்தில் யவன நாட்டில் வாழ்ந்து

வந்த இப்பலாஸ் என்பவன் வளி தொழில் ஆளும் திறத்தைக் கண்டு பயன் கொண்டானுமே; உண்மையா ?

கரிகாற் சோழனை வெண்ணிக் குயத்தியார் பாடும் பாட்டில், 'நளியிரு முந்நீர் நாவாய் ஓட்டி, வளிதொழில் ஆண்ட உரவோன் மருக' (புறம், 66) என்கிறார். 'நீர்செறிந்த பெரிய கடலின்கண்ணே, மரக்கலத்தை ஓட்டிப் போர் செய்தற்குக் காற்றின்றி நாவாய் ஓடாதாக. ஆண்டு வளிச் செல்வனை அழைத்து ஏவல் கொண்ட வலியோன் மரபின் உள்ளானே' என்று பழைய உரைகாரர் எழுதுகிறார். இதனால் கரிகாலனுக்கு முன் இருந்த சோழன் ஒருவன் தன் விருப்பம் போல் காற்றை இயங்கும்படி செய்தான் என்ற செய்தி புலனாகிறது.

11. அறுபத்து நான்கு கலைகள் யாவை ?

1. ஆடல், 2. பாடல், 3. இசைக் கருவி வாசித்தல், 4. வீணைமரு வாத்தியம், 5. ஓவியம், 6. கவிதை, 7. நிகண்டு, 8. யாப்பு, 9. அலங்கார சாஸ்திரம், 10. நாடகம் ஆடுதல், 11. கொடுத்த சமஸ்யையைப் பூர்த்தி செய்து பாடுதல், 12, ஒரு செய்யுளின் ஈற்றை முதலாக உடைய செய்யுளைச் சொல்லுதல், 13. விசித்திரமான செய்யுட்களைச் சொல்லுதல், 14. நெருடான பாடல்களைப் பாடுதல், 15. மறை பொருளாகச் செய்யுள் செய்தல், 16 ஏமாற்றுவதற்கான செய்யுள், 17. பல நாட்டு மொழிகள் கற்றல், 18. கீழ் மக்களின் மொழிகளைத் தெரிந்து கொள்ளுதல், 19. நூல்களை இனிமையாகப் படித்தல், 20. முன் படிக்காத நூலாயினும் ஒருவர் படிக்கும்போது உடன் படித்தல், 21. ஒருவர் கூறும் குறிப்புகளைக் கொண்டு அவர் மனத்திலுள்ள செய்யுளைக் கூறுதல், 22. மனப்பாடம், 23. மனையடி சாஸ்திரம், 24. தச்சு வேலை, 25. தட்பவெப்ப நிலைக்கு ஏற்பத் தரையை மாற்றியமைத்தல், 26. தோட்டக்கலை, 27. அரிசி, பூ முதலியவற்றால் கோலம் போடுதல், 28 தின்பண்டங்கள் செய்தல் 29. பாண வகைகளைச் செய்தல், 30. தையல், நெசவு, 31. பிரம்பு வேலை, 32. பூ வேலை, 33. மாலை கட்டுதல், 34. தலைக் கொண்டை

முதலியன அமைத்தல், 35. உடையலங்காரம், 36 காதணிகள், 37. வாசனைப் பூச்சு, 38. நகைகள், 39. உடம்பு பிடித்தல், தலைமயிரைக் கோதுதல், 40. உதட்டுக்கு வண்ணமும் முகம் முதலியவற்றுக்கு நறுமணப் பொடிகளும் பூசுதல், 41. இலை களில் குறிப்புத் தெரியும்படி கத்தரித்தல் 42. ஆண்களும் பெண்களும் நீராடும்போது நீரில் ஒலியெழுப்புதல், 43. நீரில் இசைக் கருவிகளைப்போல் ஒலி உண்டாக்குதல், 44. படுக்கை தயாரித்தல், 45. இன்புறுவதற்கு ஏற்ற அமைப்புச் செய்தல், 46 காதற் போட்டிக் கலை, 47. காதற் போர், 48. உலோகம், ரத்தினம் முதலியவற்றை மதித்தறிதல், 49. இந்திரஜாலம், 50. கைகளில் மறைத்து வித்தையாடுதல், 51 துணியைக் கொண்டு மறைத்தல், 52. இரசவாதம், 53. இரத்தினம் இருக்குமிடத்தைக் கண்டுபிடித்தல், 54 சகுன அறிவு, 55. யந்திரங்களைச் செய்தல், 56 கிளி, மைனா முதலிய வற்றுக்குப் பேச்சுக் கற்பித்தல் 57. சூதாட்டம், 58 சொக் கட்டான், 59 ஆட்டுப் போர், கோழிப் போர், 60 பொம்மை களைக் கொண்டு குழந்தைகளுக்கு விளையாட்டுக் காட்டுவது, 61. கயிற்றைக் கொண்டு விளையாடுவது, 62 நன்னடத்தைக் குரிய பயிற்சிகள், 63. யானை ஏற்றம், குதிரை ஏற்றம், 64. அஸ்திர சஸ்திரப் பழக்கம், வேட்டை.

12 திரிகடுகம், திரிபலை என்னும் இரண்டும் ஒன்று ?

வெவ்வேறு சுக்கு, மிளகு, திப்பிலி என்ற மூன்றும் திரிகடுகம்; கடுக்காய், தான்றிக்காய், நெல்லிக்காய் என்பன திரிபலை.

13. தில்லை என்பது ஒரு மூலிகை என்கிறார்கள்; அது சரியா ?

தில்லை என்பது கள்ளி வகையில் ஒன்று; 'தில்லையென்பது காட்டிலுண்டு கேட்டதில்லையா?' என்று நந்தனார் சரித்திரத் தில் வருகிறது

14. மன்மதனுடைய ஐந்து அம்புகள் எவை ?

தாமரை, அசோகம்பூ, மாம்பூ, முல்லை, நீலோற்பலம் என்பவை.

15. தக்ஷிண பினாகினி என்பது எது ?

தென்பெண்ணையாறு.

16. பஞ்சவர்ணம் என்கிறார்கள்; ஏழு வர்ணம் என்கிறார்கள். எது சரி ?

பழங்காலத்தில் சிறப்பான வர்ணங்கள் ஐந்து என்று கொண்டார்கள். அதனால் பஞ்ச வர்ணம் என்று வழங்கினார்கள். வெள்ளை, கறுப்பு, சிவப்பு, மஞ்சள், பச்சை என்பவை அவை. விஞ்ஞானிகள் வானவில்லில் உள்ள ஏழு வண்ணங்களைச் சுட்டிக் காட்டுகிறார்கள். அவை ஏழும் ஒன்றினால் வெள்ளையாகிவிடும். அவை ஏழாவன: ஊதா, நீலி, நீலம், பச்சை, மஞ்சள், ஆரஞ்சு, சிவப்பு.

17. ராகங்கள் மொத்தம் எத்தனை ?

மேளகர்த்தா ராகங்கள் எழுபத்திரண்டு. அவை சம்பூர்ண ராகங்கள். அவற்றிலிருந்து பிறந்த ஜன்ய ராகங்கள் பல.

18. கிறித்தவர் மறைநூலான பைபிளுக்குத் தமிழில் விவிலிய நூல் என்ற பெயர் எப்படி வந்தது ?

பைபிள் என்பதே விவிலியம் எனச் சிதைந்தது. கிரேக்க மொழியில் பிபிளியோ என்பர் அதிலிருந்து வந்ததாகவும் கொள்ளலாம்.

19. சாதக பட்சி என்பது எது ?

மழை நீரை உண்ணும் பறவை அது. வானம்பாடி என்று தமிழில் வழங்கும். 'தற்பாடிய தளியுணவிற் புள்' என்று பத்துப்பாட்டில் வருகிறது.

20. ராகம், ஸ்வரம், பண், இசை—இவை தனித்தனியா ?

ராகம் என்பதும் பண் என்பதும் ஒன்று. மற்றவை வெவ்வேறு. ஆரோகண அவரோகண ஸ்வரங்களால் தனக்கென ஓர் அமைப்பை உடையது ராகம் அல்லது பண் என்று பொதுவாகச் சொன்னாலும், இசையிலக்கணப்படி மேளகர்த்தாவாகிய ராகங்களையே பண் என்று சொல்லவேண்டும். அவை ஏழு சுவரங்களும் உடையவை. ஜன்ய ராகங்களை, அதாவது ஏழு ஸ்வரங்களிற் குறைந்தவற்றைத் திறம் என்பது தமிழ் வழக்கு. ஸ்வரம் என்பது தமிழில் நரம்பு என்று வழங்கும். ஷட்ஜம் முதலிய ஏழினைத் தமிழில் குரல் முதலிய ஏழாகச் சொல்வர். இசை என்பது சங்கீதத்தின் பொதுப் பெயர். சில சமயங்களில் ஒன்றன் பெயர் மற்றொன்றுக்கு ஆகுபெயராய் வரும். ஏழிசை என்னும் போது இசை என்பது இசையின் உறுப்பாகிய நரம்புக்கு முதலாகு பெயராய் வந்தது.

21. ரௌரவாதி நரகம் என்கிறார்கள். ரௌரவாதி என்பதற்குப் பொருள் என்ன ?

ரௌரவம் என்றால் பயங்கரமானது என்று பொருள். மிகக்கொடிய நகரமாதலால் இதை முதலில் வைத்துஎண்ணினார்கள். 'இது வேதனைகளுக்குத் தலைவன்; துயரங்களுக்குத் தந்தை' என்று மார்க்கண்டேய புராணம் வருணிக்கிறது. 'ரௌரவம் முதலிய நரகம்' என்னும் பொருளில் ரௌரவாதி நரகம் என்று சொல்கிறார்கள்.

22. நவலோகம் என்பவை எவை ?

பொன், இரும்பு, செம்பு, ஈயம், வெள்ளி, பித்தளை, தரா, துத்த நாகம், வெண்கலம் என்பவை.

23. துலாபாரம் என்பது என்ன ?

ஒருவரைத் துலையாகிய தராசில் ஏற்றி அவர் நிறைக்குப் பொன்னையோ பிற மதிப்புள்ள பண்டத்தையோ இட்டு நிறுத்து அந்தப் பொருளைத் தானம் செய்வது.

24. சங்கநிதி, பதுமநிதி என்பவை யாவை ?

நிதி வகைகளில் சங்கநிதி, பத்மநிதி என்பவை இரண்டு. சங்கைப் போன்ற வடிவுடைய சங்கநிதி வேண்டிய செல்வத்தைத் தரும். தாமரை போன்ற உருவமுடையது பத்மநிதி. சங்கம், பத்மம் என்ற இரண்டும் மிகப் பெரிய எண்ணிக்கையைக் குறிக்கும் சொற்கள்.

25. மும்முரசு என்பவை யாவை ?

மண முரசு, கொடை முரசு, நியாய முரசு என்பவை. நியாய முரசுக்குப் பதிலாகப் வெற்றி முரசையும் சொல்வதுண்டு.

26. பதினெண் சித்தர்கள் யார் யார் ?

திருமூலர், இராமதேவர், கும்பமுனி, இடைக்காடர், தன்வந்திரி, வால்மீகி, கமலமுனி, போகநாதர், மச்சமுனி, கொங்கணர், பதஞ்சலி, நந்திதேவர், போதகுரு, பாம்பாட்டி, சட்டைமுனி, சுத்தானந்த தேவர், குதம்பைச் சித்தர், கோரக்கர்.

27. இம்மி என்பதன் அளவு என்ன ?

10,75,200–இல் ஒரு பங்கு.

28. சந்திரனது ஒளியை உண்டு வாழும் பறவை உண்டா ? எப்பகுதியில் இருக்கிறது ?

சகோரம் என்னும் பறவை நிலாவை உண்டு வாழ்வது என்று இலக்கியங்கள் கூறுகின்றன. ஆனால் இது எந்தப் பறவை என்று இனம் காண முடியவில்லை.

29. ஓரறிவு, ஈரறிவு என்று வரும் அறிவுகள் எத்தனை வகைப்படும் ? என்ன என்ன ஜீவராசிகள் எந்த எந்த அறிவு வகையைச் சேர்ந்தவை ?

மரஞ்செடி கொடிகள் பரிச அறிவைமட்டும் உடைய ஓரறிவுயிர்கள். இப்பி, சங்கு முதலியவை பரிச அறிவோடு சுவையறிவையும் உடைய ஈரறிவுயிர்கள். கறையான், எறும்பு போன்றவை மேலே சொன்னவற்றோடு மணத்தை அறியும் அறிவும் சேர்ந்த மூன்றறிவை உடையவை. வண்டு

முதலியவை பார்வையோடு சேர்ந்து நாலறிவு உடையவை. மற்ற விலங்குகள், பறவைகள், மனிதர்கள் செவியுணர்வோடு ஐந்தறிவு உடைய உயிர்கள். மனிதன் பகுத்தறியும் ஆறுவது அறிவையும் உடையவன்.

30. பிறப்பேழாவது:
'ஊர்வபதி னொன்றும் ஒன்பது மானுடம்
நீர்பறவை நாற்காலோர் பப்பத்துச்-சீரிய
பந்தமாந் தேவர் பதினா லயன்படைத்த
அந்தமில்சீர்த் தாவரம்நா லைந்து'
என்று பரிமேலழகர் கூறுவதன் பொருள் என்ன ?

ஜீவராசிகள் எண்பத்துநான்கு லட்சம் வகை என்பது ஒரு கணக்கு. இன்ன இன்ன இனங்கள் இத்தனை இத்தனை லட்சம் என்று காட்டும் பழம்பாடலைப் பரிமேலழகர் மேற்கோளாகக் காட்டுகிறார். அதன் பொருள்: ஊர்வன பதினொரு லட்சம்; ஒன்பது லட்சம் வகை மானிடர்; நீர் வாழ்வன பத்து லட்சம்; பறவையினம் பத்து லட்சம்; நாற்காற் பிராணிகள் பத்து லட்சம்; தேவர் வகை பதினான்கு லட்சம்; தாவர வகை இருபது லட்சம். ஆக எண்பத்துநான்கு லட்சம் ஜீவராசிகளின் பேதங்கள்.

31. காவிரி ஜீவநதியா ?

ஆம். எப்போதும் வற்றாமல் ஓடும் நதியை ஜீவநதி என்று சொல்வார்கள். முகத்துவாரத்துக்கு அருகில் உள்ள பகுதிகளில் நீர் இல்லாமல் இருக்கலாம். ஆனால் மைசூர், கொங்குநாடு ஆகிய இடங்களில் எப்போதும் காவேரி வற்றுவதில்லை. 'வற்றாத காவேரி', 'பொய்யாத பொன்னி நதி' என்று புலவர்கள் பாடியிருக்கிறார்கள்.

32. இலங்கையில் வாழும் மக்களில் ஒரு சாராரைச் சோனகர் என்கின்றனர்; அவர்கள் யார் ? ஒல்லாந்தர் என்பது யாரைக் குறிக்கிறது ?

இலங்கையில் முஸ்லிம் மக்களைச் சோனகர் என்று கூறுகின்றனர். யவன தேசத்தாரை அப் பெயரால் வழங்கும்

வழக்கத்தைத் தமிழ் நூல்களில் காணலாம். சோனகம் என்பது ஐம்பத்தாறு தேசங்களில் ஒன்று. ஹாலந்து தேசத்தினராகிய டச்சுக்காரரையே ஒல்லாந்தர் என்று கூறுவர்.

33. கல்யாணச் சடங்குகளில் அம்மி மிதிக்கும் பழக்கம் எதற்காக வந்தது ?

'அம்மி மிதித்து, அருந்ததி பார்த்து' என்று சேர்த்துச் சொல்வது வழக்கம் அம்மி, கல்லான அகலிகையைக் குறிக்குமென்பர். அம்மி மிதித்து அருந்ததி பார்ப்பது, அகலிகையைப்போல் இராமல் அருந்ததியைப் போல் இருக்க வேண்டும் என்று மணமகளை உணரச் செய்வதற்கே. அம்மி மிதிக்கும் வேத மந்திரத்தில், 'வாழ்வில் எத்தனை இடையூறு கள் வந்தாலும் இந்தக் கல்லைப் போல் நீ உறுதியாக இருக்க வேண்டும். 'அச்மேவ த்வம் ஸ்திராபவ'' என்று மணமகளுக்குச் சொல்லியிருக்கிறது.

34. 'பதிமேகாதசங்க்ருதி' என்று வாழ்த்துகிறார்களே; அதன் பொருள் என்ன ?

'தசாஸ்யாம் புத்ராநாம்தேஹி பதிமேகாதசங்க்ருதி' என்பது இந்திரனைப் பார்த்து மணமகன் வேண்டும் மந்திரம். 'இவளைப் பத்துப் புத்திரர்களை உடையவளாகச் செய்து, அப்பால் இவள் என்னைப் பதினோராவது குழந்தையாகப் பாதுகாக்கும்படி செய்' என்பது பொருள்.

35. மஞ்சளை மங்கலப் பொருளாகக் கருதுகிறோம். ஆனால் மஞ்சளை உரைத்துப் பெண்கள் கால்களில் தடவிக் கொள்கிறார்களே; அதனால் அதன் புனிதம் கெடாதா ?

மஞ்சள் மங்கலப் பொருள் என்பது உண்மை. அதை உடம்பு முழுவதும் தேய்த்துக்கொள்வது வழக்கம் குதிகாலில் தேய்ப்பதனால் புனிதம் கெடாது. புனித நீராகிய கங்கையில் காலைக் கழுவுவது தவறாகாது. அது போன்றதே இது.

சொற்பொருள் அகராதி

(எண்—பக்க எண்)